பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 68

ஞாயிற்றுக்கிழமை
02 பெப்ரவரி 2025

தை 20 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056



கிளிநொச்சியில்

## ஆமையுடன் ஒருவர் கைது!

கிளிநொச்சி, பெப். 2
கிளிநொச்சி நாச்சிக்குடா கடற்பகுதியில், கடலாமையை உடமையில் வைத்திருந்த நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் 35 வயதுடையவர்

15

## மாவைக்கு இன்று இறுதிக் கிரியை!

யாழ்ப்பாணம், பெப். 2
தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் மாவை சேனாதிராஜாவின் புகழுடலுக்கான இறுதிக் கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் முற்பகல் 10 மணி வரை அவரது இல்லத்தில் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து பிற்பகல் ஒரு மணி வரை அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றுப் பின்னர் அவரது புகழுடல் கீரிமலை இந்து

03



## மாவைக்கு நாமல் நேரில் அஞ்சலிப்பு

யாழ்ப்பாணம், பெப். 2
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவர் மாவை சேனாதிராஜாவின் புகழுடலுக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர்

15



# அரசாங்கத்துக்கு எதிராக எதிர்க்கட்சிகள் சூழ்ச்சி!

அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு

**கொழும்பு, பெப்ரவரி 2**

**மக்களின் அரசாங்கம் உருவாக்கப்பட்டுள்ள நிலையில், எதிரிகள் ஓரணியில் இணைந்துள்ளனர். எனவே, எதிரிகளிடம் இருந்து அரசாங்கத்தைப் பாதுகாக்கவேண்டும் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

15

## அண்ணன் மாவையின் மறைவு நிகர்செய்யமுடியாத இழப்பே!

முன்னாள் எம்.பி. சரவணபவன் இரங்கல்

யாழ்ப்பாணம், பெப். 2
தமிழ்த்தேசிய வரலாற்றிலும், சுதந்திர இலங்கையின் வரலாற்றிலும் அண்ணன் மாவை சேனாதிராஜாவின் மறைவு நிகர் செய்யமுடியாத பேரிழப்பு என்று நாடாளு

15

## கடல்வளங்களைக் காப்பதில் எந்த விட்டுக்கொடுப்புமில்லை

அமைச்சர் சந்திரசேகரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 2
நாட்டின் கடல்வளத்தைப் பாதுகாப்பதில் மிகவும் அக்கறையுடன் உள்ளோம். இந்த விடயத்தில் விட்டுக்கொடுப்புக்கு இடமில்லை என்று அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.
யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே

15

## எடைகுறைந்த சிசுக்கள்: பிறப்பு வீதம் அதிகரிப்பு

15

வீட்டுத்திட்டத்தில் வழங்கப்பட்ட

## 3,827 வீடுகள் யாழில் முழுமை பெறவில்லை

யாழ்ப்பாணம், பெப். 2
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 3 ஆயிரத்து 827 வீடுகள் முழுமை பெறாத நிலையில் உள்ளன என்று ஜனாதிபதி அநுரகுமாரவிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

15

## சுதந்திரதினம் எமக்கில்லை!

காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் திட்டவட்டம்!

யாழ்ப்பாணம், பெப். 2
சுதந்திரதினத்தைக் கொண்டாடக்கூடிய நிலையில் நாங்கள் இல்லை. எமது பிரச்சினைகள் இன்னமும் தீர்க்கப்படவில்லை என்று காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்றுத் தெரிவித்துள்ளனர்.

03

## மஹிந்தவை ஓரங்கட்டுவது சமஷ்டியை வழங்குவதற்கே

பொதுஜன பெரமுன கண்டுபிடிப்பு

கொழும்பு, பெப். 2
சமஷ்டி அரசியலமைப்பைக் கொண்டுவருவதற்காகவே மஹிந்தவை அரசியல் ரீதியில் ஓரங்கட்டுவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினர் தெரிவித்துள்ளனர்.
இது தொடர்பில் மஹிந்த ராஜபக்சவின் பேச்சாளரான சட்டத்தரணி மனோஜ் கமகே தெரிவித்ததாவது:
தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், மஹிந்த ராஜபக்சவையே தனது அரசியல் எதிரியாகக் கருதுகின்றது. அதனால்தான் அவரை

15



‘வழக்கமா எதிர்க்கட்சிகள் தான் சூழ்ச்சி, சதி எண்டுவினம்.இப்ப மாறி நடக்குது பாருங்கோ’

## வைரஸ் தொற்றுத் தீவிரம்: கொத்தாக மடிந்த பன்றிகள்!

கிளிநொச்சியில் சோகம்

கிளிநொச்சி, பெப். 2
கிளிநொச்சி செல்வாநகர் கிராமத்தில் பன்றிப் பண்ணையொன்றில், வைரஸ் தொற்றுக் காரணமாக சுமார் 200க்கும் மேற்பட்ட பன்றிகள் கொத்துக்

03

# சஞ்சீவி

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பை முதன்மைப்படுத்தியே மக்கள் காணிகள் விடுக்கப்படும்

## யாழ்ப்பாணத்தில் அநுர தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், பெப். 2**

**மக்களினுடைய காணிகள் குறிப்பாக தனியார் காணிகள் மீள வழங்கப்படவேண்டும். அதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. எனினும் பாதுகாப்புக்காக சுவீகரிக்கப்பட்ட காணிகள் மீளப் பாதுகாப்பு நிலைமைகள் ஆராயப்பட்டே விடுவிக்கப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

யாழ் .மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஜனாதிபதி தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், மீள்குடியேற்றம் தொடர்பில் மாவட்ட பதில் செயலாளர் ம. பிரதீபன் யாழ்.மாவட்டத்தில் இன்னமும் 1502 குடும்பங்களை சேர்ந்த 4533 பேர் மீள்குடியமர்த்தப்படாதுள்ளனர் . பலாலி வீதியின் கிழக்குப் பகுதி விடுவிக்கப்படவேண்டும். அத்துடன் பலாலி வீதி முழுமையாக விடுவிக்கப்பட வேண்டும் எனச் சுட்டிக்காட்டினார்.

இதற்குப் பதிலளிக்கும்போதே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார். (ச-125)

# வெற்றிடம் நிரப்பப்படாது இடமாற்றம் வழங்காதீர்!

## இடமாற்றப்பட்ட மருத்துவ நிபுணர் மீண்டும் யாழ்.போதனாவுக்கு

யாழ்ப்பாணம், பெப். 2

வெற்றிடங்களுக்கு மற்றொருவரை நியமிக்காது இடமாற்றங்களை வழங்கவேண்டாம் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பணித்துள்ளார்.

ஜனாதிபதி பங்கேற்புடன் நேற்றுமுன்தினம் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன்,

யாழ்.போதனா மருத்துவமனையில் பல்முக சீராக்கல் மருத்துவ நிபுணராக காயத்ரி முகுந்தன் கடமையாற்றி வந்த நிலையில் அவர் பணியிலிருந்து திடீரென இடமாற்றம் செய்யப்பட்டார். அந்த வெற்றிடத்துக்கு யாழ். போதனா மருத்துவமனைக்கு இதுவரையான காலப்பகுதியில் எவரும் நியமிக்கப்படவில்லை. இதனால் சிகிச்சைக்கு வருபவர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இதுகுறித்து அரசாங்கம் கரிசனை கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி, தொடர்ச்சியாக சிகிச்சைகளைப் பேணி வந்தவர்கள் தங்களுடைய மருத்துவர் இல்லாது போகின்ற சந்தர்ப்பத்தில் அசௌகரியங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். ஆகவே அந்த வெற்றிடத்துக்கு மற்றொருவர் நியமிக்கப்படுவரை இடமாற்றங்களைச் செய்யவேண்டாம் என அறிவுறுத்தினார். அதற்கமைய யாழ். போதனா மருத்துவமனையிலிருந்து வருடாந்த இடமாற்றம் செய்யப்பட்ட பல்முக சீராக்கல் சிகிச்சை நிபுணர் மீளவும் மருத்துவமனையில் நியமிக்கப்பட்டுள்ளார். (ச-125)

# ஆண்டுதோறும் 1000 குழந்தைகள் புற்றுநோயால் பாதிப்பு

கொழும்பு, பெப்.2

இலங்கையில் சுகாதாரத் துறையின் கூற்றுப்படி ஆண்டுதோறும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட குழந்தைகள் புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களில் 30 வீதமானோர் இரத்தப் புற்றுநோய்ப் பாதிப்புக்கும் 25 வீதமானோர் மத்திய நரம்பு மண்டலம் தொடர்பான புற்றுநோய் பாதிப்புக்கும் ஆளாகுகின்றனர்.

அத்துடன் இலங்கையில் வருடாந்தம் சுமார் 40,000 புற்றுநோயாளிகள் பதிவாகின்றனர். அவர்களின் 4 ஆயிரம் பேர் இரத்த புற்றுநோயாளிகள் உள்ளனர் எனவும் மஹரகம மருத்துவமனையின் இரத்த புற்றுநோய் தொடர்பான விசேட மருத்துவ நிபுணர் புத்திக சோமவர்தன தெரிவித்துள்ளார். (ச-இ)

# உள்ளகப் போக்குவரத்து தீவகங்களில் சீரில்லை

யாழ்ப்பாணம், பெப்.2

தீவகப் போக்குவரத்துச்சேவைகள் மற்றும் இறங்குதுறைகள் தொடர்பான பிரச்சினைகள் இன்னமும் தீர்க்கப்படவில்லை என்று நேற்றுமுன்தினம் நடைபெற்ற யாழ்.மாவட்ட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிவஞானம் சிறீதரன் ஆகியோரே இதுகுறித்துச் சுட்டிக்காட்டினர்.

எழுவைதீவு, நயினாதீவு ஆகிய பகுதிகளில் உள்ளகப் போக்குவரத்துச்சேவைகள் முற்றாக இடம்பெறாத நிலை காணப்படுகிறது. அனலைதீவு, நெடுந்தீவு ஆகிய பகுதிகளில் போக்குவரத்துச் சேவைகள் நடத்தப்படுகின்ற போதிலும் அவை பழுதடைந்தால் அவற்றைத் திருத்துவதற்கு நீண்டகாலம் எடுக்கின்றது. இதனால் தீவக மக்கள் உள்ளகப் போக்குவரத்தில் பெரும் அவலங்களைச் சந்திக்கின்றனர் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர். (ச-41-125)

# சோதனைச் சாவடிகளின் நீக்கமும் மணலகழ்வுகளைத் தூண்டுகிறது

## பொலிஸார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.2

மணல் கொள்ளையர்களைக் கைதுசெய்வதற்கு எம்மிடம் வளப்பற்றாக்குறை நிலவுவதுடன் இராணுவச் சோதனை சாவடிகள் அகற்றப்பட்டமையும் மணலகழ்வுகள் இடம்பெறுவதற்கு சாதகமாக அமைகிறது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று நடைபெற்றது.

இதன்போது தென்மராட்சி கொடிகாமம் மற்றும் கச்சாய்ப்பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுகின்றன. அதுதொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படுவதில்லை என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பொலிஸாரிடம் கேள்வியெழுப்பினார்.

இதற்குப் பதிலளிக்கும்போதே பொலிஸார், எம்மிடம் சுற்றிவளைப்பதற்கேற்ற ஆளணி மற்றும் வாகன வசதிகள் போதுமானதாக இல்லை.

மணல் கொள்ளையர்களைக் கைதுசெய்வதற்கு ஒரு பகுதியால் செல்லுகின்றபோது அவர்கள் வேறொரு பகுதியால் தப்பித்துச் செல்லுகின்ற சூழல் காணப்படுகின்றது.

அத்துடன் இராணுவச் சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டமையும் இதற்குக் காரணமாக உள்ளது என்று குறிப்பிட்டனர்.

அதற்கு பதிலளித்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பொலிஸார் சட்டத்தினை பாதுகாப்பதற்கு தயங்கக்கூடாது. தேவைப்படுகின்ற நேரத்தில் இராணுவத்தினரின் ஒத்துழைப்பையும் பெற்று சட்டவிரோத விடயங்களை முறியடிப்பதற்கு முனையவேண்டும் என்றார். (ச-125)

**சுபிரி தன சம்பத** (DLB)

| திகதி | தினம் | வெற்றி வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 01.02.2025 | சனிக்கிழமை | 0442 | G | 2 4 8 2 2 4 |

**Super Ball** (DLB)

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 01.02.2025 | சனிக்கிழமை | 2708 | X | 07 11 29 75 |

**சனிதா** (DLB)

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 01.02.2025 | சனிக்கிழமை | E | 05 17 56 67 | 4869 |

**SASIRI** (DLB)

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 01.02.2025 | சனிக்கிழமை | 0613 | 15 18 34 |

**லக்ன ராசி** (DLB)

| திகதி | தினம் | மகரம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 01.02.2025 | சனிக்கிழமை | | 11 26 27 56 | 4420 |

**KAPRUKA** (DLB)

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 01.02.2025 | சனிக்கிழமை | Y | 38 | 36 37 52 59 | 1884 |

**அத கோடிபதி** (DLB)

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 01.02.2025 | சனிக்கிழமை | K | 09 36 55 72 | 2534 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கும்பாபிஷேகம்

சுன்னாகம் தாளையடிப் பூரணை புஷ்கலை சமேத ஸ்ரீ அரிகரபுத்திர ஐயனார் தேவஸ்தான மஹாகும்பாபிஷேகம் பெருந்திரளான பக்தர்கள் புடைசூழ நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மங்கள வாத்தியங்கள் முழங்க யானைகள், குதிரைகள் பவனியாக கும்பங்கள் வலம் வந்து மகாகும்பாபிஷேக கைங்கரியம் நடைபெற்றது. (ச-25,27)

## மாவைக்கு...

மயானத்துக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டுத் தகனம் செய்யப்படுமென குடும்பத்தினர் அறிவித்துள்ளனர்.

மாவை சேனாதிராஜாவின் புகழுடலுக்கு நேற்றும் பிரமுகர்கள் பலரும் அஞ்சலி செலுத்தினார்கள். பலநூறு பொதுமக்களும் தொடர்ச்சியாக அஞ்சலி செலுத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-66)

## வைரஸ்...

கொத்தாக உயிரிழந்துள்ளன.

இது தொடர்பில் அந்தப் பண்ணையின் உரிமையாளர் தெரிவித்ததாவது:-

பல இலட்சங்கள் முதலீடுசெய்து இந்தப் பன்றிப் பண்ணையை நடத்திவந்த நிலையில், வைரஸ் தொற்றுக் காரணமாக பண்ணையில் இருந்த அனைத்துப் பன்றிகளும் உயிரிழந்துவிட்டன. இதனால், எனக்கு 75 லட்சத்துக்கும் மேல் இழப்பு ஏற்பட்டுள்ளது. அரசாங்கம் இதற்கான இழப்பீட்டைத் தந்துதவினால் மீண்டும் பன்றிப் பண்ணையை என்னால் ஆரம்பிக்க முடியும் - என்றார். (அ-ம-214-113)

## சுதந்திரதினம்...

கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

காணாமலாக்கப்பட்ட எங்களின் பிள்ளைகளை நீண்ட காலமாகத் தேடிவருகின்றோம். எனினும், எமக்கான தீர்வு எதையும் வழங்குவதற்கு அரசாங்கம் தயாராக இல்லை. மாறிமாறி ஆட்சி பீடம் ஏறும் தலைமைகளால் தொடர்ச்சியாக நாங்கள் ஏமாற்றப்பட்டுவருகின்றோம்.

போராட்டம் ஒன்றே வழி என்றாகிவிட்ட நிலையில், அரசியற் கைதிகளின் விடுதலை, காணாமலாக்கப்பட்டோர் விவகாரம், காணி விடுவிப்பு உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி எதிர்வரும் சுதந்திரதினத்தை கறுப்பு நாளாக அறிவித்து எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம். இந்தப் போராட்டத்தில் அனைத்து மக்களும் ஆதரவு வழங்கி போராட்டத்தை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்பதே எங்களின் கோரிக்கையாக இருக்கின்றது - என்றனர். (அ-ம-113)

# 323 கொள்கலன்கள் பரிசோதனையின்றி விடுவிப்பு

**யாழ்ப்பாணம், பெப்.2**

**முழுமையாகப் பரிசோதிக்கப்படவேண்டும் என்று சிவப்பு முத்திரை பதிக்கப்பட்ட 323 கொள்கலன்கள் எவ்விதமான பரிசோதனைகளுமில்லாமல் விடுவிக்கப்பட்டுள்ளன. இதனால் ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டு அந்தக் குற்றச்சாட்டு எம்மீது சுமத்தப்பட்டால் அதன் பொறுப்பை எம்மால் ஏற்கமுடியாது என்று சுங்கத் தொழிற்சங்கக் கூட்டணியின் தலைவர் அமல் சஞ்ஜீவ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது-

சுங்கத்தில் கொள்கலன்களைப் பரிசோதனை செய்யும் முறைமையில் கணினித் தரவுக் கட்டமைப்பின் ஊடாக தெரிவு செய்யப்படும் 35 சதவீதமளவிலான கொள்கலன்கள் மாத்திரமே பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகிறது. மிகுதி 65 சதவீதமளவிலான கொள்கலன்கள் பரிசோதிக்கப்படாமல் விடுவிக்கப்படுகின்றன.

பரிசோதனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த 300 இற்கும் அதிகமான கொள்கலன்கள் எவ்விதமான பரிசோதனைகளுமில்லாமல் விடுவிக்கப்பட்டுள்ளமை பிரச்சினைக்குரியதாகும்.

இதனால் ஏதேனும் பாதிப்பு சமூகக் கட்டமைப்பில் ஏற்பட்டு அந்தக் குற்றச்சாட்டு எம்மீது சுமத்தப்பட்டால் அதன் பொறுப்பை எம்மால் ஏற்கமுடியாது.

ஆகவே இந்தச் சம்பவம் தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும்- என்றார். (ச-இ)

# பேருந்துப் போக்குவரத்தில் பிரயாணச்சிட்டை அவசியம்

## வடக்குமாகாண போக்குவரத்து அதிகாரசபைத் தலைவர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், பெப். 2

வடக்கு மாகாணத்தில் நீண்டதூரசேவையில் ஈடுபடும் பேருந்துகளில் பயணிகளுக்கு பிரயாணச்சிட்டை கட்டாயம் வழங்கப்படவேண்டும். இந்த நடைமுறை நேற்று முதலாம் திகதி சனிக்கிழமை தொடக்கம் நடைமுறைக்கு வந்துள்ளது என்று வடமாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவர் க. மகேஸ்வரன் தெரிவித்துள்ளார். உள்ளூர் சேவையில் ஈடுபடும் பேருந்துகளிலும் எதிர்வரும் மார்ச் மாதம் 1 ஆம் திகதிக்கு முன்னர் பயணச்சிட்டை வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். இதுதொடர்பில் வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் திடீர்ப் பரிசோதக உத்தியோகத்தர்கள் ஊடாக சோதனைகள் முன்னெடுக்கப்படும். பொதுப்போக்குவரத்தின்போது மிகுதிப்பணத்தைப் பெறுவதில் சிக்கல்களை எதிர்நோக்குவதாக மக்கள் முன்வைத்த முறைப்பாடுகளுக்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-25, 66)

## சுதந்திரதினத்தில் வாகனப்பேரணி

இலங்கையின் 77 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு வவுனியாவில் வாகனப்பேரணியை நடத்தவுள்ளதாக வன்னி மக்கள் ஒன்றியத்தின் தலைவர் சிவஞானம் தெரிவித்துள்ளார். 77 ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு வவுனியாவில் வாழ்கின்ற தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முகமாக இந்த வாகனப் பேரணி ஒன்றை நடத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ச-25,110)

# நெல் அழிவுகளுக்கு இழப்பீடு வழங்குங்கள்

யாழ்ப்பாணம், பெப். 2

சீரற்ற காலநிலையால் இம்முறை பெரும்போக நெற்செய்கைகள் பெருமளவில் அழிவடைந்து விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்கு அரசாங்கம் இழப்பீடுகள் வழங்க இதுவரை நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்று வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச்சபையிடம் வெள்ள அழிவுகள் குறித்து தாம் முறையிட்டபோதும் அழிவுகள் குறித்துப் பார்வையிடுவதற்கு அவர்கள் வருவதில்லை.

அத்துடன் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கவும் நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே மிகவிரைவாக நெல் அழிவுகளுக்குரிய இழப்பீடுகளை வழங்கவேண்டும்- என்றார். (ச-246)

# தமிழர் உரிமைக்காக பயணித்தவர் மாவை!

## சமத்துவக்கட்சி இரங்கல்

யாழ்ப்பாணம், பெப். 2

தமிழரின் உரிமைக்கான அரசியல் கோஷத்தோடு பயணித்தவர் மாவை சேனாதிராஜா என்று சமத்துவக்கட்சி தெரிவித்துள்ளது.

மாவைசேனாதிராஜாவின் மறைவு குறித்து சமத்துவக்கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான மு. சந்திரகுமார் தெரிவிக்கையில்,

1970 களிலிருந்து தமிழரின் உரிமைக்கான அரசியற் கோஷத்தோடு பயணித்தவர். இதற்காக, ஆரம்பகாலத்தில் நீண்ட சிறைவாழ்க்கையை அனுபவித்தவர். பின்னாளில் நாடாளுமன்ற அரசியலில் ஈடுபட்டு, அரசியலைத் தொடர்ந்தவர். அவருடைய அரசியற் பயணமானது நெருக்கடிகளும்ஏற்றஇறக்கமும்கொண்டதாக இருந்தது. அவர் முன்னெடுத்த அரசியல் வெற்றியைப் பெறவில்லை என்றாலும் அந்த அரசியல் பயணத்தில் மாவை சேனாதிராஜா என்ற பாத்திரத்தின் பங்களிப்பு வரலாற்று அடையாளமாக என்றுமிருக்கும் - என்றார். (ச-214)



கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் தரம் ஒன்றில் புதிதாக இணைந்த மாணவர்களுக்கான கால்கோள்விழா வித்தியாலய அதிபர் கே.தவகீஸ்வரன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. (ச-25,17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வடக்கின் கிராமிய வீதிகள்

# புனரமைப்பதற்காக பாதீட்டில் ரூ.500 மில்.

யாழ்ப்பாணம், பெப்.2

வடக்கு மாகாணத்தின் கிராமிய குறுக்குவீதிகளைப் புனரமைப்புச் செய்வதற்காக சுமார் 500 மில்லியன் ரூபாவை இந்த வருடப் பாதீட்டில் ஒதுக்கீடு செய்வதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடுகளைச் செய்கின்றபோது அவை மீள மத்திய அரசுக்குத் திரும்பிவருகின்ற அசாதாரண சூழல் வடமாகாணத்தில் பதிவாகின்றது.

நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட பின்பு எக்காரணம் கொண்டும் வருட இறுதியில் முழுமைபெறாது திருப்பியனுப்பப்படக்கூடாது.

இவ்வருட பாதீட்டில் வடக்கு மாகாணத்தின் கிராமிய குறுக்குவீதிகளைப் புனரமைப்புச் செய்வதற்காக சுமார் 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்படும்.

கிராமங்களுக்கிடையிலே சுமூகமான போக்குவரத்து இடம்பெறுகின்றபோதுதான் தனிப்பட்ட கிராம மக்களினுடைய வாழ்வியல் முன்னேறும். அபிவிருத்தி என்பது கிராமங்களில் இருந்து ஏற்படவேண்டும் - என்றும் அவர் குறிப்பிட்டார். (சு-125,26)

## வினைத்திறன் சேவைக்கு வெற்றிடங்களை நிரப்புங்கள்

யாழ்ப்பாணம், பெப்.2

யாழ் . மாவட்டத்தில் நிர்வாகத் துறை சார்ந்து காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்பி வினைத்திறன்வாய்ந்த சேவையை முன்னெடுப்பதற்கு உதவுமாறு மாவட்ட செயலாளர் ம. பிரதீபன் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் இதனைச் சுட்டிக் காட்டினார்.

யாழ்.மாவட்டத்தில் 65 கிராம அலுவலர்களுக்கு வெற்றிடங்களும் கிராம அலுவலர் நிர்வாகத்துக்கு 6 வெற்றிடங்களுடன் முகாமைத்துவ உதவியாளர்களுக்கு 27 வெற்றிடங்களும் காணப்படுகின்றன.

அதேவேளை 44 அலுவலக உதவியாளர்களுக்கான வெற்றிடங்களும் சாரதிகளுக்கான வெற்றிடங்களும் காணப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார். (சு-125)

## பாலியாறு திட்டத்தை நடைமுறைப்படுத்துக

யாழ்ப்பாணம், பெப்.2

முன்மொழியப்பட்ட பாலியாறு நன்னீர்த் திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு வடமாகாண அவை தலைவரும் தமிழரசுக் கட்சியின் தலைவருமான சி.வீ.கே சிவஞானம் கோரிக்கைவிடுத்துள்ளார்.

யாழ்.மாவட்ட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு தண்ணீரைக் கொண்டு வருவதற்கு இது ஒரு சிறந்த திட்டம் . எமது நன்னீர் வளம் தேவையற்ற வகையில் கடலுக்குள் செலுத்தப்படுகின்றது. இப்போது நாம் குழாய் நீருக்காகவும் சுத்திகரிக்கப்பட்ட நீருக்காகவும் கையேந்தும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி யாழ்.மாவட்டத்தின் குடிதண்ணீர் தேவையை நிவர்த்தி செய்யவேண்டும் என்றும் குறிப்பிட்டார். (சு-125)






'Aitken Spence Travels' நிறுவனத்தின் கிளை யாழ்ப்பாணத்தில் கடந்த திங்கட்கிழமை திறந்துவைக்கப்பட்டது. இந்தக் கட்டத்தைத் யாழ். இந்தியத் துணைத்தூதுவர் சாய்முரளி, நிர்வாக இயக்குநர் நளிந்த ஜெயசுந்தர, சமிந்த ஹின்துறகல ஆகியோர் திறந்துவைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



பிறப்பு 24 . 10 . 1940

இறப்பு 02 . 01 . 2025

## அமரர் திருமதி இராஜேஸ்வரி துரைராஜா

மலேசியாவை பிறப்பிடமாகவும் பேராதனை, கொழும்பு, கல்வத்தை ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற பேராசிரியர் அழகையா துரைராஜா அவர்களின் மனைவி திருமதி இராஜேஸ்வரி துரைராஜா அவர்களின் துயர்பகிர்வு நன்றி நவிலல்

எமது தாயாரின் மரணச் செய்தி கேட்டு நாம் துயருற்றிருந்த வேளையில், நேரிலும், தொலைபேசியூடாகவும் சமூக ஊடகங்களினூடாகவும் பத்திரிகை மற்றும் RIP Book இனூடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி தெரிவித்தவர்களுக்கும், அன்னாரின் ஆத்ம சாந்தி வேண்டி பிரார்த்தித்தவர்களுக்கும், மலர் வளையங்கள் மற்றும் பூங்கொத்து அனுப்பியவர்களுக்கும் அன்னாரின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் உணவுகள் வழங்கி உபகரித்தவர் களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

அத்துடன் எமது தாயாருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நன்கொடைகளை வழங்கிய அறக்கட்டளையினருக்கும் எமது சிரம் தாழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

(CR/44286) J-1

பிள்ளைகள்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 31 . 07 . 1945

இறப்பு 16 . 01 . 2025

## திருமதி சொர்ணாம்பிகை பரமேஸ்வரன்

திதி : வளர்பிறை பஞ்சமி

கண் இமைக்கும் நேரத்தில் ஓர் ஆண்டு
உருண்டோடியதே!
அம்மா நீங்கள் இல்லாமல் நாம்
தினமும் தவித்துக் கொண்டிருக்கின்றோம்!
ஈசனவன் பாதத்தில் அமைதியாக உறங்குங்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பெரிய மதவடி,
சுன்னாகம் தெற்கு.

(CS/57391) J-1

உங்கள் இழப்பால் தவிக்கும்
குடும்பத்தினர்

KELANI CABLES

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
### பொறியியற்பீடம், அறிவியல்நகர், கிளிநொச்சி
#### களனி சக்தி மின்னிணைப்புத் தகைமைச் சான்றிதழ் கற்கைநெறி

மின்னிணைப்புத் தகைமைச் சான்றிதழ் கற்கைநெறியினை களனி கேபிள்ஸின் அனுசரணையுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொறியியற்பீடம் தமிழ் மொழியில் நடாத்த திட்டமிட்டுள்ளது. **இக்கற்கை நெறியின் பிரதான நோக்கம் மின்னிணைப்பு செயல்முறை தொடர்பான தத்துவ விளக்கங்களை வழங்குவது.** எனவே மின்னியல் தொழில்நுட்ப துறையில் முன்னனுபவமுள்ளோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**காலம்** : **ஒரு வருடம் (பகுதிநேரம்: மாதத்தின் முதலாவது சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்)**
**தெரிவு** : **நேர்முகப்பரீட்சை மூலம்**
**இடம்** : **பொறியியற்பீடம் அறிவியல்நகர், கிளிநொச்சி**

மேற்படி கற்கைநெறியினை பயில்வதற்காக பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 23.02.2025 வரை ஏற்றுக் கொள்ளப்படும். பொருத்தமான விண்ணப்பதாரிகள் தங்களது சுயவிபரக்கோவையினை கீழுள்ள முகவரிக்கு விண்ணப்ப முடிவு திகதியன்றோ அதற்கு முன்னதாகவோ கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கவேண்டும் அல்லது நேரில் ஒப்படைக்கவும் முடியும் (சுயவிபரக்கோவையில் மின்னிணைப்பு துறையில் தொழில் செய்த சேவைக்காலம், சேவை விபரம், தொலைபேசி எண், முகவரி என்பன தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்).


ஒருங்கிணைப்பாளர்,
**"மின்னிணைப்பு தகைமைச் சான்றிதழ் கற்கைநெறி"**
**மின் மற்றும் மின்னணு பொறியியற்துறை,**
**பொறியியற்பீடம்,**
**அறிவியல்நகர், கிளிநொச்சி.**

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"மின்னிணைப்பு தகைமைச்சான்றிதழ் கற்கைநெறி"** எனக்குறிப்பிடுதல் வேண்டும். தெளிவற்ற மற்றும் விண்ணப்ப முடிவு திகதிக்கு பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்
31.01.2025

(CR/44221) J-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 15 . 06 . 1937

மறைவு 31 . 01 . 2025

## செல்லத்துரை விருத்தாசலம்

**(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்-இலங்கைப் போக்குவரத்துச் சபை, கோண்டாவில் )**

யா/கோண்டாவில் குமரகோட்டத்தைபிறப்பிடமாகவும், இணுவில் மேற்கு பரராஜசேகரப்பிள்ளையார் கோவிலடி மற்றும் கனடா (Toronto) ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை விருத்தாசலம் அவர்கள் நேற்றுமுன்தினம் (31.01.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை-ருக்குமணி தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், தர்ஷன் (கனடா), லவன் (கோபி - சிந்தூரம் சுப்பர் மார்க்கற் - இணுவில்), மோகன்ராஜ் (கனடா), சிந்துஜா (கனடா), திலீபன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற பொன்னம்பலம், மற்றும் பரிபூரணம், தர்மலிங்கம் (தருமு), பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் புஸ்பராணி, சிவசுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனரும், குமுதினி, யாழினி, ஜனனி, காலஞ்சென்ற சத்தியநாதன் மற்றும் சுஜந்திகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அஞ்சனா, அக்ஷயன், அக்ஷரா, மேகவி, மேகனா, சாய்சரன், சாய்சந்தோஷ், சாய்லக்ஷ்மி, அகரன், ஆருசா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற கனகேஸ்வரி மற்றும் வரதலிங்கம் (முருகையா), யோகேஸ்வரி, பாஸ்கரன், திவாகரன், பரமேஸ்வரன், சோதிமலர், கங்காதரன், தேவமனோகரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பார்வைக்கு (Toronto நேரப்படி)01.02.2025 இல் மாலை 7.00-10.00, வரையும், 02.02.2025 காலை 6.30-8.30 வரையும் வைக்கப்பட்டு இறுதிக்கிரியை: 02.02.2025 காலை 8.30-10.00 வரை நடைபெற்று அன்றைய தினம் காலை 10.00 மணிக்கு தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முகவரி:
(Hapel Ridge Funeral Home
8911 woodbine Ave
markham L3R 5GI

**தகவல்: குடும்பத்தினர்**

| | |
|---|---|
| தர்ஷன் | : 647 701 0482 (கனடா) |
| லவன் (கோபி) | : 9477 428 6052 |
| மோகன் | : 647 505 5703 (கனடா) |
| சிந்துஜா | : (கனடா) |
| திலீபன் | : 647 335 9385 (கனடா) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை யாழ்ப்பாணம் தாவடிப்பதியுறை
# அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண வேத விநாயகர் கோவில்
## புனராவர்த்தன நவகுண்ட சகித அஷ்டபந்தன சமர்ப்பண
# மஹா கும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி விழா

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு

**மஹாகும்பாபிஷேகம் 02.02.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 08.21 மணிமுதல் 10.33 வரையுள்ள சுபமுகூர்த்த வேளை**

**விநாயகப்பெருமான் அடியார்களே!**

அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண வேத விநாயகர் பேரருள் துணை நிற்க சிறப்புமிகு விநாயகராலயங்களை தன்னகத்தே கொண்டு மிளிரும் ஈழவள நாட்டின் வடபால் தாவடி என்னும் திருப்பதியிலே வீற்றிருந்து அடியார்கள் இடர் களைந்து அனுக்கிரகம் செய்து வரும் கருணைமிகு வேத விநாயகப்பெருமானுக்கும், கிழக்கு வாயில், தெற்கு வாயில் இராஜகோபுரங்கட்கும் பரிவார மூர்த்திகளுக்கும் ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் குரோதி வருடம் தை மாதம் 20ஆம் நாள் (02.02.2025) ஞாயிற்றுக்கிழமை சதுர்த்தி திதியும் உத்தரட்டாதி நட்சத்திரமும் அமிர்தசித்த யோகமும் கூடிய காலை 08.21 மணிமுதல் 10.33 வரையுள்ள மீனலக்ன சுபமுகூர்த்தத்தில் மஹாகும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கூடியுள்ளது. அடியார்கள் அன்றும் அதற்கு முதல் ஏழுநாட்கள் நடைபெறும் கும்பாபிஷேக பூர்வாங்க கிரியைகளையும் தரிசித்து விநாயகப் பெருமான் திருவருள் பெற்று சீரோடும் சிறப்போடும் வாழ்வார்களாக.

## கிரியாகால விபரம்

குரோதி வருடம் தைமாதம் 14ஆம் நாள் 27.01.2025 திங்கட்கிழமை காலை 7 மணி கும்பாபிஷேக கர்மாரம்பம். ஸ்ரீ விநாயகர் வழிபாடு. ஆச்சார்ய வர்ணம். பிரதிஷ்டா மஹா சங்கல்பம். வருண பூஜை. தேவ பிராம்மண அனுக்ஞை. மூர்த்தி அனுக்ஞை. திரவிய சுத்தி. திரவிய பூஜை. திரவிய விபாகம். முகூர்த்தபத்திரிகாபடனம். ஸ்ரீ மஹாகணபதி ஹோமம். தனாகர்ஷண மஹாலக்ஷ்மி ஹோமம். அபிஷேகம். தீபாரதனை. பேரீதாடனம். விநாயகர் அகவல். காரியசித்தி மாலை பாராயணம். பிரசாதம் வழங்கல்.

மாலை 5 மணி முதல் வேத பாராயணம். திருமுறை பாராயணம். மங்கல வாத்தியம். விநாயகர் வழிபாடு. கிராமசாந்தி. அஷ்டபலி. பிரவேசபலி. ரக்ஷோக்ன ஹோமம். திசா ஹோமம். பிரசாதம் வழங்கல்.

குரோதி வருடம் தை மாதம் 15ம் நாள் 28.01.2025 செவ்வாய்க்கிழமை காலை 8 மணிமுதல் வேதபாராயணம். திருமுறை பாராயணம். மங்கல வாத்தியம். விநாயகர் வழிபாடு. நவக்கிரக ஹோமம். மிருத்யுஞ்சய ஹோமம். அபிஷேகம். தீபாராதனை. சிவபுராண பாராயணம். கோளறு பதிகம். பாராயணம். பிரசாதம் வழங்கல்.

மாலை 5 மணிமுதல் வேதபாராயணம். திருமுறை பாராயணம். மங்கல வாத்தியம். விநாயகர் வழிபாடு. வாஸ்து சாந்தி. சாந்தி ஹோமம். மூர்த்தி ஹோமம். தீபாராதனை. பிரசாதம் வழங்கல்.

குரோதி வருடம் தை மாதம் 16ம் நாள் 29.01.2025 புதன்கிழமை காலை 8 மணிமுதல் வேதபாராயணம். திருமுறை பாராயணம் மங்கல வாத்தியம். விநாயகர் வழிபாடு. கங்கா தீர்த்த சங்கிரகணம். சூர்யாக்னி சங்கிரகணம். கோ பூஜை. கோவாசம். பிரசாதம் வழங்கல்.

மாலை 5.30 மணிமுதல் வேதபாராயணம். திருமுறை பாராயணம். மங்கல வாத்தியம். விநாயகர் வழிபாடு. மிருத்சங்கிரஹணம். அங்குரார்ப்பணம். ரக்ஷாபந்தனம். தர்மத்துவஜ ஆரோகணம். பிரசன்னாபிஷேகம். பிரசன்ன பூஜை. கடஸ்தாபனம். கலாகர்ஷணம். அஸ்திர ஹோமம். யாத்ரா ஹோமம். யாத்ராதானம். கும்பயாகசால பிரவேசம். யாக பூஜைகள். அக்னிகார்யம். நவாக்னி விபஜனம். மூலமந்திர ஹோமம். பூர்ணாகுதி. தீபாராதனை. பிரதக்ஷண நமஸ்காரம். வேதஸ்தோத்திர திருமுறை பாராயணம். பிரசாதம் வழங்கல்.

**இரவு 9.11 மணிமுதல் 11.09 வரையுள்ள கன்னி லக்ன சுபமுகூர்த்தத்தில் மூர்த்தி, தீப, யந்திர, பிம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம்.**

குரோதி வருடம் தை மாதம் 17ம் நாள் 30.01.2025 வியாழக்கிழமை காலை 8.30 மணிமுதல் வேதபாராயணம். திருமுறை பாராயணம். மங்கலவாத்தியம். விநாயகர் வழிபாடு. சிவாச்சார்யார்கள் சகளீகரணம். விசேஷ சந்தி. பூதசுத்தி சிவோஹம்பாவனை. யாகபூஜைகள். நவாக்னி வழிபாடு. காயத்ரி மந்திர ஹோமம். கணபதி அஷ்டோத்திர ஹோமம். பூர்ணாகுதி. தீபாராதனை. பிரதக்ஷண நமஸ்காரம். வேதஸ்தோத்திர திருமுறை பாராயணம். பிரசாதம் வழங்கல்.

மாலை 5 மணிமுதல் வேதபாராயணம். திருமுறை பாராயணம். மங்கல வாத்தியம். விநாயகர் வழிபாடு. சிவாச்சார்யார்கள் சகளீகரணம். சிவோஹம் பாவனை. யாக பூஜைகள். நவாக்னி வழிபாடு. காயத்ரி மந்திர ஹோமம். கணபதி திரிசதி ஹோமம். பூர்ணாகுதி. தீபாராதனை. பிரதக்ஷண நமஸ்காரம். வேதஸ்தோத்திர திருமுறை பாராயணம். பிரசாதம் வழங்கல்.

குரோதி வருடம் தை மாதம் 18ஆம் நாள் 31.01.2025 வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி முதல் வேதபாராயணம். திருமுறை பாராயணம். மங்கல வாத்தியம். விநாயகர் வழிபாடு. சிவாச்சார்யார்கள். சகளீகரணம். விசேஷ சந்தி. பூதசுத்தி. சிவோஹம் பாவனை. யாகபூஜைகள். நவாக்னி வழிபாடு. காயத்ரிமந்திரஹோமம். கணபதி உபநிஷத் ஹோமம். பூர்ணாகுதி. தீபாராதனை. பிரதக்ஷண நமஸ்காரம். வேத ஸ்தோத்திர திருமுறை. பாராயணம் பிரசாதம் வழங்கல்.

**எண்ணெய்க்காப்பு : 31.01.2025 காலை 9.30 மணி முதல் இரவு 9 மணி வரை, 01.02.2025 காலை 6 மணி முதல் மாலை 4 மணி வரை**

மாலை 5 மணி முதல் வேதபாராயணம். திருமுறை பாராயணம். மங்கல வாத்தியம். விநாயகர் வழிபாடு. சிவாச்சார்யார்கள். சகளீகரணம். சிவோஹம்பாவனை. யாகபூஜைகள். நவாக்னி வழிபாடு. காயத்ரி மந்திர ஹோமம். கணபதி சஹஸ்ர நாம ஹோமம். பூர்ணாகுதி. தீபாராதனை. பிரதக்ஷண நமஸ்காரம். வேத ஸ்தோத்திர திருமுறை பாராயணம். பிரசாதம் வழங்கல்.

குரோதி வருடம் தை மாதம் 19ஆம் நாள் 01.02.2025 சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் வேதபாராயணம். திருமுறை பாராயணம். மங்கல வாத்தியம். விநாயகர் வழிபாடு. சிவாச்சார்யார்கள் சகளீகரணம். விசேஷ சந்தி. பூதசுத்தி. சிவோஹம் பாவனை. யாகபூஜைகள். நவாக்னி வழிபாடு. விசேஷ திரவிய ஹோமம். பூர்ணாகுதி. தீபாராதனை. பிரதக்ஷண நமஸ்காரம். வேதஸ்தோத்திர திருமுறை பாராயணம். பிரசாதம் வழங்கல்

மாலை 5.00 மணிமுதல் வேதபாராயணம். திருமுறை பாராயணம். மங்கல வாத்தியம். விநாயகர் வழிபாடு. வருணஜபம். சிவோஹம்பாவனை. அந்தர்யாகம். பிம்பசுத்தி கும்ப பூஜை. ஜபசமர்ப்பணம். யாக பூஜைகள். நியாசாதிகள். நவாக்னி வழிபாடு. ஸ்பர்சாஹுதி பச்சிம சந்தானம். பூர்ணாகுதி. தீபாராதனை. பிரதக்ஷண நமஸ்காரம். வேத ஸ்தோத்திர திருமுறை. பாராயணம். பிரசாதம் வழங்கல்.

குரோதி வருடம் தை மாதம் 20 ஆம் நாள் 02.02.2025 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4 மணி முதல் வேத பாராயணம். திருமுறை பாராயணம். மங்கல வாத்தியம். விநாயகர் வழிபாடு. சிவோஹம் பாவனை. யாக பூஜை. நவாக்னி வழிபாடு. பூர்ணாகுதி. உபசார ஹோமம். ஜயாதி ஹோமம். மஹா பூர்ணாகுதி. தீபாராதனை. பிரதக்ஷண நமஸ்காரம். வேத ஸ்தோத்திர பாராயணம். நாதகீத நிர்த்தன சமர்ப்பணம். திருமுறை பாராயணம். ஆசீர்வாதம். அந்தர்பலி. பஹிர்பலி. யாத்ரா தானாதிகள். கும்ப உத்தாபனம். சர்வ மங்கள வாத்ய கோஷத்துடன் பிரதான கும்பங்கள் வீதிப்பிரதக்ஷணம். காலை 08. 21 மணி முதல 10.33 மணி வரையுள்ள மீனலக்ன சுபமுகூர்த்தத்தில். இராஜகோபுர ஸ்தூபி விமான அபிஷேகம். மஹாகும்பாபிஷேகம். திருக்கடைகாப்பு. குப்த பூஜைகள். ஸ்நிராகுதி. தசமங்கள தர்சனம். எஜமான அபிஷேகம். பிரதிஷ்டா பல சமர்ப்பணம். அங்குர விசர்ஜனம். தர்மத்துவஜ அவரோகணம். ஆச்சார்ய வழிபாடு. ஆசியுரைகள் தொடர்ந்து மஹாபிஷேகம். விசேஷ பூஜை. பிரசாதம் வழங்கல்.

மதியம் 12.00 மணிக்கு மகேஸ்வர பூசை (அன்னதானம் இடம்பெறும்)

மாலை 6.30 மணிக்கு விசேஷ வசந்த மண்டபபூஜையுடன் விநாயகப் பெருமான். வள்ளி. தேவசேனா சகித முருகப்பெருமான் திருவீதியுலா திருக்காட்சி இடம்பெறும்.

## குருமார் விபரம்

**கும்பாபிஷேக கிரியைகள் யாவும் ஆலய பிரதமகுரு சிவப்பிரம்மஸ்ரீ பரமசிவக்குருக்கள் சிவசங்கரக் குருக்கள்**
**அவர்களின் நெறியாள்கையில் நடைபெறும்.**

**அருளாசி வழங்கும் விப்ரசிரேஷ்டர்கள்**

**சிவப்பிரம்மஸ்ரீ. கு. இரத்தினேஸ்வரக்குருக்கள் (கிளிநொச்சி)**
**சிவப்பிரம்மஸ்ரீ. ம. தாணு நாதக் குருக்கள் ( இணுவில்)**
**சிவப்பிரம்மஸ்ரீ. ம. சோம சுந்தரக்குருக்கள் (இணுவில்)**

**சர்வபோதகாச்சார்யர்**
**சிவாகம ஞான பாஸ்கரன்**
**சிவப்பிரம்மஸ்ரீ தாணு. மகாதேவக்குருக்கள்**
அதிபர், தர்மசாஸ்தா குருகுலம் - இணுவில்

**பிரதிஷ்டா பிரதமகுரு**
**மந்திர கிரியாமணி, ஈசான சிவாச்சார்யார்**
**சிவப்பிரம்மஸ்ரீ சிவசங்கரக்குருக்கள் கௌரீபக்குருக்கள்**

**ஸ்வாதகாச்சார்யர்**
**சிவப்பிரம்மஸ்ரீ**
**சே. சிவபாலசர்மா (இணுவில்)**

**மூர்த்திப குருமணிகள்**
சிவப்பிரம்மஸ்ரீ. இ. விக்கினேஸ்வரக் குருக்கள் (கொக்குவில்)
சிவப்பிரம்மஸ்ரீ. சோ. வாகீஸ்வரக்குருக்கள் (கந்தரோடை)
சிவப்பிரம்மஸ்ரீ. இ. சுந்தரேஸ்வரக்குருக்கள் (மருதனார் மடம்)
சிவப்பிரம்மஸ்ரீ. பால கணேஷக்குருக்கள் (நயினை)
சிவப்பிரம்மஸ்ரீ. குமார சரவணபவக்குருக்கள் (இணுவில்)
சிவப்பிரம்மஸ்ரீ. சோ. அரவிந்தன் குருக்கள் (இணுவில்)
சிவப்பிரம்மஸ்ரீ. உ. அபராஜிதக்குருக்கள் (இணுவில்)
சிவப்பிரம்மஸ்ரீ. இரா. ரமணிதரக்குருக்கள் (கோண்டாவில்)
சிவப்பிரம்மஸ்ரீ. ர. கேசவக்குருக்கள் (தாவடி)
சிவப்பிரம்மஸ்ரீ. கணேச சபாபதிக் குருக்கள் (சுன்னாகம்)
சிவப்பிரம்மஸ்ரீ. ச. சந்தனக்குருக்கள் (கொக்குவில்)
சிவப்பிரம்மஸ்ரீ. வா. ஜெயவத்சாங்க குருக்கள் (தாவடி)
சிவப்பிரம்மஸ்ரீ. ரா. திவாகரக்குருக்கள் (தாவடி)
சிவப்பிரம்மஸ்ரீ. இ. கிருஷ்ணராம் குருக்கள் (சரசாலை)
சிவப்பிரம்மஸ்ரீ. ச. சாந்தரூபக் குருக்கள் (கோப்பாய்)

**சாதகாச்சார்யர்கள்**
பிரம்மஸ்ரீ. சாமி குமரேசசர்மா (தாவடி)
சிவப்பிரம்மஸ்ரீ. ம. ஸ்ரீவத்சாங்க குருக்கள் (இணுவில்)
பிரம்மஸ்ரீ. சி. கௌரி சங்கர சர்மா (இணுவில்)
பிரம்மஸ்ரீ. வெ. சுகராஜ சர்மா (வட்டுக்கோட்டை)
பிரம்மஸ்ரீ. ப. சனாதன சர்மா (மட்டுவில்)

**வேதபாராயணம்**
பிரம்மஸ்ரீ. ம. மகேந்திர சர்மா (பன்னாலை)
பிரம்மஸ்ரீ. சாமி ரமணேச சர்மா (தாவடி)
பிரம்மஸ்ரீ. ப. ரவீந்திர சர்மா (தாவடி)
பிரம்மஸ்ரீ. கு. சுபேட்சண சர்மா (தாவடி)
பிரம்மஸ்ரீ. கு. நிபேக்சன சர்மா (தாவடி)
பிரம்மஸ்ரீ. ப. சுபாகர சர்மா (தாவடி)
பிரம்மஸ்ரீ. ம. லக்ஸ்மி நாராயண சர்மா (பன்னாலை)
பிரம்மஸ்ரீ. ந. ஆகாஷ் சர்மா (கொழும்பு)
பிரம்மஸ்ரீ. இ. ஸ்ரீராம் குருக்கள் (சரசாலை)

**யாகசம்ரக்ஷகர்கள்**
பிரம்மஸ்ரீ. ம. சத்குநசர்மா
பிரம்மஸ்ரீ. வா. விஷ்ணுவர்த்தன சர்மா
பிரம்மஸ்ரீ. சுபாஸ் சர்மா
பிரம்மஸ்ரீ. பிரவீன் சர்மா
பிரம்மஸ்ரீ. உமாபால சர்மா
பிரம்மஸ்ரீ. சுந்தரேஸ்வர சர்மா
பிரம்மஸ்ரீ. கிருபாகர சர்மா
பிரம்மஸ்ரீ. பிரதீபன் சர்மா
பிரம்மஸ்ரீ. ராஜீதன் சர்மா
பிரம்மஸ்ரீ. ரவி சங்கர் சர்மா
பிரம்மஸ்ரீ. ராகேஷ் சர்மா

| மங்கல வாத்தியம் | பூமாலை அலங்காரம் | மரவேலை | ஸ்தபதி | வர்ண வேலை | இரும்பு வேலை |
|---|---|---|---|---|---|
| மு. சிவலிங்கம் குழுவினர் (தாவடி) | K. வரதாசன் (மல்லாகம்) | S. சதானந்த ரூபன் | பா. கஜேந்திரன் (யாழ்ப்பாணம்) | ம. சபேசன் (கல்வியங்காடு) | ஜ. சுதர்சன் |

குறிப்பு : கிரியைகளுக்குரிய பூஜைத் திரவியங்கள், பால், தயிர், இளநீர், பூ, மாலை, நெய், தேன், சமித்து வகைகள் போன்ற பொருட்களை எம்பெருமானுக்கு அர்ப்பணித்து பேரருளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

**தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெறும்.**

**வேழமுகத்து விநாயகனைத்தொழ வாழ்வு மிகுந்துவரும்**

**சுபம்!**

**விநாயகர் அருட்பணியில்**
**ஆலய திருப்பணிச் சபையினரும், பரிபாலன சபையினரும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# தினம் மட்டுமல்ல மனமும் தேவை!

இலங்கையர்கள் அனைவரும் இணைந்து, பிரிவினைகள் ஏதுமின்றிக் கொண்டாடுவதற்குத் தனியான தினமொன்று அறிவிக்கப்படும் என்பதாக யாழ்ப்பாணம்-வல்வெட்டித்துறையில் வைத்து அறிவித்திருக்கின்றார் ஜனாதிபதி அநுர. 'சுதந்திர' இலங்கையில் போர்களும் - வலிகளும் -ரணங்களும்-குறைகளும்-வன்மங்களும்தான் எஞ்சியிருக்கின்றன. 'இலங்கையர்களாக' இணைவதற்கான தினமொன்று - நிகழ்வொன்று இல்லை. ஆதலால், ஜனாதிபதி அநுரவின் அறிவிப்பு அதிமுக்கியமானது. விரைந்து செயற்படுத்தப்படவேண்டியது. அதில் மாற்றுக் கருத்துகள் தமிழர்களிடம் இல்லை.

ஆனால், யாழ்ப்பாணத்துக்கான அதே பயணத்தில், 'உரிய சட்டப்பொறிமுறைகள் ஊடாகவே அரசியற் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள்' என்றும் ஜனாதிபதி அறிவித்திருக்கின்றார். இலங்கையைப் பொறுத்தவரை, கைதியொருவரை விடுவிக்கவும்-தண்டனைக் குறைப்புச் செய்யவும் ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது. 'பொது மன்னிப்பு' என்று அறியப்படும் அந்த அதிகாரத்தின் வாயிலாக சுதந்திரதினத்தன்று அரசியற்கைதிகளை ஜனாதிபதி விடுவிக்க சாத்தியங்கள் உள்ளன என்று மனதில் ஏதோவொரு மூலையில் சிறிதாகவேனும் நம்பிக்கைக் கீற்றொளி ஊடுருவியிருந்தது. அந்தக் குறைந்தபட்ச சாத்தியத்தை - நம்பிக்கையை அடியோடு அணைத்துவிட்டே, 'இலங்கையர்களின் கொண்டாட்டம்' தொடர்பில் ஜனாதிபதி கருத்துத் தெரிவித்திருக்கின்றார்.

கொண்டாடுவதற்கு தினங்கள் மட்டும் போதாது. தினங்கள் விடவும் மனங்கள்தான் அவசியம். காணாமலாக்கப்பட்டவர்களின் விவகாரம், காணிவிடுவிப்பு, அரசியற்கைதிகளின் விடுதலை, அரசியலமைப்புச் சதிராட்டங்கள், அத்துமீறிய காணிபிடிப்பு, அடாத்தாக அமைக்கப்பட்ட விகாரைகள் என குடாநாடும், தமிழர் தாயகமும் குறைகளுக்குள்ளும் பிரச்சினைகளுக்குள்ளும் சிக்கிச் சின்னாபின்னமாகிக் கிடக்கையில், 'கொண்டாட்டம் ஒன்றுதான் இல்லாத குறையாக' அறிவித்திருக்கின்றார் அநுர.

முன்னாள் ஜனாதிபதி ரணில், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தென்னாபிரிக்காவைப் பிரதியெடுத்ததைப் போன்று, தற்போதைய ஜனாதிபதி அநுர - கனடாவின் கொள்கைகளைக் கைப்பற்றியிருக்கின்றார் போலும். கனடா பல்லினகலாசாரம் கொண்ட நாடு. குடியேற்றங்களாலும், குடியேறிகளாலும் கட்டமைக்கப்பட்ட அந்த நாட்டில், அனைத்து மக்களையும் 'கனேடியர்களாக' இணைக்க வேண்டிய தேவை உணரப்பட்டது. இதனால், ஜூலை மாதம் முதலாம் திகதியை 'கனேடியத் தினமாக' அங்கு அறிவித்திருக்கின்றார்கள். அரச விடுமுறைகள், சலுகைகள், வானவேடிக்கைகள் எனக்கொண்டாட்டங்கள் நிறைந்ததாக அன்றைய நாள் மிளிரும்.


ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைக்கு முன்னர் நிகழ்ந்த -தனது கனேடியப் பயணத்தின்போது, இந்த விடயங்களை ஜனாதிபதி அலசி ஆராய்ந்து, இலங்கைக்கும் அதன் அவசியம் தொடர்பில் உணர்ந்திருக்கலாம். அதன் தொடர்சியாக இந்த அறிவிப்பை அவர் விடுத்திருக்கலாம். ஆனால், கனேடியத் தினம் அறிவிக்கப்படுவதற்கு முன்னர், அனைத்து மக்களையும் கனேடியர்களாக இணைக்கும் -அரவணைக்கும் செயற்பாடுகளில் ஒட்டாவா வெற்றி கண்டது. ஆதிக்குடிகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கியது. முன்னர் வழங்கிய தீர்வுகள் போதாது என்று அதன் மேம்பட்ட நடவடிக்கைகள் தற்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்குரிய அமைச்சரும்கூட ஓர் ஈழத்தவர் (ஹரி ஆனந்தசங்கரி) என்பதில் தமிழர்களுக்குக் கூடுதல் பெருமை.

எனவே, கொண்டாடித்தீர்ப்பதற்கு ஒரு தினத்தைக் கொண்டுவருவதற்கு முன்னர், கொண்டாட்டத்துக்கு ஏற்ற நல்ல மனத்தைக் கொண்டுவருவதே ஜனாதிபதி அநுரவின் கடமையும் பொறுப்புமாகும்.

நாளொரு நல்வார்த்தை

அடக்கம் ஓர் ஆபரணம் மட்டுமல்ல, நல்லொழுக்கத்திற்கான காவலுமாகும்.

–ஜோசப் அடிசன்–




# பெப்ரவரி 15 முதல் உத்தரதேவி



யாழ்ப்பாணம், பெப்.2

எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான உத்தரதேவி ரயில் சேவை ஆரம்பிக்கப்படும் எனப் போக்குவரத்துத்துறை அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவைகள் போதுமான அளவில் காணப்படவில்லை எனச் சுட்டிக்காட்டினார்.

இதற்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் பிமல் ரத்நாயக்க, யாழ்.மாவட்டத்துக்கு பேருந்து மற்றும் ரயில் சேவைகள் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ளன.

நேற்றுமுன்தினம் இரவு முதல் தபால் ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் உத்தரதேவி ரயில் சேவை ஆரம்பிக்கப்படும் என்று குறிப்பிட்டார். (ச-125)

# இந்தியப் படகுகளால் இடையூறு

யாழ்ப்பாணம், பெப்.2

நீதிமன்ற நடவடிக்கைகளின்போது கையகப்படுத்தப்பட்ட 116 இந்திய இழுவைமடிப்படகுகள் மயிலிட்டி துறைமுகத்தில் தரித்துவிடப்பட்டுள்ளதால் கடற்றொழிலுக்குச் செல்லும் மீனவர்கள் நெருக்கடியைச் சந்திக்கின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டச் செயலர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்திலேயே இந்த விடயத்தை தெரிவித்தார். (ச-41-125)

# பெற்றோலியக் கூட்டுத்தாபன முன்னாள் பணிப்பாளர் கைது !

கொழும்பு, பெப். 2

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன முன்னாள் முகாமைத்துவப் பணிப்பாளர் குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

6.1மில்லியன் ரூபா பணத்தைத் தவறாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-22,6)

# மிகுதி 2 துப்பாக்கிகள் ஒப்படைத்தார் யோஷித

கொழும்பு, பெப்.2

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ச தன்வசமிருந்த இரண்டு துப்பாக்கிகளையும் பாதுகாப்பு அமைச்சிடம் கையளித்துள்ளார் எனப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை யோஷித ராஜபக்ஷவிடம் இருந்த ஒன்பது துப்பாக்கிகளில் 7 துப்பாக்கிகளைப் பாதுகாப்பு அமைச்சு அண்மையில் கையகப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (ச-22.6)

# பேருந்துக்கட்டணம் அதிகரிக்கப்படாது



கொழும்பு, பெப்.2

எரிபொருள் விலைத்திருத்தத்தின் பிரகாரம் டீசல் விலை அதிகரிக்கப்பட்டாலும் பேருந்துக்கட்டணம் அதிகரிக்கப்படமாட்டாது என இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

3 ரூபா நட்டத்திலேயே பேருந்துக்கட்டணம் அறவிடப்படுகிறது. எனினும் டீசல் விலை அதிகரிக்கப்பட்டாலும் அந்தச் சலுகை மக்களைச் சென்றடைவதை நாம் உறுதிசெய்வோம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்டத்தில் சமிக்ஞைகள் பொருத்துக

யாழ்ப்பாணம், பெப்.2
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் விபத்துகளைக் குறைப்பதற்குப் பிரதான இடங்களில் சமிக்ஞைகளைப் பொருத்தித் தருமாறு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் கோரிக்கை விடுத்தார்.

அதன்படி யாழ்.பலாலி வீதியில் அமைந்துள்ள இலுப்பையடிச்சந்தி , மருதனார்மடம் சந்தி, ஆணைப்பந்தி, மனோகரா தியேட்டர் சந்தி, காங்கேசன்துறை மானிப்பாய் இணைப்பு வீதிச் சந்தி , வெலிங்டன் சந்தி, கல்வியங்காடு சந்தி, கைதடி உட்பட ஒன்பது இடங்களிலேயே சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் ஜனாதிபதியால் எவ்வித பதிலும் அளிக்கவில்லை. (ச-125)

# திறப்பு விழா

யாழ்ப்பாணம், பெப்.2
தேசியமக்கள் சக்தியின் பொதுமக்கள் தொடர்பாடல் அலுவலகத்திறப்பு விழா கோப்பாய்ச் சந்தியில் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ச-25.66)

# யாழ். போதனாவில் 700 வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம், பெப்.2
யாழ்.போதனா மருத்துவமனையில் மேலும் 700 வெற்றிடங்கள் நிரப்பப்படவேண்டும் என யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தற்போது 72 மருத்துவ நிபுணர்கள் பணியாற்றுகின்ற நிலையில் மேலதிகமாக 30 பேரும், சுகாதார உதவியாளர்களாக 525 பேர் பணியாற்றுகின்ற நிலையில் மேலும் 300 பேரும், மருத்துவ அதிகாரிகள் 325 பேர் பணியாற்றுகின்ற நிலையில் மேலும் 70 பேரும் 732 தாதிகள் பணியாற்றுகின்றநிலையில் மேலதிகமாக 300 தாதிகளும் அதிகரிக்கப்படவேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-125)











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சப்பச்சிமாவடி - சாவகச்சேரி

# அருள்மிகு சப்பச்சி மாவடி விநாயகர் ஆலயம்

## நூதன த்ரிதள ராஜகோபுர

# மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம் - 2025

### மஹாகும்பாபிஷேகம் 03.02.2025 திங்கள் காலை 9.45-10.25 மணி

## ஆசியுரை



சகல வளங்களும் நிறைந்து திருவருட்பொலிவோடு விளங்கும் சப்பச்சிமாவடி விநாயகர் ஆலயம் எல்லாச் சிறப்பும் மிகுந்திருந்தாலும் இராஜகோபுரம் இல்லாதது பெருங்குறையாயிருந்தது. இராஜகோபுரத்தின் முக்கியத்துவம் பற்றித் தெரிந்திருந்தாலும் பல ஆலயங்களில் இராஜகோபுரங்கள் அமைந்திருக்கவில்லை. எனினும் அண்மைய காலங்களில் திருப்பணிகளில் பெருமாற்றம் ஏற்பட்டுள்ளதை அவதானிக்கமுடிகின்றது.

கடந்த கும்பாபிஷேக தினத்தன்று கருக்கட்டிய இராஜகோபுரம் அமைக்கப்பட வேண்டும் எனும் எண்ணம் நிஜமாகி இன்று கண்முன்னே பேரருட்பொலிவோடு அழகு கோபுரமாக திரிதள விமானமும் மணிமண்டபமும் அமைந்தது தனிச்சிறப்பே. சைவ ஆலயங்களுக்கு இராஜகோபுரம் மிக முக்கியமானதொன்றே. ஆலயத்திற்கு வீதிப் பிரகாரம் அமைந்தபின் ஆலய முன்றில் பெருவாயில் அமைகின்றது. அவ்வாயில் "கோபுரவாயில்" எனப்படுகின்றது. அவ்விடத்தில் பெரியதொரு கோபுரம் அமைவதாலேயே கோபுரவாயில் எனப் பெயர்பெற்றது. ஆலயத்தின் வெகுதூரத்திற்கு அப்பால் இருப்பவர்களும் ஆலய அமைவிடத்தை இனங்காண கோபுரம் நிலைக்களமாக அமைகின்றது. ஊரின் வெளியே உள்ளவர்களும் ஆலயத்தை நினைவுகொள்ள கோபுரமே துணை. இதனால் "கோபுரதரிசனம் பாபவிமோசனம்" என வடமொழியிலும் "கோபுரதரிசனம் கோடிபுண்ணியம்" எனத் தமிழாலும் போற்றப்படுகின்றது. இவ்வேளை இத்திருப்பணிகளை விரிவாக்கிக் குறித்த காலத்தில் நிறைவு செய்து இராஜகோபுர கும்பாபிஷேகத்தை இன்று காணும் பேறு பெரும்பேறே. விநாயகப் பெருமான் திருவருளுடன் இக்கைங்கரியம் நிறைவுற முன்னின்ற அனைவருக்கும், குறிப்பாக ஆலய அறங்காவலருக்கும், அடியவர்களுக்கும், ஆலய நித்திய சிவாச்சாரியாருக்கும், கும்பாபிஷேக பிரதம சிவாச்சாரியாருக்கும், இக் கைங்கரியத்தை நிறைவேற்றிய ஸ்தபதிக்கும் விநாயப்பெருமான் பேரருள் பொலிவதாக வாழ்த்தி நல்லாசிகளை வழங்குவதில் மனநிறை பெருமையடைகின்றேன்.

**முன்னைநாள் பிரதம சிவாச்சாரியார்**
**"சிவாகம கிரியா ஞான பூபதி" சிவஸ்ரீ. செ.பரமானந்தக் குருக்கள்**

## ஆலய வரலாறு

ஈழவள நாட்டில் வடபால் யாழ்நகரில் சைவம் தழைத்தோங்க அறிவியலாளர்களும் சைவ அறிஞர்களும் செறிந்து வாழும் இடம் தென்மராட்சி. இத்துணை சிறப்பு வாய்ந்த தென்மராட்சியின் சப்பச்சிமாவடி பதியின் இருதயமாக வீற்றிருப்பதுதான் எமது சப்பச்சிமாவடிப் பிள்ளையார் ஆலயம்.

17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த வைரவநாத உடையாரும் அவரின் மகன் சுப்பு உடையாரும் விநாயகப் பெருமான் மீது கொண்ட அதீத பக்தியினால் தமது வளவிற்குள் விநாயகர் ஆலயத்தை அமைத்து வழிபாடு செய்து வந்தனர். இவ்வாறு அவர்கள் மனமுருகி வழிபட்டு வரும் நாளில் ஒரு அழகிய மாங்கனி விநாயகர் சந்நிதியில் இருப்பதைக்கண்டு சுப்பு உடையார் அதிசயித்தார். அவர் அக்கனியை பிள்ளையாரின் பாதங்களில் வைத்து அர்ச்சனை செய்து வழிபட்டார். அதன்பின்பு அக்கனியை வெட்டி சுவைத்த போது அது தேன்சுவை அமிர்தமாக ருசித்தது. மிகவும் சதைப்பிடிப்புடன் காணப்பட்ட அந்த மாங்கனியின் விதை சப்பை வடிவமாகக் காணப்பட்டதை அவதானித்த சுப்பு உடையார் அதனை சப்பை மா என அழைத்ததோடு இந்த ஆலயத்தை சப்பைமாவடிப் பிள்ளையார் ஆலயம் எனவும் நாமமிட்டார். இந்தப்பெயர் மருவி சப்பச்சிமாவடிப் பிள்ளையார் எனப் பெயர் பெற்றது. இந்த மரம் 350 ஆண்டுகளுக்கும் மேலாக ஆலயத்தின் தல விருட்சமாக இன்றும் காணப்படுவது ஆலயத்தின் சிறப்பம்சமாகும். இவ்வாறாக இந்தக் கிராமமே சப்பச்சிமாவடி எனப் பெயர் பெற்றது. சுப்பு உடையாரின் காலத்திற்குப் பிறகு அவரின் மருமகரான பரமநாதன் தாமோதரம்பிள்ளை சிறுகுடிசையாக இருந்த கோயிலைக் கற்கோயிலாக்க வேண்டும் என விருப்பம் கொண்டு தூர இடங்களுக்கெல்லாம் சென்று பொதிமாட்டு வண்டில் மூலம் வைரக்கற்களைக் கொண்டு வந்து ஆலயத்தின் மூலஸ்தானப்பகுதியை கட்ட ஆயத்தம் செய்தார். இவரின் சகோதரரான பெரிய ஆறுமுகத்தார் பொழிகல்லால் திருமஞ்சனக்கிணற்றைக்கட்டி முடித்தார். இப்பெரியார்களின் காலத்திற்குப்பின் இவரின் மருகரான பிரபல வியாபரி விசுவநாதர் தாமோதரம்பிள்ளை ஆலயத் திருப்பணியைப் பொறுப்பேற்றார். மேலும் அவர் ஆலயத்தின் மூலஸ்தானத்தையும் கழுத்துப் பகுதியையும் வைரக்கற்களால் கட்டி முடித்தார். மேலும் அர்த்தமண்டபம், மகாமண்டபம், பலிபீட மண்டபம் என்பவற்றை தகரக்கூரையிட்டு சுண்ணாம்புக் கற்களால் கட்டி முடித்த இப்பெரியார் வேதாரணியக் குருக்கள் பலரையும் வரவழைத்து 11.02.1932 இல் ரேவதி நட்சத்திரத்தில் மகா கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தார். அன்றிலிருந்து வருடம் தோறும் அதே பட்சத்தில் ஆலய மணவாளக் கோலம் நடைபெற்று வருகிறது. 1946 ஆம் ஆண்டு விசுவநாதர் தாமோதரம்பிள்ளை அவர்கள் சிவபதமடைந்த பின்னர் அவரின் அருமைப் புதல்வர் வைத்தியகலாநிதி பொன்னுசாமி தாமோதரம் ஆலயப் பொறுப்பை ஏற்றார். இவர் தனது தந்தையின் திருப்பணியை தொடர்ந்து நடத்தி தனது சொந்தப் பணத்தை செலவிட்டு பலிபீட மண்டபம், வசந்த மண்டபம், யாகசாலை, கோபுர வாசல், வெளி மண்டபம் ஆகியவற்றை புதிதாகவும் அழகாகவும் கட்டி முடித்தார். இவரின் மூத்த மகளான கமலாவதி மண்டலேஸ்வரன் அவர்கள் 1959 ஆம் ஆண்டு ஆலயத்தில் வைரக்கல்லால் மணிக்கோபுரம் அமைத்து 500 இறாத்தல் எடையுடைய மணியையும் செய்வித்து அபிஷேகம் செய்து மகிழ்ந்தார். பல சிறப்பம்சங்கள் கொண்ட இந்த ஆலய மணியோசையின் இனிமையான நாத ஒலி தென்மராட்சியின் தனிச்சிறப்பாகும்.

அமரர் வி. தாமோதரம்பிள்ளை அவர்களின் வழித்தோன்றலான சரவணமுத்து பாலகிருஸ்ணமூர்த்தி வைரக்கல்லால் வைரவ மூர்த்திக்கு கோயில் கட்டி 05.12.1960 இல் கும்பாபிஷேகம் செய்து முடித்தார். அத்துடன் இவர் தனது சந்ததியினருக்கான காணியை விற்று வைரக்கல்லால் அர்த்த மண்டபம் மற்றும் மகாமண்டபம் என்பவற்றை புதுப்பித்தார்.

ஆலயத்தின் நித்திய பூசைகள் 45 வருடங்களிற்கு மேலாக கல்வயலூர் சோமசுந்தரக் குருக்கள் அவர்களுடன் மிகவும் நேர்த்தியாக மேற்கொள்ளப்பட்டு வந்தது. கம்பீரமாக இன்றும் காட்சி தரும் எழுந்தருளி பிள்ளையாரை இவர் தனது சொந்தச் செலவில் செய்து ஆலயத்திற்கு வழங்கியமை சிறப்பம்சமாகும். இந்த எழுந்தருளிப்பிள்ளையார் தென்மராட்சி பிரதேசத்தின் சைவப்பெருமையைப் பறைசாற்றி நிற்கிறது.

வைத்தியகலாநிதி பொன்னுசாமி தாரோதரம்பிள்ளை அவர்கள் திடீரென்று தனது தந்தையார் 32 வருடங்களுக்கு முன்னர் சிவபதமடைந்த அதே தினத்தில் (24.05.1978) சிவபதமடைந்தார். இவரது மறைவுக்குப் பின்னர் இவரது புதல்வாரன சரவணமுத்து தாமோதரம் ஆலயப் பொறுப்பை ஏற்றார். இவரும் இவரது பாரியார் திருமதி ச. அபிராம சுந்தரி அவர்களும் ஆலயப் பொறுப்பை பக்திசிரத்தையுடன் நடாத்தி வந்தனர் சோமசுந்தரக்குருக்கள் ஓய்வு பெறுவதற்கு முன்னர் தனது மகளின் கணவரான சிவஸ்ரீ செவ்வந்திநாத ஐயர் பரமானந்தக் குருக்களுகளிடம் ஆலய நித்திய பூசை செய்யும் பணியை ஒப்படைத்தார். விநாயகப்பெருமான் மீது அதீத பக்தி கொண்ட பரமானந்தக் குருக்கள், அவரது மனையாள் மற்றும் பிள்ளைகள் ஆலயத்தின் சிறப்பை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தி சென்றமை யாவரும் அறிந்த உண்மையாகும்.

2003 ஆம் ஆண்டு இடப்பெயர்வின் பின்னர் ஆலயம் மீண்டும் புதுப்பொலிவுடன் சிவஸ்ரீ செ. பரமானந்தக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற மஹாகும்பாபிஷேகத்துடன் புதுப்பொலிவு கண்டது.

இதன் பின்பு சரசாலையூர் சிவஸ்ரீ நடராஜ லோகேஸ்வரக் குருக்கள் அவர்கள் நித்திய பூசைகளைப் பொறுப்பேற்று மிகவும் பக்தி சிரத்தையுடன் செய்து வருகிறார். காலஞ்சென்ற இவரது பாரியார் ஆலய பாகசாலைப் பொறுப்புகளை திறம்பட நடாத்தி வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஆலயத்தின் மீது பெரும் பக்தி கொண்ட சில அடியார்களின் பங்களிப்பில் முருகன், மகாலஷ்மி, சண்டேஸ்வரர் ஆகிய தெய்வங்கள் பிரதிஸ்டை செய்யப்படவும் ஆலயத்திற்கு சுற்றுக்கொட்டகை அமைக்கவும் திருவருள் கைகூடியது.

2016 இல் சரவணமுத்து தாமோதரம் அவர்கள் தனது மருகரான திரு சபாரட்ணம் ஸ்ரீகுமார் அவர்களுடன் சேர்ந்து ஆலயத்திற்கு மகாலஷ்மி, தட்சிணாமூர்த்தி, நவக்கிரக தெய்வங்கள் அமைப்பதற்கு அஸ்திபாரம் இட்டார்.

2017 ஆம் ஆண்டு சித்திரை மாதம் சரவணமுத்து தாமோதரம் அவர்களின் மறைவுக்குப் பின்னர் தற்போது தர்மகர்த்தா சபைத்தலைவரான அவரது மருகர் திரு சபாரட்ணம் ஸ்ரீகுமார் அவர்கள் ஆலயப் பொறுப்பை ஏற்று, 2018 ஆம் ஆண்டு சிவஸ்ரீ நடராஜ லோகேஸ்வரக் குருக்கள் தலைமையில் மஹாகும்பாபிஷேகத்தினை சிறப்புற நடாத்தினார். ஆலயப்பொறுப்புகளை நேர்த்தியாகக் கொண்டு செல்வதற்கு தர்மகர்த்தா சபையின் உபதலைவராக இருந்த யோகேஸ்வரன் ஜெயக்குமார் அவர்கள் உறுதுணையாக இருந்தார். 2022 இல் அவருடைய திடீர் மறைவின் பின்னர் திரு சபாரட்ணம் ஸ்ரீகுமார் அவர்களும் அவரது துணைவியார் திருமதி சுரேஷினி ஸ்ரீகுமார் அவர்களும் ஆலயப் பொறுப்பினை பக்தியுடன் தொடர்ந்தும் நடாத்தி வருகின்றனர்.

ஆலயத்தில் வைகாசிப் பௌர்ணமியைத் தீர்த்தமாகக் கொண்டு வருடாந்த மகோற்சவம், சதுர்த்தி, சங்கடஹர சதுர்த்தி, பிள்ளையார் கதை, கந்தசஷ்டி நவராத்திரி, சிவராத்திரி, திருவெம்பாவை, வரலஷ்மி விரதம், புரட்டாதிச் சனி, திருக்கார்த்திகை போன்ற விரதங்களும், உற்சவங்களும் சிறப்பாக நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆலயத்தின் ராஜகோபுரத்திற்கான ஆரம்பத்தளமானது எமது முன்னோராலேயே அமைக்கபட்டமை. இன்று அழகுற மிளிர்ந்து நிற்கும் ராஜகோபுரத்தின் அமைவுக்கு பிள்ளையார் சுழி போட்டது போல் அமைந்து விட்டது. திரிதள ராஜகோரபுத்துக்கான அடிக்கல்லானது 23.11.2023 அன்றைய நன்னாளில் நாட்டுவதற்கு எம்பெருமானின் அருள் கிட்டியது.

எம்பெருமான் விநாயகப் பெருமானின் திருவருள் துணையுடன் ராஜகோபுரமும் மணிமண்டபமும் எழிலுற அமைக்கப்பட்டமை சப்பச்சிமாவடிக் கிராமத்தின் அழகுக்கு மெருகூட்டியது என்றால் மிகையாகாது.

ஆலயத்தின் பிரதான வாயிலில் கம்பீரமாக உயர்ந்து நிற்பது ராஜகோபுரமாகும். எங்கே இருந்து பார்த்தாலும் கம்பீரமாகக் காட்சி தருவது இதன் சிறப்பம்சமாகும். கோபுர அடியில் நின்று உச்சியைப் பார்த்தால் பிரமிப்புக் கலந்த மகிழ்ச்சி தானாக தொற்றிக்கொள்ளும். இறைவனின் ஸ்தூல வடிவமே கோபுரமாகும். இறைவன் கோபுரமாக உயர்ந்து நின்று நாம் செய்யும் ஒவ்வொரு செயல்களையும் கண்காணிப்பதாக தோன்றும். இறைவன் பரமாத்மாவாக இரட்சிக்க நாம் சிறியவர் என அமைதி, பணிவு, போன்ற தன்னடக்க குணங்களை எடுத்துக் காட்டுகிறது.

மெய்வருத்தம் பாரார், கண்துஞ்சார், பசிநோக்கார் என சிற்பக் கலைஞர் சிற்பக சிந்தாமணி ஸ்தபதி நவரத்தினம் கங்கைரூபன் குழுவினரால் திரிதள ராஜகோபுரம் அழகுற வடிவமைக்கப்பட்டுள்ளது.

அந்தணப் பெருந்தகைகள், ஸ்தாபகர் குடும்பத்தினர், தர்மகர்த்தா சபையினர், சப்பச்சிமாவடியூர் அடியார்கள், புலம் பெயர் அடியவர்கள், நலன் விரும்பிகள் எல்லோரது பங்களிப்புடனும் திரிதள ராஜகோபுரம் சிறப்புற அமையப் பெற்றது பெருமகிழ்ச்சியாகும்.

ஆலயத்தின் வளர்ச்சியில் பெரிதும் அக்கறை கொண்டவரும், ஆலயத்தின் முன்னைய மகோற்சவ பிரதம குருவாகவும் திகழ்ந்தவருமான சிவஸ்ரீ குமார ஸ்ரீகாந்தக் குருக்கள் தலைமையில், சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்களினதும், சிவஸ்ரீ செ. பரமானந்தக் குருக்களினதும் ஆசிகளுடன் நாளைய தினம் (03.02.2025) நூதன திரிதள ராஜகோபுர கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கைகூடியுள்ளது. இந்தக் கும்பாபிஷேகமானது ஆலயத்தின் மணவாளக்கோல நன்னாளில் நடைபெறுவது சிறப்பம்சமாகும்.

அந்தணப் பெருந்தகைகள், ஸ்தாபகர் குடும்பத்தினர், தர்மகர்த்தா சபையினர், சப்பச்சிமாவடியூர் அடியார்கள் அனைவரும் மனம் குதூகலத்துடன் பக்திப் பரவசமாகி கும்பாபிஷேகம் அமையத் திருவருள் பாலித்த அனைத்து சக்திகளுக்கும் நன்றி கூறுகின்றனர்.

**தொகுப்பு**
**திருமதி வாணி கலாபன்**

**அனுசரணை: சண்முகம் அன் சன்ஸ் கண்டி வீதி, சாவகச்சேரி.**

**குறிப்பு:** அடியார்கள் கும்பாபிஷேகத்திற்கு தேவையான பால், தயிர், இளநீர், அபிஷேகத்திரவியங்களை எம்பெருமானுக்கு வழங்கி எம்பெருமானின் திருவருளைப் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுக்கின்றோம்.

**சப்பச்சி மாவடி - சாவகச்சேரி** **ஆலயதர்மகர்த்தா சபை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

K.K.S Road இலிருந்து 100 மீற்றர் தூரத்தில் வங்களா ஒழுங்கையில் 8 பரப்பு, 11 குளி வீட்டுடன், வளவு விற்பனைக்கு உண்டு. வாங்குபவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**074 094 1337**

(CR/44255) J-1

## மணமகள் தேவை

1991, இந்து, ஆயிலியம், ACCOUNTANT
பூர்வீகம் - புலோலி, வதியுமிடம் - U.K
மணமகன் பதிவு இல: 11154.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
**www.EQMarriageService.com**

(CS/29722B) J-1

## ஆசிரியர் தேவை

கிற்றார் (Guitar) சிறந்தமுறையில் படிப்பிப்பதற்குரிய ஆசிரியர் தேவை.

**077 622 6091**

(CS/2408) J-1

## விஞ்ஞான வகுப்பு

தரம் 6 - 11 வரையிலான (தமிழ் மொழி மூலம்) தங்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.

**077 393 6964, 075 062 3675**

(CS/57374) J-1

## மணமகன் தேவை

1995, இந்து, றோஹினி, TEACHER
பூர்வீகம் - கிளிநொச்சி, வதியுமிடம் - யாழ்ப்பாணம்
மணமகள் பதிவு இல: 11215.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
**www.EQMarriageService.com**

(CS/29722A) J-1

## மணமகன் தேவை

நட்சத்திரம் - சதயம்.
D.O.B - 23.01.1996,
Qualification - BSc Hons Computer Science, Following MSc in Computer Science.
Occupation - Software Engineer
கிரகபாவம் - 18 1/4, 10 சூரியன் செவ்வாய்.

**076 732 1180**

(CS/2416) J-1


# பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 06 . 06 . 1947



உதிர்வு 24 . 01 . 2015

## அமரர் நாகேந்திரம் பேரின்பநாயகம்

### திதி: சதுர்த்தி

**காலத்தின் கரங்களில்:**

பத்து ஆண்டுகள் கடந்தும்,
உங்கள் நினைவு இன்னும் உயிர்ப்பாய் இருக்கிறது
ஒவ்வொரு முறையும் நினைக்கும் போதும்,
உங்கள் அன்பு மீண்டும் மீண்டும் பிறக்கிறது.

நீங்கள் விட்டுச்சென்ற பாதை,
எங்கள் வாழ்வின் வழிகாட்டியாய் இருக்கிறது
ஒவ்வொரு முறையும் நினைக்கும் போதும்,
உங்கள் புன்னகை மட்டும் மீண்டும் வருகிறது

உங்கள் பேச்சு, உங்கள் சிரிப்பு,
ஒவ்வொரு நொடியும் எங்களோடு இருக்கிறது.
வானத்தின் நட்சத்திரமாய் நீங்கள் பிரகாசிக்கிறீர்கள்,
இரவின் அமைதியில் எங்களைத் தேற்றுகிறீர்கள்

கடந்த காலம் கண்ணீராய் வழியும்,
ஆனால் உங்கள் புன்னகை இன்னும் மின்னுகிறது
பிரிவின் வாசல் தாண்டியும்,
உங்கள் அன்பு எங்களோடு நிற்கிறது

உங்கள் ஆன்மா என்றும் சாந்தியடைய
எங்கள் பிரார்த்தனைகள் உங்களோடு இருக்க,
என்றென்றும் நீங்கள் அமைதியாய் வாழ,
இனறவனை இதயத்தால் வேண்டுகிறோம்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி


என்றும் நினைவில்
**உங்கள் மனைவி, மக்கள், மருமகன், பேரன்.**

43, ஒட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம்.

(CS/57382) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 07 . 1953



மறைவு 31 . 01 . 2025

## குலசிங்கம் அமரகுலசிங்கம்

உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குலசிங்கம் அமரகுலசிங்கம் அவர்கள் நேற்றுமுன்தினம் (31.01.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்**
**077 444 2675**

(CS/57383) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 03 . 1955



மறைவு 01 . 02 . 2025

## குலசேகரம் கமலநாதன்

பண்டத்தரிப்பு செட்டி குறிச்சியை பிறப்பிடமாகவும் தாவடி தெற்கினை வசிப்பிடமாகவும் கொண்ட குலசேகரம் கமலநாதன் அவர்கள் நேற்று (01.02.2025) சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குலசேகரம்-சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்-நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கலாவதியின் அன்புக்கணவரும், காயத்ரி (பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புத் தந்தையும், லோகசவுந்தரன் (அதிபர், மயிலிட்டி றோ.க.பாடசாலை) அவர்களின் அன்பு மாமனாரும், டிலக்ஷிகா, ஹேம்நாத் ஆகியோரின் அன்புப் பேரனும், கமலாசனி (ஓய்வு பெற்ற ஆசிரியர்) காலஞ்சென்ற வசந்தாதேவி (மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்), ரங்கநாதன் (ஓய்வு பெற்ற முகாமைத்துவ அலுவலர்), உமாதேவி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2025) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 233 6307**

(CS 57385) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
03 . 03 . 1931

மறைவு
03 . 01 . 2025



## திருமதி சுகிர்தரத்தினம் சண்முகநாதன்

(முன்னாள் நீதிமன்ற மொழிபெயர்ப்பாளரும், சிங்கள மொழி ஆசிரியரும்)

காலஞ்சென்றவர்களான Dr.கனகசபாபதி - செல்லம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - தங்கரத்தினம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சட்டத்தரணி சண்முகநாதனின் மனைவியும், கொழும்பு; "Ratna Villa" சூராவத்தை ; மருதனார்மடம் ஆகிய இடங்களை வதிவிடங்களாகவும் கொண்ட திருமதி சுகிர்தரத்தினம் சண்முகநாதன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (02.02.2025) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் இல்லத்திலும் நடைபெறும். அன்றைய தினம் முற்பகல் 11.30 மணியளவில் **சுன்னாகம் சூராவத்தை முத்துமாரியம்மன் ஆலய இராஜ ராஜேஸ்வரி மண்டபத்தில்** அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மதிய போசன நிகழ்வும் நடைபெற இருக்கின்றது. இந் நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவை அறிந்து நேரிலும் தொலைபேசி மூலமும் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையம் சமர்ப்பித்து அஞ்சலி செய்தவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும் அன்னார் சுகவீனமாக இருந்த வேளையில் பல வகைகளில் உதவி புரிந்த இணுவில் Mclead Hospital வைத்திய அதிகாரிகள், தாதி உத்தியோகத்தர்கள் மற்றும் வைத்தியசாலை ஊழியர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**சூராவத்தை,**
**சுன்னாகம்.**

**குடும்பத்தினர்.**
**தொ.பே:** 077 610 1058 / 077 715 9160

(Cs.57354) (N.1)

# கட்டடம் வாடகைக்குத் தேவை

யாழ். நகர் பகுதியில் பிரதான வீதியை முகப்பாகக் கொண்ட வாகன தரிப்பிட வசதியுடன் வியாபார நோக்கத்துக்காக 600 முதல் 1000 சதுர அடியுடன் கொண்ட கட்டடம் உடன் வாடகைக்குத் தேவை.

தொடர்பு:- **077 523 6311**

(CS/57375) J-1

# வேலைவாய்ப்பு

**யாழில் இயங்கும் சுப்பர் மார்கட்டுக்கு கீழ்வரும் ஆட்கள் தேவை.**

1. Computer Billing + Cashier (Male/ Female)
2. Sales Assistant (உதவியாளர்)

வயது எல்லை 18 - 35

யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

விபரங்களுக்கு:- **077 419 5209**

(CS/2415B) J-1

**மாதகல் புனித லூர்து அன்னை திருத்தலத் திருவிழா**
**16.02.2025**

**கடைகளுக்கான இடங்கள் வழங்கல்**

16.02.2025 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள மாதகல் புனித லூர்து அன்னை திருத்தல திருவிழாவின் போது வியாபார நடவடிக்கையில் ஈடுபடும் வியாபாரிகளுக்கு கடைகளுக்கான இடங்கள் 04.02.2025 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு வழங்கப்படவுள்ளது.

கடைகளுக்கான இடங்களைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் மாதகல் புனித லூர்து அன்னை திருத்தலத்திற்கு உரிய நேரத்திற்கு சமுகம்தந்து தங்களின் கடைகளுக்கான இடங்களை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**மேலதிக தொடர்புகளுக்கு :**
075 913 1987 / 076 498 9197 இலக்க தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்புகொள்ளலாம்.

**பங்குத்தந்தை,**
**மாதகல்.**

(CS/57371) J-1

## மோதல்!

சூடானில் இராணுவத்துக்கும் துணை இராணுவக் குழுக்களுக்கும் இடையில் இன்று இடம்பெற்ற மோதலில் 58 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## தாக்குதல்!

உக்ரைன் மீது இன்றும் ரஷ்யா ஆளில்லா விமானத் தாக்குதல்களை நடத்தியுள்ளது. இதில் ஆறு பேர் உயிரிழந்துள்ளனர் என்று உக்ரைன் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (ம)

## விடுவிப்பு!

வெனிசுலாவால் பல்வேறு காரணங்களுக்காகக் கைதுசெய்யப்பட்டிருந்த அமெரிக்கர்களில் ஆறு பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று வெள்ளைமாளிகை அறிவித்துள்ளது. (ம)

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் இரத்தினம்மா



பிறப்பு 16.03.1922

இறப்பு 30.01.2025

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இரத்தினம்மா கடந்த (30.01.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னாச்சி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, பொன்னுத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, சின்னத்தங்கம், இராசையா, அம்மாகுட்டி, தங்கம்மா, சின்னத்துரை ஆகியோரின் மைத்துனியும், பரமேஸ்வரி, கமலேஸ்வரி, இராஜேஸ்வரி, பஞ்சலிங்கம், சாந்திக்குமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான முத்துலிங்கம், சண்முகலிங்கம், வசந்ததேவன் மற்றும் சிவமலர் ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவபாதசுந்தரம் - சுபாசினி, ரவிச்சந்திரன் - யாழினி, சிவாஜினி - சிவராசா, பிரபாகரன் - தர்சிகா, காலஞ்சென்ற ஜெயகிருஷ்ணா மற்றும் றமணன், ஜெயவதனா - ராகுலன், பகீரதன், சாமினி - சுரேஸ், சுஜீவன் - சிவராணி, சுரேஸ் - மாலினி, கவிதா - அகிலன், கயனி - நிரூபன், கெவின், கேமினி - மோகனரூபன், நிஷாலினி, பபிசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சாருயன், சாரா, சகானா, ரவீனா, ஆகாஷ், அபினயா, கீர்த்திகா - சிமாலன், பிரகலாதவன், ஆகீஷன், மீனுஜா, அஸ்வின், ஆர்யா, வர்ஷா, வருண், துஷான். மீதுஷா, திஸ்யன், றிஸ்விகா, பிரசன்னா, ஜஸ்வினி, ஜஸ்மிரா, கஸ்விகா, தனுசிக், யதுன், லோகிதன். அபிநயா ஆகியோரின் அன்புப் பூட்டியும், றெஜாலக்ஸ்மியின் கொள்ளுப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.02.2025) திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டை ஆலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கொட்டக்காடு வீதி,**
**கோண்டாவில் கிழக்கு,**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**சு.சாந்திக்குமார் (மகன்)**

(CS/57380) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AIA ஸ்ரீலங்காவின் பணிப்பாளர் சபைக்கு இந்திரஜித் அசேல விக்கிரமசிங்க நியமனம்



ஜனவரி 21, 2025: AIAஇன்சுரன்ஸ் லங்கா லிமிடெட், இலங்கை காப்பீட்டு ஒழுங்குமுறை ஆணையத்தின் ஒப்புதலுக்கு உட்பட்டு, ஜனவரி 07, 2025 முதல் பணிப்பாளர் சபைக்கு சுயாதீன நிர்வாகமற்ற பணிப்பாளராக இந்திரஜித் அசேல விக்ரமசிங்கவை நியமித்ததாக அறிவித்துள்ளது.

திரு. விக்ரமசிங்க, ஆகஸ்ட் 15, 2024 அன்று ஓய்வுபெறும் வரை ஒன்பது ஆண்டுகளுக்கும் மேலாக யூனியன் வங்கியின் முன்னாள் பணிப்பாளர் தலைமை நிர்வாக அதிகாரியாக இருந்தார். உள்நாட்டு மற்றும் பன்னாட்டு நிறுவனங்களில் நிதி சேவைகள் மற்றும் FMCG துறைகளில் பணியாற்றிய 35 ஆண்டுகளுக்கும் மேலான மூத்த தலைமைத்துவ / நிர்வாக அனுபவத்தைக் கொண்டுள்ளார். ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நிர்வாக முதுகலை நிறுவனத்தில் MBA பட்டம் பெற்ற இவர், ருமு பட்டய சந்தைப்படுத்தல் நிறுவனத்தின் உறுப்பினராகவும் உள்ளார். சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம், ருமு ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் சைட் வணிகப் பள்ளி மற்றும் INCEAD (பிரான்ஸ்) ஆகியவற்றில் நிர்வாகக் கல்வித் திட்டங்களைப் பயின்றுள்ளார். அவர் ஆக்ஸ்போர்டு இங்கிலாந்து பல்கலைக்கழகத்தின் ஆக்ஸ்போர்டு வணிக முன்னாள் மாணவர் உறுப்பினராக உள்ளார்.

யூனியன் வங்கியின் பணிப்பாளர் /தலைமை நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்படுவதற்கு முன்பு, அவர் NDB வங்கியின் தலைமை செயற்பாட்டு அதிகாரியாகப் பணியாற்றினார், அங்கு சில்லறை வங்கி, பெரு நிறுவன வங்கி, SME வங்கி மற்றும் திட்ட நிதி உள்ளிட்ட அனைத்து வணிகப் பிரிவுகளுக்கும் பொறுப்பாக இருந்தார். முன்னணி பன்னாட்டு நிறுவனமான ரெக்கிட் மற்றும் கோல்மனுடன் நிதிச்சேவைத் துறையில் சேருவதற்கு முன்பு, அவர் ஏராளமான மூத்த நிர்வாகப் பதவிகளையும் வகித்துள்ளார். அவர் நிதி குறைதீர்ப்பு ஆணையர் இலங்கை (உத்தரவாதம்) தலைவராகவும், இலங்கை கடன் தகவல் பணியகத்தின் பணிப்பாளராகவும் பணியாற்றியுள்ளார்.

AIA இன்சுரன்ஸ் லங்காவின் தலைவர் பிஸ்வா மிஸ்ரா மற்றும் AIA வின் பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி சத்துரி முனவீர ஆகியோர் திரு. விக்கிரமசிங்கவை சபைக்கு வரவேற்றதுடன், பல தொழிற்துறைகளில் பரந்த அனுபவத்துடன் கூடிய உயர் மதிப்பிற்குரிய கூட்டாண்மைத் தலைவராக அவரது நிலைப்பாட்டை எடுத்துரைத்தனர். நிர்வாகமற்ற இயக்குநராக தனது நிபுணத்துவம் மற்றும் நுண்ணறிவுகளைப் பயன்படுத்தி, வணிகத்தை இன்னும் பெரிய வெற்றியை நோக்கிக் கொண்டுசெல்வதற்கு விக்கிரமசிங்கவின் திறமையில் அவர்கள் நம்பிக்கை வெளியிட்டனர்.

ஈழத்து நாடகப் பிதாமகன்

# குழந்தை ம.சண்முகலிங்கத்துக்கு நினைவரங்கு நிகழ்வு இன்று!

யாழ்ப்பாணம், பெப். 2

ஈழத்து நாடகத்துறையின் பிதாமகன் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் நினைவரங்கு நிகழ்வு கொக்குவிலில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

தாயகம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் க.தணிகாசலம் தலைமையில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினதும், யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரியினதும் விரிவுரையாளர்கள் கலந்துகொண்டு கருத்துரைகளை ஆற்றவுள்ளனர். அத்துடன் நாடக ஆர்வலர்களின் அஞ்சலிக் குறிப்புரைகளும் இடம்பெறவுள்ளன.

(ம25,66)

VACANCY- வேலைவாய்ப்பு

WALK-IN-INTERVIEW

அரச நிறுவனம் ஒன்றுக்கான பின்வரும் பதவிகளுக்காக நேர்முகத்தேர்வு யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 05.02.2025 புதன்கிழமை காலை 9.00-12.00 மணிவரை இடம்பெறவுள்ளது.

பதவிகள்

1. நிர்வாக அலுவலர்-பெண்
2. இணைப்பாளர்கள்-ஆண்/பெண்
3. விடுதி பராமரிப்பாளர்-பெண்

வயது: 25-35. சம்பளம்: ரூபாய் 25000/= இலிருந்து

தொடர்பு: 077 570 4893

# வாழைப்பழம் விலை சரிவு

யாழ். குடாநாட்டில் வாழைப்பழத்தின் விலை சரிவடைந்துள்ளது.

போதியளவு வாழைக்குலைகள் சந்தைக்குக் கொண்டுவரப்படுவதால் அவற்றின் விலை குறைவடைந்துள்ளதாகச் செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒரு கிலோ கதலி வாழைப்பழம் 50 ரூபாவாகவும், இதரை 80 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன.

(ச- 25, 17)

18 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சூசைப்பிள்ளை வேதநாயகம்

நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன் என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்

யோவான் 11.25

அப்பா! அன்பினால் எம்மை
அரவணைத்து பாசத்தால்
எம்மைத்தாங்கி இன்பத்தையும்
துன்பத்தையும் எமக்கு புரியவைத்து
எம்மை நல் வழியில் வழிகாட்டிய
எங்கள் அன்பு அப்பாவே!
இன்றுடன் உங்களைப் பிரிந்து
ஆண்டுகள் பதினெட்டு ஆனதுவோ!!
என்றும் உங்கள் நினைவுகளுடன்

தோற்றம் 08.02.1942
மறைவு 02.02.2007

மகன்
வே.சுரேந்திரகுமார் (சுரேன்)



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** அரசாங்கக் காரியங்கள் இழுபறியாகக்கூடும். சகோதரவகையில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். தந்தையின் நீண்டநாள் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. அந்நியோன்னியம் அதிகரிக்கும்.

**இடபம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. வெளியூர் செல்ல நேரிடும்போது கைப்பொருள்களை கவனமாகப் பார்த்துக்கொள்ளவும்.

**மிதுனம்:** இன்று எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தாய்வழியில் சில சங்கடங்களைச் சந்திக்கநேரிடும். சிலருக்குத் தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். பிற்பகலுக்கு மேல் தொடங்கும் முயற்சி சாதகமாக முடியும்.

**கடகம்:** பிற்பகலுக்கு மேல் எதிலும் நிதானமாக செயற்படவும். வாழ்க்கைத்துணை வழியில் செலவுகள் ஏற்படக்கூடும். உறவினர் வருகையால் வீட்டில் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது.

**சிம்மம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சகோதரவகையில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். தந்தைவழி உறவினர்களால் சுபச்செலவுகள் ஏற்படக்கூடும். உறவினர்களின் சந்திப்பு சங்கடம் தருவதாக இருக்கும்.

**கன்னி:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். சகோதரர்களால் ஆதாயம் உண்டு. சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**துலாம்:** தாய்வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கக்கூடும். பழைய கடன்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது. சிலருக்கு மகான்களின் தரிசனமும் ஆசிகளும் கிடைக்க வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம்:** சிறு அளவில் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படக்கூடும். சிலருக்கு எதிர்பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும். உறவினர்கள் வருகை உற்சாகம் தரும்.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். பரபரப்பாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சி வெற்றிகரமாக நிறைவேறும். சகோதர வகையில் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும்.

**மகரம்:** சகோதரர்கள் உதவிகேட்டு வருவார்கள். குடும்பம் தொடர்பான வேலைகளுக்காக பயணம் மேற்கொள்ளநேரிடும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டாகும்.

**கும்பம்:** கணவன்மனைவிக்கிடையே இருந்த கருத்து வேறுபாடு நீங்கி அந்நியோன்னியம் உண்டாகும். குலதெய்வக் கோயிலுக்குச் சென்று நேர்த்திக் கடனை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**மீனம்:** செலவுகள் அதிகரிக்கும் நாள். ஆனால், தேவையான பணம் கையிலிருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். நவீனரக ஆடைகளை வாங்கி மகிழும் வாய்ப்பு ஏற்படக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு கூடுதல் நிதி!

இந்தியாவின் பட்ஜெட் நேற்று சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில், இலங்கைக்கான ஒதுக்கீட்டை இந்தியா அதிகரித்துள்ளது. இந்தியாவின் இந்த வருடத்துக்கான பட்ஜெட் இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனால் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்டது. இதில், அயல் நாடுகளுக்கான இந்தியா வருடாந்தம் ஒதுக்கும் நிதி 600 கோடி ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி கடந்த வருடம் 4 ஆயிரத்து 883 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருந்த நிலையில், இந்த வருடம் 5 ஆயிரத்து 483 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் இலங்கைக்கு 245 கோடி ரூபாவே ஒதுக்கப்பட்டிருந்த நிலையில், இந்த வருடம் அந்தத் தொகை 300 கோடி ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. (ம125)


## சிறு குறிஞ்சா தேவை

மருந்து பொருட்களின் உற்பத்திக்கும், மருத்துவ ஆய்வுத் தேவைகளுக்கும் பெருமளவில் சிறு குறிஞ்சா (Gymnema Lactiferum) தேவை

தொடர்பு: 077 805 2520

## வீடு வாடகைக்கு உண்டு

கோண்டாவில் இருபாலை வீதியில் இலக்கம் 352/6 இல் 7 அறைகள் மற்றும் இணைந்த குளியலறைகள், பெரிய ஹோல், சமையலறை கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. (நிறுவனத்திற்கு வழங்கப்படும்).

(CS/57369) J-1

077 350 4910, 077 055 2445

## பல் முக சீராக்கல் சிகிச்சை (Orthodentic treatment)

பல் முக சீராக்கல் நிபுணர் Dr. p.sathiyakumaran (Consultant orthodontist)

தொடர்ந்தும் பின்வரும் நிலையங்களில் வருகை தருகிறார்

1. ரோயல் மெடிக்கல் கிளினிக் -0768788148
2. யாழ் மதர் கெயார்-0212219595
3. STS வைத்தியசாலை -0212226600
4. நொதேர்ன்வைத்தியசா லை-0212219988

இங்கு aligner சிகிச்சையும் வழங்கப்படுகிறது

## வேலை வாய்ப்பு

கட்டடநிர்மாண நிறுவனத்திற்கு பின்வரும் வேலைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆர்வம் உள்ளவர்கள் தங்களது சுயவிவரக்கோவையை 07.02.2025 திகதிக்கு முன்னர் கிடைக்க கூடிய வகையில் கீழ் உள்ளமுகவரிக்கு அனுப்பிவைக்கவும்

1. தொழில்நுட்ப உத்தியோகத்தர் -electrical /CIVIL /QS(HND, NCT - OR Equivalent with experience)
2. விற்பனை பிரதிநிதி மற்றும் களஞ்சியப் பொறுப்பாளர்.

(க.பொ. த உயர்தரம், சாரதி அனுமதிப்பத்திரம், கட்டட பொருட்கள் சம்பந்தமான அறிவுள்ளவர்கள் விரும்பத்தக்கது)

No: 09, Nanthavil Lane, Thavady

Email: vacancynsc@gmail.com

WhatsApp: 077 712 0945

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

மல்லாகம் KKS Road இல், அமைந்துள்ள ஒழுங்கையில் இரண்டாவது வீடு 2.5 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. 3 அறைகள், குளியலறை, சமையலறை இதர வசதிகளுடன்.

076 744 8099


## தரமற்ற புளி விற்பனை

யாழ். குடாநாட்டில் தரம் குறைவான புளி விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் விசனம் தெரிவித்துள்ளனர். புளிக்குத் தொடர்ந்து தட்டுப்பாடு நிலவி வருகின்றது. ஒருகிலோ புளி 2 ஆயிரம் ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகிறது. இந்த நிலையிலேயே வர்த்தக நிலையங்களில் கலப்படமான தரம் குறைவான புளி விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் சுட்டிக்காட்டியுள்ளனர். (ச-25.17)


## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் வேலை செய்யக்கூடிய ஆண்/பெண் வேலையாட்கள் தேவை

1. House keeping (at hotel) சம்பளம் -1500/ day
2. Sales Person (Covering Shop) சம்பளம் -1200/ day

தொடர்பு: 077 373 4109

## இணைப்ப இணையத்தளம் வழங்கும் அடுத்த தலைமுறை திருமண சேவை

தமிழ் உலகிலேயே முதன் முறையாக நவீன தொழில்நுட்பங்கள் கொண்டு அறிமுகமாகின்றது இணைப்ப நவீன திருமண சேவை. ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வரன்களை உங்கள் தெரிவிற்கேற்ப அணுகி, தொடர்பு கொண்டு உங்கள் துணைய்யை தெரிவுசெய்யமுடியும்.

பதிவுக் கட்டணம் இல்லை இப்பொழுதே இணையுங்கள் இணைப்பவுடன்

Ts&Cs apply

Www.inaipa.com

(CS/2119) J-1

## LOOKING FOR COMMERCIAL SHOWROOM SPACE IN JAFFNA TOWN

**Required Space:**

- 200 to 400 Sq.Ft
- Suitable for retail or showroom purposes
- Parking for customers
- Easy accessibility

## LOOKING FOR RENT: TWO ROOMS WITH ATTACHED BATHROOMS

**Location :** Near Jaffna Town or Suburbs

We are seeking a two-room accommodation with attached bathrooms and space to park one lorry, located in or around Jaffna town or the suburbs.

**Please Contact**

**TP: 0777 86 20 45**

**Email: info@globalvinyl.lk**

## வாடகைக்கு உண்டு

- மனோகரா தியேட்டர் K.K.S வீதியில் அமைந்துள்ள 9 அறைகள் கொண்ட வீடு கம்பனிகளுக்கு மட்டும் வாடகைக்கு விடப்படும்.
- Campus வளாக சூழலில் அமைந்துள்ள வீடு படிக்கும் மாணவர்களுக்கு மட்டும் வாடகைக்கு வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:

076 262 7485, 076 262 7549

077 267 7818, 077 358 3714

(CS 2423) V-1

## ஆட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் பிரபல தளபாட விற்பனை நிலையத்திற்கு தளபாடங்கள் Home Delivery செய்வதற்கு, ஏற்றி இறக்குவதற்கு ஆட்கள் தேவை.

(தகுந்த சம்பளம் வழங்கப்படும்)

077 254 3569, 021 222 8367


## ஆமைகள் இறப்பு

வடமராட்சி கிழக்குக் கடற்பகுதியில் சில நாள்களாக ஆமைகள் இறந்த நிலையில் கரையொதுங்கிவருகின்றன. வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை மூன்று ஆமைகள் இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளன. கடல் கொந்தளிப்பாக காணப்படுவதால் காயமடைந்து உயிரிழக்கும் நிலையில் அவை கரையொதுங்கலாம் என்று அப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர். (ச-22.27)


## இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்

பிரிவு -59

- diploma in English /spoken english
- diploma in ict /AI /cyper security
- diploma in Singala
- diploma in psychology & counseling
- diploma in business management
- diploma in caregiver
- diploma in political science
- diploma in digital marketing
- diploma in computerized accounting

ஆரம்பம் :-08/02/2025 10:00 AM

காலம்: 3 மாதங்கள்

பெறுமதி மிக்க சான்றிதழ்


IPS To Your Future

Thirunelvely

074 234 9120

(CS 935) V-1


## மரண அறிவித்தல்



தோற்றம் 16 . 12 . 1944

மறைவு 01 . 02 . 2025

### தம்பு கந்தையா இராஜேந்திர ராவ்

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், செம்மணி வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு கந்தையா இராஜேந்திர ராவ் அவர்கள் நேற்று (01.02.2025) சனிக்கிழமை அதிகாலை 4.40 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சீதாலட்சுமி தம்பதியரின் ஏக புத்திரனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற விமலாதேவி அவர்களின் அன்புக் கணவரும், ஜனந்தன், ஜயானந்தி, (மக்கள் வங்கி - சுன்னாகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மோசெஸ் பத்மலால் (சுகாதார அமைச்சு - வடக்கு மாகாணம்), துஷானி (மாகாண சுகாதாரத் திணைக்களம் - வடக்கு மாகாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், தர்ணிகா, லிதுர்ஷிகன், ருத்விக், லக்ஷிவ் ஆகியோரின் பேரனும், சுசீலாதேவி, வத்சலா (ஜேர்மனி), கௌசலா (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சந்திராதேவி, இந்திராதேவி, தனபாலசிங்கம், காலஞ்சென்றவர்களான நவரட்ணம், துரைசிங்கம், இராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.02.2025) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப 10.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இல 23/01 வெயிலுகந்த பிள்ளையார் கோவில் ஒழுங்கை, செம்மணி வீதி, நல்லூர்.

தகவல் : குடும்பத்தினர்

077 715 6106, 077 221 0365

(CS/57386) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசாங்கத்துக்கு...

அமைச்சர் பிமல் ரத்நாயக்க மேலும் தெரிவித்தாவது:-

இலங்கை மக்கள் புதிய வரலாறை எழுத ஆரம்பித்துள்ளனர். புதிய மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக ஒன்றுபட்ட இந்த மக்களுக்கு நாம் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். எமது மக்கள் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, மலையகம் என அனைத்தையும் ஒன்றிணைத்துள்ளனர். சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்று என்பதை கடந்த இரண்டு பிரதான தேர்தல்களின்போது காண்பித்துள்ளனர்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தால் இந்த இலக்கை அடையமுடிந்துள்ளது. மக்கள் ஒன்றாக இணையும்போது எதிர்க்கட்சியினர் கூட்டுச்சேர முயற்சிக்கின்றனர். பிரிந்து செயற்பட்ட சஜித், ரணில், மஹிந்த, ரவி கருணாநாயக்க, விமல் வீரவன்ஸ, மனோ கணேசன் உள்ளிட்ட அனைவரும் ஒன்றிணைந்துள்ளனர். எதிரிகளாக செயற்பட்டவர்கள் மீண்டும் நண்பர்களாக மாறியுள்ளனர்.

அன்று ரணில் விக்கிரமசிங்க மஹிந்தவுக்கு எதிராக வாக்களிக்குமாறு கோரினார். சஜித், சுமந்திரன் ஆகியோர் மஹிந்தவுக்கும் ரணிலுக்கும் எதிராக வாக்களிக்குமாறு கோரினார்கள். இந்த நாட்டை வங்குரோத்து அடையச் செய்த குழுவினர் இன்று மீண்டும் கூட்டுச் சேர்ந்துள்ளனர். மக்களால் கட்டியெழுப்பப்பட்ட இந்த அரசாங்கத்தை எதிரிகளிமிருந்து பாதுகாக்கவேண்டும். எமது இலக்கை அடையும் வரை நாம் அனைவரும் ஒன்றாகப் பயணிக்கவேண்டும் - என்றார். (அ-ம-இ)

## எடை குறைந்த...

நாட்டில் எடை குறைந்த குழந்தைகளின் பிறப்பு வீதம் திடீரென அதிகரித்துள்ளது என்று மருத்துவ நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் சமூக மருத்துவ நிபுணர் கபில ஜயரத்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் எடை குறைந்த குழந்தைகளின் பிறப்பு வீதம் உயர்வடைந்துள்ளது. இதேவேளை, பிறந்து ஒரு வயதை அடைவதற்கு முன்னரே சுமார் 2 ஆயிரத்து 500 குழந்தைகள் ஒவ்வொரு வருடமும் உயிரிழக்கின்றன.

ஆண்டுதோறும் 5 வயதுக்கும் குறைந்த நிலையில் 3 ஆயிரத்து 300 குழந்தைகள் உயிரிழக்கின்றன. அத்துடன், நாட்டில் கர்ப்பம் தரிக்கும் தாய்மார்களில் சுமார் 26 ஆயிரம் பேருக்கு கர்ப்பகாலத்தின் ஆரம்பப் பகுதியில் கருக் கலைவதும் அவதானிக்கப்பட்டுள்ளது - என்றார். (அ-ம-இ)

## 3,827...

ஜனாதிபதி நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்திருந்தார். யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலும் அவர் கலந்துகொண்டார். இதன்போதே, யாழ்ப்பாணத்தில் முழுமை பெறாத வீடுகள் தொடர்பில் அவரிடம் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

இது தொடர்பில் பதில் மாவட்டச் செயலர் தெரிவித்ததாவது:-

2018ஆம் மற்றும் 2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் வீட்டுத்திட்டத் தேவையுடையவர்கள் அடையாளம் காணப்பட்டு முதற்கட்டமாக 50 ஆயிரம் ரூபா நிதி விடுவிக்கப்பட்டது. ஆனால், அந்த வீடுகளை முழுமைப்படுத்த இதுவரை வேறெந்த நிதியும் விடுவிக்கப்படவில்லை. இது தொடர்பில் கடந்த அரசாங்கங்களிடம் சுட்டிக்காட்டப்பட்ட போதிலும் நிதி விடுவிப்புச் சாத்தியமாகவில்லை. இந்தத்திட்டங்களை முழுமைப்படுத்துவதற்கு ஆயிரத்து 350 மில்லியன் ரூபா போதுமானது.

அத்துடன் இரு அங்கத்தவர்கள் கொண்ட குடும்பத்துக்கு 0.6 மில்லியன் ரூபா வீட்டுத்திட்டமும், இரு அங்கத்தவர்களுக்கு மேற்பட்ட குடும்பத்துக்கு ஒரு மில்லியன் ரூபா வீட்டுத்திட்டமும் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட போதிலும், அந்தப் பணிகளும் இன்னமும் முழுமைப்படுத்தப்படவில்லை - என்றார். (அ-ம-125-26)

## மஹிந்தவை...

இலக்குவைத்து தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இதன் பின்னணியில் மற்றுமொரு திட்டமும் உள்ளது. யாரின் தேவைக்காக மஹிந்த இலக்குவைக்கப்படுகின்றார் என்பதை நாம் வெளிப்படுத்துகின்றோம்.

மஹிந்த ராஜபக்சவை கடுமையாக விமர்சிக்கும் நபர் ஒருவருக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. ராஜபக்சக்களை விமர்சிப்பதற்கு அரசாங்கம் அனுசரணை வழங்குகின்றதா என்ற சந்தேகமும் எழுகின்றது. ராஜபக்சக்களை இலக்குவைத்துள்ள யூடியூப்பர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும். ராஜபக்ச நாமத்தை நாசமாக்குவதற்குரிய ஒப்பந்தத்தைச் செயற்படுத்தும் யூடியூபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இன்னும் சில மாதங்களில் புதிய அரசமைப்புக் கொண்டுவரப்படவுள்ளது. அது சமஷ்டி கட்டமைப்பாக இருக்கக்கூடும். ஜனாதிபதி யாழ்ப்பாணம் சென்றிருந்தார். தமிழர்களுடன் சிரித்துப் பேசுகின்றார். மஹிந்த ராஜபக்சவின் புண்ணியத்தால்தான் ஜனாதிபதியால் யாழ்ப்பாணம் சென்று, சிரித்துப் பேச முடிகின்றது.

சமஷ்டி அரசமைப்பை கொண்டுவருவதற்கு முன்னர் ஓர் அணியை மௌனிக்க வைக்கவேண்டும். அந்த அணிதான் மஹிந்த ராஜபக்ச அணி. ஒற்றையாட்சிக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட மஹிந்த ராஜபக்சவுக்கான பாதுகாப்பு நீக்கப்பட்டது. தற்போது அவரை உளரீதியில் தாக்கமுற்படுகின்றனர். மஹிந்த தொடர்பில் மக்கள் மத்தியில் தவறான விம்பத்தை தோற்றுவிப்பதற்கு முற்படுகின்றனர். மக்கள் நேசிக்கும் ஒரு தலைவரை நாசப்படுத்திவிட்டால், இலகுவில் சமஷ்டி அரசமைப்பைக் கொண்டுவரலாம் என்பதே ஆட்சியாளர்களின் நோக்கம்' - என்றார். (அ-ம-44)

## கடல்...

அமைச்சர் சந்திரசேகரன் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் கடல்வளத்தைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுப்பது எமது அரசாங்கத்தின் முதன்மை நோக்கங்களுள் ஒன்றாகும். அதில் எந்தவொரு விட்டுக்கொடுப்பையும் சமரசத்தையும் செய்வதற்கு நாங்கள் தயாராக இல்லை. எனவே, நாட்டின் கடற்பகுதிகளையும், கடல் வளத்தையும் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அல்லைப்பிட்டி பகுதியில் அண்மைக் காலமாக அதிகரித்துள்ள கடலரிப்புக்கு நடவடிக்கை எடுக்கவேண்டியதன் அவசியம் தொடர்பிலும், மீனவர்கள் இளைப்பாறுவதற்கு மண்டபங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் மக்களால் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது. அந்தப் பிரச்சினைகள் தொடர்பிலும் விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் மக்களிடம் தெரிவித்தார்.

நிகழ்வில் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன், மீனவ சங்கத் தலைவர் ஞா.அன்ரன், பங்குத்தந்தை ஜெகன்குமார் கூஞ்ஞ அடிகளார், கிராம அலுவலர் ம.சசிகாந், பிரதேச செயலாளர் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (அ-ம-26-27-125-23)

## அண்ணன்...

மன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் தெரிவித்துள்ளார்.

மாவையின் மறைவு தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள இரங்கற் குறிப்பில் மேலும் உள்ளதாவது:-

அண்ணன் மாவை சேனாதிராஜா தமிழ்த்தேசிய அரசியலில் ஊறித் திளைத்தவர். தமிழ்த்தேசியம் மீதான அவரது பற்று அளந்தெழுத முடியாதது. தமிழ்த்தேசியத்தில் அண்ணன் மாவை சேனாதிராஜாவின் ஈடுபாடு ஐந்தல்ல பத்தல்ல அறுபத்தைந்து ஆண்டுகால வரலாறு கொண்டது.

பொழுதுபோக்குக்காகவும், தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்காகவும், அதிகாரத்துக்காகவும், அரச பாதுகாப்புக்காகவும் அரசியலில் ஈடுபடுவோர் மத்தியில் அண்ணன் மாவை சேனாதிராஜா ஓர் ஆதர்சம். தமிழர்களுக்காக எத்தனை போராட்டங்கள், எத்தனை மறியல்கள், எத்தனை சூடுகள், எத்தனை துன்பங்கள். அத்தனையும் தமிழ்த்தேசியத்தின் மீதான அவரின் அளவற்ற அன்பின் பிரதிபலிப்பே.

'அண்ணன்' என்று 'தமிழர்களின் தம்பி'யால் அழைக்கப்படும் வாய்ப்பு எத்தனை பேருக்கு வாய்க்கும். அந்த வாய்ப்பை வரமாகப் பெற்றவரல்லவா அண்ணன் மாவை. தந்தை செல்வா, அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் ஆகியோரின் நிழலாகவும், தமிழ்த்தேசியத்தின் நியமாகவும் பயணித்த தமிழரசின் பெருந்தலைமைக்கு எனது சிரம் தாழ்ந்த அஞ்சலிகள் - என்றுள்ளது. (அ-ம-இ)

## மாவைக்கு...

நாமல் ராஜபக்ச நேற்று நேரில் அஞ்சலி செலுத்தியுள்ளார்.

இதன்போது, யாழ்ப்பாணம் மாவட்ட பிரதம அமைப்பாளர் கீதநாத், கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் மதனவாசன் மற்றும் கட்சியின் வடமாகாண ஒருங்கிணைப்பாளர்கள் பலரும் நாமலுடன் வருகைதந்து மாவைக்கு தமது அஞ்சலியைச் செலுத்தினார்கள். (அ-ம-27)

## ஆமையுடன்...

என்றும் அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (அ-ம-113)


## மரண அறிவித்தல்

தோற்றம்
24 . 09 . 1948



மறைவு
31 . 01 . 2025

**அன்ரன் ஜோசவ் மரிஸ்ரெல்லா மதுரம்**

யாழ்ப்பாணம் கோவில் வீதியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி அன்ரன் ஜோசவ் மரிஸ்ரெல்லா மதுரம் நேற்று முன்தினம் (31.01.2025) வெள்ளிக்கிழமை காலமாணார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான அம்புறோஸ் டோமினிக் - மேரி யோசப் தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பிலிப் மரியநாயகம் - பிளசம் வேவி தம்பதயின் பாசமிகு மருமகளும், (கலாபூஷணம்) மரியநாயகம் அன்ரன் ஜோசப் (ஓய்வு பெற்ற சித்திர பாட ஆசிரிய ஆலோசகர் கிளிநொச்சி கல்வித் திணைக்களம்) அவர்களின் அன்புக் கணவரும், மரில்டா றூபி பிரான்சிஸ் (கனடா), அஞ்சலோ ஜெயரட்ணம், விக்ரர் இராயரட்ணம் (அவுஸ்ரேலியா), காலஞ்சென்ற வர்களான மரியநாயகம், மேரி ரோஸ், இராஜேந்திரம் பிரான்சிஸ், ஆன் பேளி ஆகியோரின் அன்புச் சகோதரியும், மரியநாயகம் போலின் அன்பு அண்ணியும், காலஞ்சென்றவர்களான பிரான்ஸிஸ், புனிதசிலி மற்றும் மணி பிரான்ஸிஸ், யூலியற், போல் ஜனகலட்சுமி ஆகியோரின் மைத்துனியும், ராஜன், நிலானி, குமார், கலிஸ், ரனிற்றா, லெனிற்ரா கலிஸ்ரா, வசி, கபில், கமில்ரன், மறீன், நிராஜ், கிறிஷான், கிறிஸ்ரா ஆகியோரின் பாசமிகு மாமியும், மிருனாலினி, டிலோஜென், நிருனாலினி ஆகியோரின் பாசமிகு பெரியதாயாரும், குமாார், ஜூனோட், நிக்ஷன் ஆகியோரின் தொட்டம்மாவும், றியானா, றெனோஜன், றெனோ, நிவர்ஷ்திகா, நிரோஜென், ரோஷன், கீத் பிம்சர, இயோன் சிதுஷ ஆகியோரின் பாட்டியும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் நாளை (03.02.2025) திங்கள்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித யுவானியார் ஆலத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித மரியன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

18B கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

(CS/57388) J-1

தகவல் : குடும்பத்தினர்
077 899 5778


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavahanam.org

02.02.2025 ஞாயிற்றுக்கிழமை

# சைவமகாசபை பொதுக்கூட்டம்

அகில இலங்கை சைவமகாசபையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் யாழ். நீராவியடியில் அமைந்துள்ள சைவ பரிபாலன சபை மண்டபத்தில், பௌர்ணமி தினமான எதிர்வரும் 12 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. கூட்டத்தில் உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை சைவ மகாசபையின் பொதுச்செயலாளர் மருத்துவக்கலாநிதி ப.நந்த குமார் தெரிவித்துள்ளார். (ச-25,66)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கோண்டாவில் இராசபாதை வீதியில்
6 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு

- இராசபாதை வீதி முகப்புடன்
- இராசபாதை வீதி சந்தியிலிருந்து 1/2 km தூரம்
- திருநெல்வேலி சந்தை 2 km தூரம்
- யாழ்ப்பாணம் பேருந்து நிலையம் 5.5 km தூரம்
- செம்மண் தரை, நன்னீரூற்று
- 1 பரப்பின் விலை எண்பது லட்சம் (80 லட்சம்)
- இரண்டு பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- நல்ல சூழல், வியாபார நிலையம் அமைப்பதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்.

பார்வையிடும் நேரம் :
காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை

தொடர்பு: 070 290 2338
076 069 1105

(CS/2414) J-1

## வீடு வாடகைக்கு

மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
(3ம் ஒழுங்கை) பஸ் தரிப்பிடத்தில் இருந்து
500m தூரத்தில் வீடு வாடகைக்கு உண்டு.
நிறுவனங்கள், அலுவலகப் பாவனைக்கு ஏற்றது.

தொடர்பு:- 076 523 0665

(CS/57370) J-1

## O/L EXAM 2025

இம்முறை O/L பரீட்சை எழுத உள்ள
மாணவர்களுக்கான விசேட கடந்தகால
விடைத்தாள் வகுப்புகள்

தொடர்புகளுக்கு:
076 205 5169, 076 290 9644

## காணி விற்பனைக்கு

யாழ். சுண்டுக்குளி மோறிஸ் ஒழுங்கை, கொழும்புத் துறை வீதி அருகாமையில் 80m தூரமும் சுண்டுக்குளி பாடசாலை 500m தூரத்திலும் புதிதாக பிரிக்கப்பட்ட
1.4 பரப்பு (1ப - 7கு). 2.8 பரப்பும் (2ப - 14 கு) கொண்ட காணித்துண்டுகள் விற்பனைக்கு உண்டு.

- UDA வீடு கட்டும் அனுமதி உண்டு.
- ஸ்ட்ரீட்லைன், உரிமை, கையளிக்கப்படாமைக்கான நற்சாட்சி சான்றிதழ்கள் உண்டு.
- சிறந்த சூழல்
- அகலமான 15 அடி - 20 அடி பாதை
- மின் இணைப்புக்கான அனுகல் உண்டு.

(தரகர் தேவையில்லை)

076 156 2983, 077 711 5438

(CS/29451) J-1

## கடைகள் விற்பனைக்கு

Face Book, Youtube, Tik tok, Whats app Group, Instagram மற்றும் ஏனைய விளம்பரம் சார்ந்த ஊடகங்களில் விளம்பரப்படுத்தாமல் சுயமாக கடைகள் விற்பதற்கு தரகர் தொழில் செய்யக்கூடியவர்கள் தேவை.

077 688 5392

(CS/57292) J-1

## வாகனம் தேவை

நீங்கள் வைத்திருக்கும் வாகனங்களை pickme சேவையில் இணைத்து மாதம் 100,000/-க்கு மேல் வருமானம் பெறலாம். பதிவு இலவசம்

தொடர்புகளுக்கு:
077 473 7737

## உதவி அர்ச்சகர் தேவை

வவுனியா நகரில் அமைந்துள்ள பிரசித்திபெற்ற ஆலயத்திற்கு ஓர் உதவி அர்ச்சகர் உடனடியாக தேவைப்படுகின்றார். குடும்ப விடுதி உண்டு. கொடுப்பனவுகள் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:-
077 151 7207, 077 401 5955

(CS/29076) J-1

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களில் பின்வரும் வேலையாட்கள் தேவை.

- ரயர் வேலை
- வாகன சுத்திகரிப்பு
- வீட்டுப் பணிப்பெண்

(சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.)

077 895 1584

(CS/57384) J-1

## காணி விற்பனைக்கு

நுணாவில் வீரபத்திரர் ஒழுங்கையில்
வீட்டுடன் கூடிய 4 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

Tel: 076 485 8020

(CS/57387) J-1

## மீட்டல் வகுப்புக்கள்

ஆங்கில மொழியில் தங்கள் சாதாரண, உயர்தர கணித பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்கள், maths4uk யூடியூப் சேனலுக்கு சப்ஸ்கிரைப் செய்து கடந்த கால பரீட்சை வினாத்தாள்களின் பதில் விளக்கங்களால் பயனடையுங்கள்!

(cs.57352) (N-1)

## வேலையாட்கள் தேவை

தென் மாகாணத்தில் அமைந்துள்ள பலசரக்கு கடையொன்றில் தங்கியிருந்து வேலைசெய்யக்கூடிய ஆண் வேலையாட்கள் தேவை.

- பில் கணக்கு போடக்கூடிய 50 வயதிற்கு மேற்பட்டவர் விரும்பத்தக்கது.
- சமையலாளர் (மதிய உணவு சமைப்பவர் விரும்பத்தக்கது).
- சம்பளம் - 60000/-

Location:- A.A.W & Sons Hambantota

Contact:- 077 480 3379

(CS/57372) J-1

## SPOKEN ENGLISH & GRAMMAR

ஆங்கிலம் பேச விரும்பும் ஆசிரியர்கள், தொழில் புரிவோர் Grade 7 to GCE O/L A/L, பட்டதாரிகள் English Medium Students

கொழும்பில் பலவருடம் கற்பித்த அனுபவம்
ஆசிரியர் : K. Ganesh BA

யாழ் நாவலர் - அன்னசத்திர வீதி.
077 766 8725

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பலாலி றோட் ஊரெழுவில் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 25 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- பலாலி றோட் ஊரெழு பிள்ளையார் கோவில் வடக்கு வீதியில் இருந்து 300m
- பலாலி-புன்னாலைக்கட்டுவன் சந்தியில் இருந்து சுன்னாகம் செல்லும் பிரதான வீதியில் இருந்து 300m இருவழிப் பாதை கொண்டது.
- நல்ல தண்ணீர் ஊற்று, சிவப்பு மண், நல்ல சூழல் வீடுகள் அமைப்பதற்கு நல்ல அமைவிடம்.

தொடர்பு: 077 623 4204
076 755 8606

## வீடுகள் வாடகைக்கு உண்டு

- யாழ்ப்பாணம் கச்சேரியில் இருந்து 500m தூரத்தில் 2 அறைகளுடன் (A/C) கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
(A/9 றோட்டிலிருந்து 150m)
- சாவகச்சேரி. மீசாலையில் அமைந்துள்ள 4 அறைகளுடன் (A/C) 2 வீடுகள் வாடகைக்கு உண்டு. (A/9 100m தூரம்).
மாதாந்த வாடகை 25000/-

077 306 8993, 077 484 2578

(CS/24112) J-1

## மணமகள் தேவை

யாழ். இந்து. 1991 இல் பிறந்த திருவோணம் நட்சத்திரம் 1ம் பாதம் 7ல் செவ்வாய் கிரகபாவம் 71 3/4. சொந்தமாக வியாபார நிறுவனம் வைத்திருக்கும் பட்டதாரி மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
(தரகர் தேவையில்லை)

076 058 1753

(CS/57379) J-1

## காணி விற்பனைக்கு

கந்தர்மடச்சந்திக்கும் Hindu Ladies College க்கும் இடையில்
1 1/4 பரப்புக் காணி விற்பனைக்குள்ளது.

- பிரதான வீதியில் இருந்து 2ம் காணி
- சுற்றுமதில்
- குழாய்க் கிணறு

076 772 5781, 077 229 0303

(CS/57381) J-1

## Win Repair

சகல விதமான குளிர்சாதனைப் பெட்டி, சலவை இயந்திரம் A/C, Water heater, Oven பழுதடைந்து விட்டதா? உங்கள் இடத்திற்கே வந்து திருத்தித்தருகிறோம்.

தொடர்பு: 076 834 6136


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : .news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.02.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

செல்வர்யாம் என்றுதாம் செல்வுழி எண்ணாத
புல்லறி வாளர் பெருஞ்செல்வம் எல்லில்
கருங்கொண்மூ வாய்திறந்த மின்னுப்போல் தோன்றி
மருங்கறக் கெட்டு விடும்.

— நாலடியார்

மலை : 34 வள்ளுவர் ஆண்டு : 2055 தை 20 ஞாயிற்றுக்கிழமை (02.02.2025) சிகரம் :128



மாவை சேனாதிராஜா சிறை மீண்டபோது...

# நிலவை மறைத்த மின்மினிகள்!

○ மட்டுநேசன்

சிங்களப் பேரினவாதத்துக்கு எதிராக தமிழ்த் தேசியம் என்ற பெயரில் எவரும் பேசவோ நினைக்கவோ கூடாது என எண்ணும் தரப்புகளின் ஆட்டத்துக்கு தமிழ்த்தேசிய ஊற்றுக் கண்களில் ஒன்றாக விளங்கிய மாவை சேனாதிராஜா பலியாகிவிட்டார்.

தமிழ்த்தேசியம், போராட்டக்களம் என்பன தொடர்பாகப் பங்களித்தவர்களை 3 வகையாகத் தலைவர் வகைப்படுத்தியிருக்கிறார். உணர்வால் வந்தவர்கள், உணர்வூட்டப்பட்டு வந்தவர்கள், உணர்வின் விளைவால் வந்தவர்கள். இதில் மாவை அண்ணன் முதலாவது வகையைச் சேர்ந்தவர். 1973 ஆம் ஆண்டு போராட்ட நடவடிக்கைகளுக்கான பங்களிப்புக்காக சிறையில் அடைக்கப்பட்டவர் அவர். மொத்தமாக 7 ஆண்டுகள் இனத்துக்காக, மொழி அடையாளத்துக்காக சிறையில் வாடவேண்டிய நிலை ஏற்பட்டது. தமிழரசுக் கட்சித் தலைவராகப் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து மட்டக்களப்பில் மாவைக்கும் கட்சிச் செயலருக்கும் அளிக்கப்பட்ட வரவேற்பில் இவர் உரையாற்றியபோது சிறையில் தான் தடுத்துவைக்கப்பட்டிருந்தவேளை வேறுசில கைதிகள் தன்னைத் தாக்கமுற்பட்ட போது பிரபல எழுத்தாளர் எஸ்.பொவின் மகன் அநுர தலையிட்டு தன்னைக் காப்பாற்றினாரென நன்றியுடன் நினைவுகூர்ந்தார்.

அவர் முதல் முறை நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்ட காலத்தில் கிழக்கு மக்களின் ( குறிப்பாக அம்பாறை) நலனைக் கருத்திற்கொண்டு பணியாற்றினார்.

இறுதியுத்தத்தின் பின்னர் மாவீரர் நாள் தொடர்பான விடயங்களிலும் ஆர்வமாக இருந்தார். அரசைப் பொறுத்தவரை இதனை வடக்குப் பிரச்சினை என்றவாறு திசைதிருப்ப முயன்றது. இந்தப் போராட்டத்தில் தமிழர், இஸ்லாமியர், சிங்களவர் என 3 மூன்று இனத்தவர்களும் பங்கெடுத்துள்ளனர். இந்த மாவீரர்களின் பெற்றோர் கௌரவிக்கப்பட வேண்டியவர்களே என்ற நிலைப்பாட்டிலி ருந்த இவரது கனவுகள் எதிர்காலத்தில் சாத்தியமாகுமென நம்புகிறோம். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப்பொது வேட்பாளரை ஆதரித்தார் இவர். தேசமாகத் திரள்வோம் என்ற கோஷத்தை முன்வைத்த பொதுவேட்பாளரின் பக்கமே இவர் நிற்கமுடியும். ஏனெனில் 1973 இல் இருந்தே தமிழ்த்தேசியத்துக்காகப் பாடுபட்டவரால் அப்படித்தான் சிந்திக்கமுடியும். கிளிநொச்சியில் நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றினார். பொது வேட்பாளரின் பணிமனைக்குச்சென்று அவரை ஆசீர்வதித்தார். இறுதி யுத்தம் தொடர்பாக சர்வதேச விசாரணைகள் தேவையில்லை, இனப்படுகொலை என்பதை சர்வதேசத்தில் நிரூபிக்கப் போதுமான சான்றுகள், ஆதாரங்கள் இல்லை என்று வாதிடும் தரப்பால் இதனைச் சகிக்கமுடியவில்லை.

வடக்கு மாகாணசபையில் இனப்படுகொலை என்ற தீர்மானத்தை முதலமைச்சராக இருந்த விக்னேஸ்வரன் கொண்டுவந்தார். இதனைச் சகிக்கமுடியாத சுமந்திரன் முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவர ஏற்பாடு செய்தார். இனத்தின் எதிர்காலத்தை விட தமது அரசியல் எதிர்காலமே முதன்மையானது எனச் சிந்தித்தோர் சுமந்திரனைத் திருப்திப்படுத்தும் விதமாகச் செயற்பட்டனர். நடுநிலையாக நின்று சிந்தித்துச் செயற்பட வேண்டிய சபைமுதல்வர் சுமந்திரனைக் குளிரப்பண்ணுவதற்காக நிறைவேற்றப்பட்ட பிரேரணையை ஆளுநரிடம் கையளித்தார்.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற மக்கள் போராட்டங்களையும் சுமந்திரனின் அரசுத் தரப்பு விசுவாதத்தையும் உணர்ந்துகொண்ட சம்பந்தன் ஐயா அந்தத் தீர்மானம் தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கவேண்டாமெனக் கேட்டுக்கொண்டார். இதனைத் தொடர்ந்து சபைமுதல்வரை வரவழைத்த ஆளுநர் அந்தத் தீர்மானத்தைத் திரும்பக் கையளித்தார். அவ்வேளை இது முதலமைச்சருக்கான நியமனம் என அவர் வேடிக்கையாகக் குறிப்பிட்டதாக செய்திகள் வெளியாகின. நாங்கள் பெரும்பான்மையுடன் நிறைவேற்றிய இந்தத் தீர்மானத்தை நீங்கள் எப்படித் திரும்பப்பெறச் சொல்லமுடியும் என சி.வி.கே சிவஞானம், ப.சத்தியலிங்கம் , சயந்தன் போன்ற எவரும் சம்பந்தன் ஐயாவிடம் கேட்கத் துணியவில்லை. சம்பந்தன் ஐயா இன்னொரு காரியத்தையும் செய்தார். முதலமைச்சரின் நூல் வெளியீட்டு விழா வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றபோது அதில் கலந்துகொண்டு தனது நிலைப்பாட்டை குறிப்பால் உணர்த்தினார். அசடுவழிய சுமந்திரனும் அந்த நிகழ்வில் கலந்துகொண்டார். கடந்த வருடம் சுமந்திரன், சம்பந்தன் ஐயாவைப் பழிதீர்க்கும் நோக்கில் உங்களுக்கு வயதாகிவிட்டது, பதவி விலகுங்கள் என்றார். எதுவும் நடக்கவில்லை. சாகும்வரை பதவியிலேயே இருந்தார்.

பொதுவேட்பாளரை ஆதரித்த மாவை ஐயாவைப் பழிதீர்க்க 18 பேர் கையொப்பமிட்டு அவர் பதவிதுறக்க வேண்டும் என்று வலியுறுத்தினர். ப. சத்தியலிங்கமும் ,சி.வி.கேயும் உங்களை சுமந்திரன் பதவியிலிருந்து விலக்கிவிடுவார் என்று கடும் தொனியில் எச்சரித்ததாகவும் செய்திகள் வெளியாகின. தான் எந்த வழியில் எத்தனை ஆண்டுகள் தமிழ்த்தேசியத்திற்காக உழைத்தபோதும் யுத்தத்தின்பின் கட்சிக்குள் கொண்டுவந்த சுமந்திரன் தன்னைப் பதவி நீக்குவதா என்று நினைத்தால் மனஉளைச்சல் வரும்தானே. எப்படியோ இந்த 18 பேரும் அவரது சாவுக்குக் காரணமாகிவிட்டனர்.

சரி! நல்லாட்சி ஆட்சிக்காலத்தில் ஏக்கிய ராஜ்ஜிய தீர்வுத் திட்டத்தைக் கொண்டுவர சுமந்திரன் தலைகீழாக நின்றார். இது நிறைவேறாவிடில் தான் அரசியலிலிருந்து விலகிவிடுவேன் என்று சபதமெடுத்தார். நல்லாட்சியும் போய், கோத்தா அரசு,ரணில் அரசும் போயிற்று. அரசியலிலிருந்து விலகுவதற்கு தான் எழுதிய கடிதம் பாதியிலேயே உள்ளது என்று சொன்ன சுமந்திரன் அந்தக் கடிதத்தைப் பூர்த்திசெய்ய இதுதான் தருணம் எனக் கையொப்பமிட்டுள்ள (சுமந்திரனைவிட) 17 பேரும் அவருக்குக் கடிதம் எழுதுவார்களா? பூனைக்கு மணி கட்டுவது யார்?

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை உடைத்துவிடாதீர்கள் என மட்டக்களப்பில் நடைபெற்ற கூட்டம் உட்பட ஒவ்வொரு தடவையும் மாவை அண்ணா பல்வேறு வழிகளிலும் சொல்லிப் பார்த்தார். ஆனால் என்ன நோக்கத்துக்காக கட்சிக்குள் சுமந்திரன் காலடி எடுத்து வைத்தாரோ அதைச் செய்துவிட்டார். தலைவரின் வேண்டுகோளின் படியே தான் உறங்குநிலையில் இருந்த தமிழரசுக் கட்சியை இயங்கு நிலைக்குக் கொண்டு வந்தார் மாவை. இன்று அந்தக் கட்சியிலிருந்தே அவரைச் சுமந்திரன் விலக்கி

08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேனாதி:

## மிதவாத அரசியலின் பெருந்தேகி!

நிலாந்தன்



1965க்குப் பின்னரான காலகட்டம் என்பது இலங்கை முழுவதிலும் தீவிரமான அரசியல் நிலைப்பாடுகள் கருக்கொண்ட ஒரு காலகட்டம் ஆகும். சிங்கள மக்கள் மத்தியிலும் தமிழ் மக்கள் மத்தியிலும் ஆயுதப் போராட்டத்திற்கான கருக்கள் உற்பத்தியாகிய ஒரு காலகட்டம். இக்காலகட்டத்தில் அரசியலில் ஈடுபட்டவர்களில் ஒருவர் மாவை. இப்போதுள்ள தமிழரசுக் கட்சித் தலைவர்களில் நீண்டகாலம் சிறையிருந்தவர் மாவைதான்.

இப்படிப்பார்த்தால் ஆயுதப் போராட்டத்திற்கு முன்னரான மிதவாத அரசியல், ஆயுதப் போராட்ட காலகட்ட மிதவாத அரசியல், ஆயுதப் போராட்டத்திற்கு பின்னரான மிதவாத அரசியல் ஆகிய மூன்று காலகட்டங்களின் ஊடாகவும் வந்தவர் மாவை.

அதனால்தான் ஆயுதப் போராளிகள் மத்தியில் அவருக்கு நண்பர்கள் இருந்தார்கள். தமிழ் மிதவாத தலைமைகளுக்கும் ஆயுதப் போராட்ட அமைப்புகளுக்கும் இடையிலான முரண்பாடுகள் அதிகரித்த காலகட்டங்களிலும் மாவை ஆயுதப் போராட்டத்தால் அதிகம் அச்சுறுத்தப்படவில்லை. அதற்கு அவருடைய குண இயல்பே காரணம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டபோது தமிழரசுக் கட்சியை கூட்டமைப்புக்குள் கொண்டுவர உழைத்தவர்களில் மாவை முக்கியமானவர். நோர்வேயின் அனுசரணையோடான சமாதான முயற்சிகள் நடந்த காலகட்டத்தில், வன்னியிலிருந்த கருநிலை அரசு, ஒப்பீட்டளவில் நம்பிக்கதைக்கின்ற தமிழரசுக் கட்சித் தலைவர்களில் ஒருவராக மாவை காணப்பட்டார்.

உயரமானவர்; பெருந்தேகி; பொறுமைசாலி; யாராலும் எளிதாக அணுகப்படக் கூடியவர்; யாரையும் பகைக்க விரும்பாதவர். எல்லாவற்றையும் எல்லாரையும் சமாளித்துக்கொண்டு போகக்கூடியவர். சமாளிப்பு அவருடைய பலம். அதுதான் அவருடைய பலவீனமும்.

2009க்குப் பின்னரான தமிழ் அரசியல் என்பது ஆயுதப் போராட்டத்திற்கு பின்னரான ஒரு மிதவாத அரசியல். அது ஆயுதப் போராட்டத்தில் இருந்து கற்றுக்கொண்ட பாடங்களின் அடிப்படையில் புதிய நிலைமைகளைக் கையாள்வதற்கான ஒரு புதிய பண்புருமாற்றத்தைக் (transformation) கோரி நின்றது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்பது அவ்வாறு ஆயுதப் போராட்டத்தில் ஏற்பட்ட பண்புருமாற்றத்தைப் பிரதிபலிப்பதாகவும் இருந்தது. ஆனால் 2009 இற்குப் பின்னரான பண்புருமாற்ற அரசியலுக்குத் தலைமைதாங்க சம்பந்தரால் முடியவில்லை. சேனாதியாலும் முடியவில்லை. "சேனாதி" அப்படித்தான் சம்பந்தர் அவரை அழைப்பார்.

ஆயுதப் போராட்டமானது சிங்கள மக்களைப் பகை நிலைக்குத் தள்ளிவிட்டது என்று சம்பந்தர் நம்பினார். எனவே சிங்கள மக்களின் பயத்தை, சந்தேகங்களை நீக்குவதன் மூலம்தான் ஒரு புதிய யாப்பின் ஊடாக இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காணலாம் என்றும் அவர் நம்பினார். அந்த நம்பிக்கையின் அடிப்படையில் அவர் கட்சிக்குள் புதியவர்களைக் கொண்டுவந்தார். தன்னுடைய வழிக்குக் குறுக்கே நின்றவர்களை அகற்றினார். அல்லது அவர்கள் அகன்றுபோகத் தேவையான நிலைமைகளை ஏற்படுத்தினார்.

ஆயுதப் போராட்டத்திற்கு பின்னரான மிதவாத அரசியலைக் குறித்து சரியாகவோ அல்லது பிழையாகவோ சம்பந்தரிடம் ஒரு தீர்மானம் இருந்தது. சம்பந்தர் இழுத்த இழுப்புக்கெல்லாம் சேனாதி விட்டுக்கொடுத்தார். அதனால், சம்பந்தரின் தவறுகளுக்கு அவரும் பங்காளியானார். சம்பந்தர் கூட்டமைப்பின் தலைவராக தோல்விஅடைந்த பொழுது சேனாதி தமிழரசுக் கட்சியின் தலைவராக தோல்வியடைந்தார். சம்பந்தரிடம் நல்லதோ கெட்டதோ தலைமைத்துவப் பண்பு இருந்தது. ஆனால் மாவை சேனாதிராஜாவிடம் அது இருக்கவில்லை. சமாளிப்பதால் அவர் பெரும்பாலானவர்களுக்கு விருப்பமானவராக இருந்தார். ஆனால் கட்சியைக் கட்டிக் காக்கமுடியவில்லை.

இறுதிநாட்களில் நினைவு தடுமாறிய பொழுதுகளில் அவர் தன்னுடைய மகனுக்குக் கூறிய வசனங்களில் ஒன்று "வழக்குக்குப் போக வேண்டும். பைல்களை எடுத்துவை" என்பதுதான். ஒரு மூத்த மிதவாதி அவருடைய மரணத் தறுவாயில் நீதிமன்றம், வழக்கு என்று தத்தளிக்கும் மனதோடு உலகை விட்டுப் போயிருக்கிறார். மார்ட்டின் ரோட்டுக்கும் நீதிமன்றத்திற்கும் இடையில் அவருடைய ஆவி தத்தளிக்குமா? இரண்டு அணிகளாகப் பிளவடைந்த ஒரு கட்சியை அவர் விட்டுப் போயிருக்கிறார். இப்பொழுது கூட்டமைப்பும் இல்லை தமிழரசுக் கட்சியும் ஒரு கட்டுக்கோப்பான நம்பிக்கையூட்டும் அமைப்பாக இல்லை.

கட்சியின் தலைவராக மாவை தன்னுடைய தலைமைத்துவத்தை நிரூபித்திருக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் இருந்தன. ஆனால் அவர் அதைச் செய்யவில்லை. இன்னொரு விதமாகச் சொன்னால் அவரால் செய்யமுடியவில்லை. ஏனென்றால் அவரிடம் ஆயுதப் போராட்டம் ஒன்றுக்குப் பின்னரான மிதவாத அரசியலை வழிநடத்தத் தேவையான தரிசனங்களும் இருக்கவில்லை; கொள்ளளவும்

> **ஆயுதப் போராட்டத்தில் அர்ப்பணிப்பும் தியாகமும்தான் அடிப்படைத் தகுதிகளாக இருந்தன. ஆனால் 2009க்குப் பின்னரான மிதவாத அரசியலானது பெருமளவுக்குப் பிழைப்பாக மாறிவிட்டது. இந்தச் சீரழிவுக்கு மாவையும் பொறுப்பு. கட்சிக்குள் துணிச்சலான முடிவுகளை அவர் எடுத்திருந்தால் தமிழரசுக் கட்சி இப்படி ஒரு சீரழிவுக்கு வந்திருக்காது. அவருடைய சமாளிக்கும் பண்பு கட்சியைச் சிதைத்தது மட்டுமல்ல, கட்சிக்கு உள்ளேயும் வெளியேயும் அவரைத் தோற்கடித்துவிட்டது.**

இருக்கவில்லை. சம்பந்தரிடமும் இருக்கவில்லை. இப்போது உள்ள பெரும்பாலான தலைவர்களிடமும் அது இல்லை. மாவையின் தோல்வி என்பது தமிழ் மிதவாத அரசியலின் தோல்வியும்தான். ஏனென்றால், ஆயுதப் போராட்டத்திற்குப் பின்னரான பண்புருமாற்ற அரசியலுக்குத் தலைமைதாங்கத் தேவையான மிதவாதிகள் தமிழ் மக்கள் மத்தியில் போதிய அளவுக்கு எழுச்சி பெறவில்லை. ஆயுதப் போராட்டத்திற்குப் பின்னரான மிதவாத அரசியல் எனப்படுவது ஆயுதப் போராட்டத்திற்கு தலைகீழாக எழுச்சி பெற்றிருக்கிறது. ஆயுதப் போராட்டத்தில் அர்ப்பணிப்பும் தியாகமும்தான் அடிப்படைத் தகுதிகளாக இருந்தன. ஆனால் 2009க்குப் பின்னரான மிதவாத அரசியலானது பெருமளவுக்குப் பிழைப்பாக மாறிவிட்டது. இந்தச் சீரழிவுக்கு மாவையும் பொறுப்பு. கட்சிக்குள் துணிச்சலான முடிவுகளை அவர் எடுத்திருந்தால் தமிழரசுக் கட்சி இப்படி ஒரு சீரழிவுக்கு வந்திருக்காது. அவருடைய சமாளிக்கும் பண்பு கட்சியைச் சிதைத்தது மட்டுமல்ல, கட்சிக்கு உள்ளேயும் வெளியேயும் அவரைத் தோற்கடித்துவிட்டது. சில ஆண்டுகளுக்கு முன் கடைசியாக அவர் எனது வீட்டுக்கு வந்தபோது அவரிடம் சொன்னேன் "அண்ணை ஒரு சந்நியாசி மாதிரி முடிவெடுங்கோ. இனி நாடாளுமன்றத்துக்கோ அல்லது மாகாண சபைக்கோ போறதில்ல என்று முடிவெடுங்கோ. அப்படிப்பட்ட ஆசைகள் இல்லையென்றால் நீங்கள் யாருக்கும் பணியவோ, அல்லது யாரோடும் சுதாகரிக்கவோ வேண்டியிராது. ஆசைகளில்லாமல் ஒரு சந்நியாசி போல தமிழரசுக் கட்சியை கட்டியெழுப்புவதுதான் ஒரே பணி என்று உழையுங்கோ. அப்படி உழைத்தால் கட்சியும் உருப்படும் உங்களுடைய பெயர் என்றென்றும் மதிக்கப்படும்" என்று. பதில் சொல்லாமல் கேட்டுக்கொண்டிருந்தார். அதற்குப் பின் அவர் என்னிடம் வருவதில்லை.

பொதுவேட்பாளருக்காக 2019 ஆம் ஆண்டு அவரை நல்லூர் சின்மயா மிஷினில் சந்தித்த பொழுது அவர் பொது வேட்பாளரை ஆதரிக்கத் தயங்கினார். அவரோடு வந்த சிவிகே சிவஞானம் தமிழ் மக்கள் பேரவைக்கு எதிராகக் கருத்துக்களைத் தெரிவித்தார். ஆனால் கடந்த ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரிக்கும் நிலைப்பாட்டை எடுக்குமாறு மாவையைக் கேட்டபோது அவர் சொன்னார். "பொது வேட்பாளர் ஏன் தேவை என்பதற்கு நீங்கள் கூறக்கூடிய காரணங்களை விட 10 மேலதிக காரணங்களை நான் கூறுவேன்" என்று. தேர்தல் பிரசாரத்தின் கடைசிக் கட்டத்தில் அவர் பொது வேட்பாளருக்கு ஆதரவாக, வெளிப்படையாகக் காணப்பட்டார். அது கடைசி நேரத்தில் எடுக்கப்பட்ட முடிவு எனினும் சுமந்திரன் அணியை எதிர்த்து அவர் துணிச்சலாக வெளிப்படையாக எடுத்த முடிவு அது.

அவருக்கு நெருக்கமாக இருந்தவரும் பின்னர் கட்சியை விட்டு வெளியேற்றப்பட்டவருமாகிய மன்னாரைச் சேர்ந்த சிவகரன் கூறுவதுபோல வழிப்போக்கர்கள் கட்சிக்குள் தங்களைப் பலப்படுத்திக்கொண்டு விட்டார்கள். மிக நீண்ட மிதவாதப் பாரம்பரியத்தைக் கொண்ட மாவை தனது சொந்தக் கட்சிக்குள்ளேயே தோற்கடிக்கப்பட்டுவிட்டார். அவருடைய வயதில் அரை மடங்கு வயதைக் கொண்ட கட்சி உறுப்பினர்கள் அவரை அவமதித்தார்கள். ஆனால் அவருடைய உடலுக்கு பெரும்பாலும் எல்லாக் கட்சி முக்கியஸ்தர்களும் மதிப்பளித்தார்கள். சம்பந்தரைப் போலவே மாவையும் ஒரு தோல்வியுற்ற தலைவராகவே இறந்தார். ஆனால் சம்பந்தர் அளவுக்கு அவர் தமிழ்த் தேசிய ஆன்மாவுக்குத் தூரமானவர் அல்லர். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகளில் தமிழறிஞர்:

## க. உமாமகேசுவரம்பிள்ளை

## (05.05.1934 - 20.04.2024)

20

# ஓர் இசைக்கலைஞனின் நினைவை மீட்கும் அரங்கேற்றம்

○ பா.துவாரகன்

பண்டிதர் க. உமாமகேசுவரன் இடம்பெயர்ந்து சுன்னாகத்தில் வசித்தபோது அவரிடம் தமிழ் பயில தனது மாணவி ஒருவரை ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் அனுப்புகிறார். பெண்பிள்ளைக்குத் துணையாக தனது மாணவன் திபாஹறரனையும் உடன் அனுப்புகின்றார். திபாஹறரனுக்கு வகுப்பிலே ஒரு மூலையில் தனியாக ஒரு கதிரை வழங்கப்படுகிறது.

உமாமகேசுவரன் தான் முதல்நாள் படிப்பித்தவற்றில் இரண்டாம் நாள் கேள்வி கேட்கிறார். ஒருவரும் பதில் அளிக்கவில்லை. வகுப்பிலே அருகிலிருந்து பார்த்த திபாஹறரன் சரியான பதில் அளிக்கிறார். அன்று முதல் உமாமகேசுவரனது அபிமானத்துக்குரிய மாணவர்களில் ஒருவரானார் திபாஹறரன்.

இளவயதிலேயே புராண படனம் செய்வதில் வல்லவராக விளங்கிய திபாஹறரன் கந்தசஷ்டி விரதகாலத்தில் கந்தபுராண யுத்த காண்டத்துக்குப் பயன் சொல்வதற்காக ஒருவார காலத்துக்கு உமாமகேசுவரனது தமிழ் வகுப்புக்குச் செல்லவில்லை. திபாஹறரன் ஒருவாரமாகப் படிக்க வரவில்லையே என்று கவலையுற்ற உமாமகேசுவரன் தனது நண்பரான கவிஞர் சோ.ப.வை திபாஹறரனது தந்தையாரிடம் தூது அனுப்பினார். சண்முகநாதனைச் சந்திக்க சோ. ப. உரும்பிராய்க்குச் சென்றார். "மகன் ஏன் படிக்க வருவதில்லை, ஏதும் நோய் துன்பமோ என்று உமாமகேசுவரன் கேட்டுவரச்சொன்னார்" என்று சண்முகநாதனிடம் சோ.ப. தெரிவித்தார். இது நடைபெற்று 35 வருடங்கள் ஆகின்றன.

---

அண்மையில் மீளாத் துயிலில் ஆழ்ந்த வயலின் வித்துவான் சண்முகநாதன் திபாஹறரனின் (1973.03.12 2025.01.15) இசை மேன்மை பற்றியோ, வயலின் வாசிக்கும் திபாஹறரனது ஆற்றல் பற்றியோ எழுதவல்ல இசை அறிவும் தகுதியும் என்னிடம் இல்லை.

2001 இல் நடைபெற்ற திபாஹறரனின் வயலின் அரங்கேற்றம் பற்றி பண்டிதர் க. உமாமகேசுவரம்பிள்ளை "சபரி கண்ணப்பன்" என்ற புனைபெயரில் 2001.08.31 அன்று பத்திரிகைக்கு எழுதிய இரசனைக் குறிப்பு இங்கு திபாஹறரனின் நினைவுகளை மீட்கிறது. உமாமகேசுவரனைப் போல் விஸ்தாரமான ஆலாபனைகளுடனும் கமகங்களுடனும் இசை நிகழ்வு பற்றி எழுதக் கூடியவர்களைக் காண்பது அரிது.


**செல்வன் திபாஹறரனின் வயலின் அரங்கேற்றம் 'பாலைவனத்துப் பசுந்தரை' போலமைந்தது**

சபரி கண்ணப்பன் (உமாமகேசுவரன், 2001.08.31)

குருகுலக் கல்வி என்பது இன்றில்லை. அது நமது துரதிர்ஷ்டம். கலைகளைப் பொறுத்தவரை குருகுலக் கல்விமுறைப் பயிற்சி பெற்றவர்களே இன்றும் பிரகாசிக்கிறார்கள். குருகுலக் கல்வி அளிக்கும் வாய்ப்பில்லை என்றானதும் குரு தம்முடன் வசிக்கும் வாய்ப்புற்ற தம் பிள்ளைகளுக்கே பயிற்சி அளிக்கத் தொடங்கினர். அம்முயற்சியில் வெற்றியும் பெற்றார். எம்.ஏ.சுந்தரேசன், எம்.ஏ கிருஷ்ணசாமி (இருவரதும் தந்தை: பரூர் எம்.எஸ்.அனந்தராமன்), ஜி.ஜே.ஆர். கிருஷ்ணன், ஜே.விஜயலட்சுமி (லால்குடி.ஜி.ஜெயராமன்), விஜி கிருஷ்ணன் (ரி.என். கிருஷ்ணன்), எம்.நர்மதா (பரூர் எம்.எஸ்.கோபால கிருஷ்ணன்), பி.பாரதி (எம்.சந்திரசேகரன்) எனத் தந்தையாரிடம் வயலின் பயிற்சி பெற்றோர் வரிசை நீள்கிறது. இந்தளவுக்கு இல்லையென்றாலும் குருகுலமுறையில் வயலின் பயின்ற கலைஞர் சிலர் இங்கும் இருந்தார்கள், இருக்கிறார்கள். புத்துவாட்டி சோமசுந்தரம், இணுவில் (சின்ன) உருத்திராபதி, மணி ஐயங்கார், வடலியடைப்பு வைத்தீசுவர ஐயர், ஜி.ஷண்முகானந்தன், சித்திவிநாயகம் (பாக்கியராஜா) சோமாஸ்கந்த சர்மா, பிச்சையப்பா, சர்வேஸ்வர சர்மா, ராதா கிருஷ்ணன், சாந்தநாயகி சுப்பிரமணியம், பாக்கியலட்சுமி நடராஜா, விநாயகமூர்த்தி, வெங்கடேஸ்வர சர்மா, பா.கண்ணன், கோபிதாஸ், கேசவமூர்த்தி, ஏ.ஜெயராமன், கே.குகபரன் எனவரும் இந்த வயலின் கலைஞர் வரிசையில் இனி இணைவதற்கான புதிய கலைஞர் எவருமே இல்லை. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் கர்நாடக இசைப் பிரிவுக்கே வயலின் கலைஞர் ஒருவர் இல்லை என்ற துர்ப்பாக்கிய நிலை.

### வயலின் அரங்கேற்றம்

பம்பலப்பிட்டிச் சரஸ்வதி மண்டபத்தில் செல்வன் சண்முகநாதன் திபாஹறரனின் வயலின் அரங்கேற்றம், மண்டபத்துள்ளே நுழையும்போது மேலே குறித்த எண்ணங்களும் ஏக்கங்களும் தான் எழுந்தன. நிகழ்ச்சி நிரல் இரண்டு பிரிவு கொண்டதாக அமைக்கப்பட்டிருந்தது. பக்கவாத்தியமாக முதற்பிரிவிலும் தனிவாத்தியமாக இரண்டாம் பிரிவிலும் இசைக்கும் படியான அந்த ஏற்பாடு அரங்கேறும் கலைஞரின் திறமையை முழுமையாக அளவிடும் வாய்ப்பை இரசிகர்களுக்கு வழங்கியது. சங்கீத பூஷணம் எஸ்.பத்மலிங்கம் பாட்டு, பக்கவாத்திய ஜமாவில் கலாபூஷணம் ரி.ஜெயசுந்தரம் (மிருதங்கம்), கலாபூஷணம் குருவாயூர் கே.கே அச்சுதன் (கடம்), மெற்றாஸ் கஜன் (மோர்சிங்) என்று இன்றைய பிரபலஸ்தர்கள் இணைந்தனர். பக்க(கா) வாத்தியம் இசைத்தனர். மாயாமாளவகௌளை



தமிழறிஞர் உமாமகேசுவரன்

ராகம் ரூபக தாளத்தில் அமைந்த தியாகராஜ கீர்த்தனை "துளஸீதள" வுடன் கச்சேரி ஆரம்பமாயிற்று. மளமளவென்று மணியான கீர்த்தனங்கள் ஒன்றன்பின் ஒன்றாய்த் தொடர்ந்தன. அவையோரைக் கிறங்கடித்தன. அநுபவஸ்தராக பத்மலிங்கம் அரங்கேறும் கலைஞரின் பாடாந்தரம் (repertoire) பற்றி சிறிதும் கவலைப்படாமல் தியாகராஜ கீர்த்தனை, தீட்சிதர் கிருதி என்று ஜமாய்க்கிறாரே, பாவம்! அரங்கேறுபவர் என்று பரிதாபப்படத் தயாரானோரை சிறிதும் அலட்டிக்கொள்ளாமல் தன்னம்பிக்கையுடன் அனுசரணையாக வாசித்தும் ஸ்வரப்பிரஸ்தாரப் போதெல்லாம் ஈடுகொடுத்தும் அயர்த்திவிட்டார் திபாஹறரன்.

பலே! "ஸ்ரீரமா சரஸ்வதி ஸேவிதாம்" தீட்சிதரின் சர்ச்சைக்குரிய கிருதிகளில் ஒன்று. ராக முத்திரை இல்லாத தீட்ஷிதர் கிருதி வெகு அபூர்வம். இந்தக் கிருதியில் 'தார ஸத்ருச நாசாமணி விராஜிதாம்' என்ற அடியில் "நாசமணி" என்ற ராகமுத்திரை வருகிறது. தீட்சிதர் இசைப்பாரம்பரியத்தில் வந்த சுப்பராம தீட்சிதர், "சங்கீத சம்பிரதாய பிரதர்சினி" என்ற தமது நூலில் நாசமணி எனக் குறிப்பிட்டுவிட்டு எழுபதாவது மேளம் 'நாஸிகாபூஷணி' ராகத்துக்குரிய ஸ்வரங்களையே தருகிறார். 'ராககோஷம்', 'சங்கீதா ஸ்வரப்பிரஸ்தார ஸாகரம்' முதலிய நூல்கள் 'நாசமணி' நாஸிகாபூஷணி' யின் ஜன்ய ராகம் என்கின்றன. பின்னர் சம்பூர்ண ராகமான 'நாஸிகாபூஷணி'யின் ஜன்ய ராகம் என்கின்றன. சம்பூர்ண ராகமான 'நாஸிகாபூஷணியின்' மறு பெயராகி விட்டது போலும். அரங்கேற்றத்திலும் இன்றைய வழக்குப்படி 'நாஸிகாபூஷணி' தான் ஒலித்தது.

யாராவது 'நாசாமணி' என்ற ஜன்ய ராகத்திற் பாடிக்காட்ட முன்வருவார்களா? முன்வந்தால் அது பரிசோதனை முயற்சியாகவும் புதியதொரு அநுபவத்தைக் கர்நாடக சங்கீத ரஸிகர்களுக்குத் தருவதாகவும் அமையுமே. எவ்வளவு காலத்துக்குத்தான் நம்முடைய வித்துவான்கள் குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டிக் கொண்டிருக்கப்போகிறார்கள்.?

அநுபவப்பட்ட இசைக்கலைஞர்களுக்கே தீட்சிதர் கிருதி என்றால் சிம்ம சொப்பனம்தான். இந்த இலட்சணத்தில் இசை உலகில் அடியெடுத்துவைக்கும் ஆரம்பக் கலைஞருக்கு எப்படி இருக்கும்? திபாஹறரன் பாடகரை நிழல்போலத் தொடர்ந்து கச்சிதமாக வாசித்துவிட்டார்.

### ஆலாபனை

ஒருவர் கர்நாடக இசைத்துறையில் பிரகாசிப்பாரா இல்லையா என்பதை சிறப்பாக இராக ஆலாபனையில் அவருக்கிருக்கும் தேர்ச்சியை வைத்தே தீர்மானிப்பது வழக்கம். இராகம் என்பது வெறும் ஸ்வரங்களின் கூட்டமல்ல. தெய்வாம்சம் பொருந்திய அற்புத இசை வடிவம் அது. விஸ்தாரமான ஆலாபனைக்கென அன்று பத்மலிங்கம் தேர்ந்துகொண்ட இராகம் மோஹனம். வெகு அழகானதொரு ஆலாபனையைப் பரிசாக ரஸிகர்களுக்கு அவர் வழங்கினார். இந்த மோஹனம் போதுமே. இன்னொரு மோஹனம் எதற்கு? அதுவும் ஒரு கற்றுக்குட்டி வாசிக்கும் மோஹனம் வேண்டவே வேண்டாம் என்றுதான் தோன்றியது. ஆனால் திபாஹறரன் அனைவரையும் ஏமாற்றிவிட்டார். மோஹனத்தை அவர் ஆலாபனை செய்தவிதம் அருமை. புள்ளிவைத்துக்கோலம் போடுவது போல் இராகத்தைக் கட்டம் கட்டமாக மெருகேற்றி அவர் ஆலாபனை செய்தபோது இவருக்குக் கர்நாடக இசையுலகில் நல்லதொரு எதிர்காலம் இருக்கிறது என்ற அசைக்க முடியாத நம்பிக்கை பிறந்தது. மோஹன ராகம் ஆதி தாளத்தில் அமைந்த தீட்சிதர் கிருதி 'கோபிகா மனோகரம்' இன்பத்தேனாய்ச் செவிவழி புகுந்து சிந்தையை நிறைத்தது.

இப்போதெல்லாம் இராகம் வேண்டாம். கற்பனா ஸ்வரபிரஸ்தாரம் வேண்டாம். இராகம், தானம், பல்லவி வேண்டாம் என்று மெல்ல மனோதர்ம இசைப் பிரிவையே ஒழித்துவிடப் பார்க்கிறார்கள். தென்னிந்தியக் கலைஞர்கள் கீர்த்தனங்களையே பின்னணி வாத்தியக் கோஷ்டியோடு மெல்லிசைப் பாடல்களைப் போலப் பாடித் தொலைக்கிறார்கள். கர்நாடக இசையின் தனித்தன்மையையே அழித்துவிடும் முயற்சி இது. மாறாக, கற்பனைப் புதுப்புனைவுக்கு எல்லையற்ற இடந்தரும் பிரிவு மனோதர்ம சங்கீதம்.

அன்றைய வயலின் அரங்கேற்றத்தில் மனோதர்ம சங்கீதத்துக்கு முதன்மை வழங்கப்பட்டது மட்டற்ற மகிழ்ச்சி தருகிறது. அரங்கேற்ற நிகழ்வின் பிற்பாதியில் குரு இராதா கிருஷ்ணனும் சிஷ்யன் திபாஹறரனும் இரட்டை வயலின்களாய் இணைந்து இசை வழங்கினர். கம்பீரநாட்டை ஆதியில் அமைந்த ஸ்ரீஜாலந்தர கம்பீரமாய் ஒலித்தது. பேஷான ஒரு கச்சேரி கேட்கத் தயாராகுங்கள்! என்று கட்டியமே கூறிவிட்டது. பிறகென்ன? ஒரே அமர்க்களந்தான் (சினிமா அல்ல!)

### தனித்துவமான பாணி

குரு இராதாகிருஷ்ணன் இன்றைய பிரபல முன்னணி வயலின் வித்துவான். தந்தை வி.உருத்திராபதி. ஜி.ஷண்முகானந்தன், எம்.எஸ்.அனந்தராமன் என்போரிடம் முறையான வயலின் பயிற்சி பெற்றவர். தனக்கெனத் தனித்துவமான பாணி ஒன்றை அமைத்துப் பிரகாசிப்பவர். தம்மிடம் 1990 ஆம் ஆண்டு முதல் எட்டு ஆண்டுகள் பயின்ற சிஷ்யன் திபாஹறரன் அரங்கேறும் போது தாமும் வயலினோடு அமர்ந்து வழிநடத்துகிறார். கேட்பானேன் ஒரே வயலின் பொழிவுதான்.

கல்யாணி ஆதி இரண்டுகளைச் சவுக்கத்தில் 'தாரக ப்ரம்ம ஸ்வரூபிணி தாமரஸ விலோசினி' என்ற பல்லவியைப் பிய்த்து வாங்கிய பின் தொடர்ந்த இராகமாலிகையில் சஹானா, பிலஹரி, ரேவதி, வலம் வந்தன. விருந்தின் முடிவில் வழங்கும் பாயாஸமாக, ஜோன்புரி ராகம், ஆதிதாளத்தில் அமைந்த கோபாலகிருஷ்ண பாரதி ஸாகித்தியம் 'எப்பவருவாரோ', பாகேஸ்ரீ இராக தில்லானா என்பன அமைந்தன.

மிருதங்க பூபதி ஏ.சந்தான கிருஷ்ணன், கஞ்சிரா வித்துவான் பி.பிரமநாயகம், மோர்சிங் வித்துவான் மற்றாஸ் கஜன் என்போர் அணிசெய் கலைஞர்கள். அடாடா! ஒரே ஜிஞ்ஜாமிருதந்தான். மிருதங்கபூபதி வந்திருந்தும் கால அவகாசம் இன்மையால் தனி ஆவர்த்தம் கேட்க வாய்க்கவில்லையே என்பதுதான் ரசிகர்களின் ஏகோபித்த ஆதங்கம்.

திடீர் தயாரிப்புக்களான சில கீர்த்தனங்கள், போனாற் போகிறதென்ற போக்கில் ஒரு மெட்டை இராக (?!) ஆலாபனை, சிட்டை ஸ்வரங்கள், இராகமாலிகை என்று அவசரகோலத்தில் அள்ளித் தெளித்துச் சமாளித்துவிடலாம் என்ற நப்பாசையுடன், அரங்கேறி அசடுவழியும் அற்பாயுசுக் கலைஞர்களைக் கண்டும் கேட்டும் அலுத்துப்போன இரசிகர்களை அன்றைய அரங்கேற்றம் பாலைவனத்துப் பசுந்தரையாய்ப் பரவசப்படுத்தியதில் வியப்பேதுமில்லை. வளரும் வயலின் கலைஞர் ஒருவர் வாய்த்திருப்பது கர்நாடக சங்கீத ரசிகர்களின் அதிர்ஷ்டம் என்றே சொல்ல வேண்டும். சபாஷ் திபாஹறரன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்பவோ முடிந்த காரியம்!



இளங்கோ ஏரம்பமூர்த்தி
(சித்த ஆயுள்வேத இயற்கை வைத்தியர், சுவிஸ்)



## புங்குடுதீவுக்குப் போய்வந்த கதை

விரைவாக வந்து ஹெல்மெட்டை எடுத்துப் போட்டுக்கொண்டு பைக்கை ஸ்ராா்ட் பண்ணினேன். இல்லை, ஸ்ராா்ட் பண்ண முயற்சி செய்தேன். பைக் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தது. அட இது என்ன சோதனை? திரும்பத் திரும்ப முயற்சி செய்தும் ஸ்ராா்ட் பண்ண முடியவில்லை. வரும்போது எந்தப் பிரச்சினையும் இருக்கவில்லையே! நான்கு, ஐந்து உதைகொடுத்தும் பார்த்தேன். எதுவும் நடக்கவில்லை. மோட்டார்சைக்கிளுக்குப் பார்க்கக்கூடிய வைத்தியம் எதுவும் நான் படிக்கவில்லை. மனிதர்களுக்கு மட்டுமே வைத்தியம் பார்க்கிறேன்.

இப்ப என்னசெய்வது? யாராவது வருகிறார்களா என்று பார்த்தேன். ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒருவர் வந்துகொண்டிருந்தார். அருகேவந்து "ப்ரஸ்னே மொகக்த மஹாத்தையா (என்ன பிரச்சினை?)" என்றார். அட, தென் னாட்டுச்சகோதரனா இது. இவர் இங்கு என்ன செய்கிறார் ? "ஸ்ராா்ட் கறண்ட பாய்( ஸ்ராா்ட் பண்ணுதில்லை) "என்றேன் நான். தமிழ், சிங்களம், ஆங்கிலம் எல்லாம் கலந்து உரையாடினோம். ஒன்லைனில் படித்த சிங்களத்தைப் பயிற்சி செய்ய ஒரு ஆள் கிடைத்திருக்கிறார். ஆனால் நேரம்தான் பொருத்தமாக அமையவில்லை.

பார்க்கும்போது இராணுவச்சிப்பாய் போல இருந்தார். ஆனால் தான் ஒரு பாட்டுக்காரன் என்று சொன்னார். என்ன பாட்டு, யாருக்குப் பாடுவது, என்ன மொழியில் எல்லாம் அறிய ஆவல். அல்லது அவர் ஏதோ சொல்ல நான் வேறு ஏதோ புரிந்துகொண்டேனோ? ஆனால் தமிழ் நன்றாகப் பேசுகிறார். தமிழ்ப்பெண்ணை திருமணம் செய்திருக்கிறாரோ என்னவோ, அல்லது...? எந்தப்புற்றுக்குள், எந்த .....? அவரும் தனக்குத் தெரிந்த வித்தையெல்லாம் காட்டி உதைத்து உதைத்து உதவிசெய்யப்பார்த்தார். எதுவும் நடக்கவில்லை. பைக் எந்த உணர்ச்சியும் இல்லாமல் இருந்தது.

அட மருமகள்! அவளுக்கு ஒரு செய்தி பஸ்ஸில் வீடு போகுமாறு அனுப்புவோம் என்று தொலைபேசியை எடுத்தேன். அதுவும் உறங்கத்தயாராக இருந்தது. பற்றரி நன்றாக இறங்கியிருந்தது. அட சார்ஜ் போட மறந்துவிட்டேனா?

'அறணை! அறணை! 'என்று அப்பா இருந்திருந்தால் செல்லமாகத் திட்டியிருப்பார். "வந்த வேலை முடியவில்லை பஸ்ஸில் வீட்டுக்குப் போகவும்" என்று செய்தி அனுப்பிவிட்டேன். புங்குடுதீவு பற்றித் தெரிந்தால் பிரளயம் தான்.

தென்னாட்டுச் சகோதரனும் கைவிரித்துவிட்டார். கராஜ் ஏதாவது கிட்ட இருக்கிறதா எனக் கேட்டபோது தனக்குத் தெரியாது, ஒரு அரைக்கிலோ மீற்றரில் கடை ஒன்று இருக்கிறது, அங்கு கேட்குமாறு கூறினார். தாகமாக இருந்தது. எட கோவிலடியில் கொஞ்சம் தண்ணி குடிச்சிட்டு வெளிக்கிட்டிருக்கலாம். நான் ஊருக்குப் போனால் வீட்டில் நிற்கும்போதுதான் நிறையத் தண்ணீர் குடிப்பேன். எங்காவது போவதாயின் அளவாத்தான் குடிப்பேன். காரணம் உங்களுக்குத் தெரிந்திருக்கும். இனித் திரும்பக் கோவிலுக்குப் போய் தண்ணீர் குடித்துத் திரும்புவதைவிட போகும்வழியில் எங்காவது ஏதாவது குடிக்கலாம்தானே.

அவரிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு பைக்கைத் தள்ளிக்கொண்டு வீதிக்கு வந்தேன். எவரையும் காணவில்லை. தள்ளிக்கொண்டு அரைக் கிலோ மீற்றர் வந்தும் கடை எதையும் காணவில்லை. வெயில் கொளுத்திக்கொண்டிருந்தது. தாகமாக இருந்தது. வீதியில் எவரையும் காணவில்லை. புங்குடுதீவு மக்கள் எல்லாம் எங்கே? எல்லாரும் வெளிநாடு போய்விட்டார்களா?

ஆனால் தூரத்தில் வீதியில் ஐந்தாறு பேர் நிற்பது தெரிந்தது. அட, வரும்போது பார்த்தேன் தானே. அங்கு ஒரு ஐயாவின் இறுதிச்சடங்கு நிகழ்வு ஞாபகத்துக்கு வந்தது. அவர்களுக்கு அருகில் போனபோது என்னைப் பார்த்து குசலம் விசாரித்தார்கள். "என்ன அண்ணை பெற்றோல் இல்லையோ?"என்று ஒருவர் கேட்டார். "இல்லை ஸ்ராா்ட் பண்ணேலாமல் கிடக்கு என்னெண்டு தெரியேல்லை, இங்கினை கராஜ் ஏதும் இருக்கோ?"எனக்கேட்டேன். "இல்லையே! வேலணைக்குத்தான் போகோணும்"என்றார்கள். தூக்கிவாரிப்போட்டது. நான் எங்க, வேலணை எங்கே, இவ்வளவு பெரிய புங்குடுதீவிலை கராஜ் ஒண்டும் இல்லையா?

உள்ளே இறுதிக்கிரியைகள் நடந்துகொண்டிருந்தன. வயதானவர் ஒருவர் தன் இனிமையான குரலில் சுண்ணப்பாடல்கள் பாடிக்கொண்டிருந்தார்.

"வேதமும், வேள்வியும், ஆயினார்க்கு;
மெய்மையும், பொய்மையும், ஆயினார்க்கு;
சோதியுமாய், இருள் ஆயினார்க்கு;
துன்பமுமாய், இன்பம் ஆயினார்க்கு;
பாதியுமாய், முற்றும் ஆயினார்க்கு;
பந்தமுமாய், வீடும் ஆயினாருக்கு;
ஆதியும், அந்தமும், ஆயினாருக்கு;
ஆட, பொற்சுண்ணம் இடித்தும், நாமே!"

இரண்டு மூன்று தம்பிமார் தங்களுக்குள் ஏதோ கதைத்தார்கள்.

"அங்கிள் உந்த ஒழுங்கேக்க அந்த மரத்துக்குக் கீழ விடுங்கோ. உள்ளுக்கை ஒருத்தர் நிக்கிறார். அவரைக் கூப்பிடுறம்"என்றார்கள். (முதலில் அண்ணா என்று கூப்பிட்டவர்கள் ஹெல்மட்டை கழட்டியவுடன் அங்கிள் என்று அழைக்கத் தொடங்கிவிட்டார்கள், நல்லவேளை தாத்தா என்று அழைக்கவில்லை.) மரத்துக்குக் கீழ் பைக்கைத் தள்ளிக்கொண்டு போய் விட்டேன். தாகம் எடுத்தது. அங்கே வீதியருகில் ஒரு கதிரையின் மேலே இருப்பது என்ன? இறுதிச்சடங்குக்கு வந்திருப்பவர்களுக்காக தண்ணீர்ப்போத்தல்கள் வைத்திருந்தார்கள். அந்தத் தம்பிமாரைக் கேட்டேன். ஒருவர் ஒன்றை எடுத்துவந்து தந்தார். மடமடவென்று குடித்தேன். அப்பாடா! "ஜென்மம் நிறைந்தது சென்றவர் வாழ்க!" என்று சென்றவரை மனதார வாழ்த்தி அவரின் ஆத்மசாந்தியை வேண்டினேன். ஐந்து நிமிடத்தின் பின் ஒரு தம்பியை உள்ளுக்கிருந்து அழைத்துவந்தார்கள். அவர் வந்து பிரச்சினையைக் கேட்டார்.

"அங்கிள்! முக்கியமான நேரம், நான் உள்ளுக்குள் நிக்கவேணும், கொஞ்சம்பொறுங்கோ எடுத்தாப்பிறகு வந்து பாக்கிறன்"என்றார்.

மற்றத் தம்பிமார் எனக்காக அவரிடம் வாதாடினார்கள். "அங்க நிக்கிற ஆக்கள் காணும், இதை ஒருக்கா வேளைக்குச் செய்து குடு! ஐயா யாழ்ப்பாணம் போகவேணும்! " என்று ஒருவர் மெக்கானிக் தம்பியிடம் சொன்னார். "யாழ்ப்பாணம் இல்லையப்பு நான் மீசாலைக்குப் போகோணும்!" என்று திருத்தினேன். 'அவ்வளவு தூரத்திலையிருந்தா வந்தனீங்கள்?' என்று ஒருவர் கேட்டார். மெக்கானிக் தம்பி கொஞ்சம் பொறுங்கோ என்று சொல்லிவிட்டு உள்ளே போனார்.

இரண்டு மூன்று நிமிடத்தில் திரும்பிவந்து அவருடைய நண்பர் ஒருவருடைய ஓட்டோவுக்குச் சென்று சாவிப்பெட்டியை எடுத்துவந்து சிகிச்சையைத் தொடங்கினார். பைக்கைக் கழற்றும் ஸ்டைலிலேயே அவரின் அனுபவம் தெரிந்தது. கழற்றி ஏதேதோ எல்லாம் செய்தார். ஒரு இருபது நிமிடத்தில் பைக் உறுமியது. எனக்கு மட்டுமல்ல, அங்கு எனக்கு உதவிசெய்த மற்றைய தம்பிமாருக்கும் மிக்க மகிழ்ச்சி. ஆனால் மகிழ்ச்சி நீண்ட நேரம் நீடிக்கவில்லை. திரும்ப எல்லாம் பழைய இடங்களில் பொருத்திப் பூட்டிய பின் ஸ்ராா்ட் செய்து பார்த்தபோது எஞ்சின் திரும்ப அமைதியாகிவிட்டது. திரும்ப எல்லாவற்றையும் கழற்றி எனக்குத் தெரியாத வித்தைகள் எல்லாம் செய்து ஸ்ராா்ட் செய்துவிட்டார். மீண்டும் அதேபோல வைத்துப்பூட்டியபின் திரும்ப ஸ்ராா்ட் பண்ண முடியவில்லை! நம்பமாட்டீர்கள் மூன்று முறை அதேபோல நடந்தது. பூசை நடக்கும்போது இடையில் விட்டுவிட்டு வந்தது குற்றந்தான். இருந்தாலும் அம்மாளாச்சி இப்படிச் சோதிக்கக்கூடாது. நான்காம் முறை எஞ்சினைக் கழற்றுவதற்குப் புறப்பட்டபோது "சென்றவர்" இறுதியாத்திரைக்குப் புறப்படுவதாகச் சொன்னார்கள். அந்தத் தம்பி உடனே போய் அவரை வழியனுப்பிவிட்டு ஒரு கால் மணி நேரத்தில் திரும்பவந்தார். பாவம் இந்தப்பிள்ளை. அவருடைய கடமையையும் குழப்பி என்னுடைய வேலையைச் செய்விக்கின்றேனே என்று எனக்கும் குற்ற உணர்வாக இருந்தது. ஆனால் எனக்கு உதவவேண்டுமே என்ற நோக்கத்தில் திரும்பவும் தன் முயற்சியில் சற்றும் மனம்தளராத மெக்கானிக் தம்பி நான்காவது முறையும் கழற்றி ஸ்ராா்ட் செய்து இயங்கும் நிலையிலேயே வைத்து கவசங்களைப் பூட்டினார். எஞ்சின் ஓடிக்கொண்டே இருந்தது. அப்பாடா ஒருமாதிரி பிரச்சினை தீர்ந்துவிட்டது.

எனக்கு மட்டுமல்ல அங்கிருந்த எல்லோருக்கும் மகிழ்ச்சி. அவர் பணம் எதுவும் வாங்க மறுத்தபோதும் மிகவும் வற்புறுத்திக் கொஞ்சம் பணம் கொடுத்தேன். எவ்வளவு நல்ல மனிதர்கள் இந்த ஊரில் இருக்கின்றார்கள். ஒரு சகமனிதனுக்குப் பிரச்சினை என்று வரும்போது யாரென்றே தெரியாத ஒருவனுக்கு எந்தப் பிரதிபலனும் பாராது மக்கள் உதவி செய்கிறார்களே. இப்படியான மனிதர்களினால்தானே உலகம் இன்னும் இயங்கிக் கொண்டிருக்கின்றது. "அங்கிள் நாங்கள் முன்னுக்குப் போறம், பின்னாலை வாங்கோ, ஏதும் பிரச்சினை எண்டால் பாப்பம்" என்று கூறிவிட்டு அவர் முன்னே தன்னுடைய நண்பனுடன் ஓட்டோவில் செல்ல, நான் பைக்கில் பின்தொடர்ந்தேன். இரண்டு கிலோமீற்றர் வரை என்னுடன் வந்து எல்லாம் 'ஓகே' என்று உறுதிப்படுத்தியபின் அவர்கள் கைகாட்டி விடைபெற்றார்கள். நானும் கைகாட்டி நன்றியைத் தெரிவித்துக்கொண்டேன். இப்பொழுது மோட்டார் சைக்கிள் சீராக இயங்கிக்கொண்டிருந்தது. "கடவுளே வீடுபோகும் மட்டும் எந்தப்பிரச்சினையும் வந்திடக்கூடாது!" நான் வேண்டியதைப் போலவே மெக்கானிக் தம்பியும் வேண்டியிருப்பார் என எண்ணுகின்றேன்.

அப்படியே மோட்டார்சைக்கிள் வேலணை புங்குடுதீவை இணைக்கும் "அம்பலவாணர் தாம்போதி" என்றழைக்கப்படும் இலங்கையின் மிக நீளமான பாலத்தினை வந்தடைந்தது. அந்தப்பாலத்தினூடான பயணத்தில் கடற்காற்றுத் தந்த புத்துணர்வில் சோர்வு, பசி எதுவும் தெரியவில்லை. அந்த அம்பலவாணர் பாலத்தினூடாக யாழ். திரும்பிக்கொண்டிருந்தேன்.

கடவுளே வீடுபோய்ச்சேருமட்டும் எதுவும் நடந்துவிடக்கூடாது. ஆனால் வாழ்க்கையில் சிலவேளைகளில்எதுநடக்கக்கூடாதுஎன்றுநினைக்கின்றோமோ அது நடந்துவிடுகின்றதே.

(பயணம் தொடரும்)






# அடங்காத்தமிழன் சுந்தரலிங்கம்:

## தெரியவேண்டிய சில குறிப்புகள்

ந.பரமேஸ்வரன்

1958 ஆம் ஆண்டு இலங்கையில் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டீ. பண்டாரநாயக்கவால் தமிழர்களுக்கு எதிராக வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன. தென்னிலங்கையில் வசித்துவந்த தமிழர்கள் கொல்லப்பட்டனர். தமிழர்களின் வீடுகள், வர்த்தக நிலையங்களுக்குத் தீ வைக்கப்பட்டது. தமிழ்ப்பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டனர். கொழும்பில் வசித்துவந்த தமிழர்கள் அகதிகளாகக் கப்பலில் ஏற்றி அனுப்பப்பட்டனர்.

1958 ஆம் ஆண்டு தமிழரசுக்கட்சியினர் தமது மகாநாட்டை வவுனியாவில் நடத்தத் தீர்மானித்திருந்தனர். நாட்டில் தமிழர்களுக்கு எதிராக வன்முறைகள் இடம்பெற்றுவருவதால் மட்டக்களப்பிலிருந்து தமிழரசுக்கட்சி ஆதரவாளர்கள் மகாநாட்டில் கலந்துகொள்வது சாத்தியமற்றது எனத் தமிழரசுக்கட்சியினர் நினைத்தனர். அப்போது சுந்தரலிங்கம் "நீங்கள் மகாநாட்டை நடத்துங்கள், வவுனியா நாடாளுமன்ற உறுப்பினராக மகாநாட்டிற்குப் பாதுகாப்பு வழங்க வேண்டியது எனது கடமை" எனத் தமிழரசுக்கட்சியினரிடம் தெரிவித்தார். மட்டக்களப்பிலிருந்து தமிழரசுக்கட்சியின் முன்னணிப் பேச்சாளர் சொல்லின் செல்வர் என வர்ணிக்கப்பட்ட இராசதுரை தலைமையில் ஆதரவாளர்கள் வந்த புகையிரதத்தை பொல்காவலையில் காடையர்கள் மறித்துத் தாக்குதல் நடத்த முற்பட்டனர்.


16

( சிலர் தாக்குதலுக்குள்ளாகினர்) சுந்தரலிங்கத்துக்குத் தகவல் கிடைத்தது. சுந்தரலிங்கம் உடனடியாக ஆளுநர் சேர்.ஒலிவர் குணதிலகவுக்குத் தொலைபேசி அழைப்பெடுத்து பொல்காவலையில் காடையர்கள் மறித்துவைத்திருக்கும் தமிழரசுக்கட்சி உறுப்பினர்களைப் பாதுகாப்பாக வவுனியாவுக்கு அனுப்பமுடியுமா அல்லது நான் எனது படையை அனுப்பி பொல்காவலையில் காடையர்கள் மறித்துவைத்திருக்கும் தமிழரசுக்கட்சி உறுப்பினர்களை மீட்கட்டுமா என்று கேட்டார்.

உடனே ஆளுநர் சேர்.ஒலிவர் குணதிலக பொல்காவலையில் காடையர்கள் தடுத்துவைத்திருந்த தமிழரசுக்கட்சி உறுப்பினர்களை விசேட புகையிரதத்தில் இராணுவப் பாதுகாப்புடன் வவுனியாவுக்கு அனுப்பிவைத்தார். தமிழரசுக்கட்சி மகாநாடு வவுனியா முற்றவெளி மைதானத்தில் இனிதே நிறைவேறியது. தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளை முன்நின்று நடத்திய கே.எம்.பி. ராஜரட்ணா தமிழரசுக்கட்சியினர் உங்களது எதிரிகள் தானே எதற்காக அவர்களைப் பாதுகாக்கிறீர்கள் என சுந்தரலிங்கத்திடம் தொலைபேசியில் கேட்டார். எனது தொகுதியில் நடைபெறும் நிகழ்வுக்கு பாதுகாப்பு வழங்கவேண்டியது எனது பொறுப்பு எனப் பதிலளித்தார் சுந்தரலிங்கம்.


(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




D.தியாசினி
தரம் - 10
யா/ சுண்டுக்குளி
மகளிர் கல்லூரி

ஆ.ஆதன்யா
தரம் - 3A
யா/ கொக்குவில் இந்து
ஆரம்பப் பாடசாலை






**மாணவர்களே!**

நீங்களும்
உங்கள்
கைவண்ணங்கள்,
ஆக்கங்களை
அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

ந.ரக்ஷகா
தரம் - 4B
யா/ சுண்டுகுளி மகளிர்
கல்லூரி






செ.அனுரகன்
தரம் - 4D
யா/ கொக்குவில் இந்து
ஆரம்பப் பாடசாலை



தீ.நயனிகா
யா/ சாவகச்சேரி இந்து
ஆரம்பப் பாடசாலை.



ஜெ.அஞ்ஜிதன்
தரம் - 4
யாழ்ப்பாணக்கல்லூரி



கி.அனுராங்கன்
தரம் 06
யா/கோண்டாவில்
இராமகிருஸ்ண மகா
வித்தியாலயம்



சொ.மித்ரேஷ்
தரம் - 10F
யாழ்.இந்துக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பூகோள வெப்பமடைதலைத் தடுப்பதில்

# COP 29 காலநிலை மகாநாட்டின் தோல்வி

கலாநிதி. எஸ். அன்ரனி நோர்பேட்
முன்னாள் சிரேஷ்ட பேராசிரியர்
கொழும்புப் பல்கலைக்கழகம்

**ஆக்டிக் பிரதேசம்**

ஆக்டிக் துந்திராவில் ஆயிரக்கணக்கான வருடங்களாக காபன் சேமிக்கப்பட்டு வந்துள்ளது. இன்று கோளத்தினை வெப்பப்படுத்தும் மாசாக்கியாக அது மாறியுள்ளது. காட்டுத் தீயின் அதிகரிப்பினால் ஏற்படும் சூடான வெப்பநிலையின் காரணமாக நீண்டகாலமாக உறைநிலையிலிருந்த தரைகள் உருகத்தொடங்கியுள்ளன. இதனால் இப்பகுதியிலிருந்து பச்சைவீட்டு வாயுக்கள் வளிமண்டலத்துக்கு வெளியிடப்படுகின்றன. ஆக்டிக் சூழற்தொகுதியில் ஏற்பட்டிருக்கும் சடுதியான இந்த நகர்வு பூகோள காலநிலையில் தாக்கங்களை ஏற்படுத்தும். துந்திராவில் அதிகரித்துவரும் காட்டுத்தீ மற்றும் வெப்பமடைதல் காரணமாக சேமிப்பிலிருக்கும் அதிகளவான காபன் வெளியேற்றப்படுகின்றது. இத்தகைய வெப்பமடைதலின் காரணமாக பூகோள கடல் மட்ட உயர்வு, வானிலைப் பாங்குகளில் குழப்பங்கள், வன விலங்குகளின் இடப்பெயர்வு மற்றும் மனிதனால் தூண்டப்படும் காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள் எல்லாம் சுவட்டு எரிபொருள்களின் எரிவினாலேயே தூண்டப்படுகின்றன. ஆக்டிக் பகுதிகளில் எண்ணெய் அகழ்வையும், துளையிடுதலையும் அதிகரிக்க விரும்புவதாகக் குறிப்பிடும் டொனால்ட் ட்ரம்ப் காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கான அரசாங்க நடவடிக்கைகளில் ஆர்வமற்றவராகவே உள்ளார்.

வட அமெரிக்காவின் நிரந்தர உறைபனிப் பகுதிகளில் காட்டுத்தீயின் அதிகரிப்பு பல வருடங்களாக ஏற்பட்டுவருகின்றது. 2023 இல் இருந்து முனைவுப் பகுதியின் காட்டுத் தீயில் இருந்து ஏற்பட்டுள்ள வெளியேற்றங்கள் சராசரியாக வருடாந்தம் 207 மில்லியன் தொன் காபன்களாகும். ஆர்ஜென்ரீனா, ஒஸ்திரியா போன்ற சில கைத்தொழில் நாடுகளின் வருடாந்த காபனீரொட்சைட் வெளியேற்றங்களைவிட இது அதிகமாகக் காணப்படுகின்றது. உலகின் காட்டுப் பகுதிகளிலுள்ள சகல மரங்களிலும் உள்ள காபனை விட அதிகமாக நிரந்தர உறைபனிப் படலங்களில் காபன் காணப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது ஏறக்குறைய 1.5 ரில்லியன் தொன் ஆகும். எனவே இந்த உறைபனி உருகும்போது உல... ...ந்தரத்தில் காலநிலை மாற்றத்துக்குப் பங்களிக்கும் பச்சைவீட்டு வாயுக்களின் வெளியேற்றத்துக்கான பாரிய மூலமாக அமைந்துவிடும். நிரந்தர உறைநிலைப் பகுதிகளின் வெப்பநிலை அதிகரிக்கின்றது. இதனால் உறைநிலையில் இருந்த மண் உருகுநிலையை அடையும்போது தரையில் சூடு அதிகரித்து மண்ணிலுள்ள நுண்ணங்கிகள் செயற்படத் தொடங்கும். அத்துடன் புதிதாகக் கிடைக்கக்கூடிய காபனை நுகர்கின்றதனால் வளிமண்டலத்துக்கு மெதேன், காபனீரொட்சைட் ஆக வெளிவிடப்படுகின்றது.

5

கிறீன்லாந்தில் ஏறக்குறைய 22 - 77 பில்லியன் தொன் பனிப்படலம் கடந்த வருடத்தில் உருகலினால் இழக்கப்பட்டுள்ளது. இங்குள்ள பனிப்படலம் 2 மைல் ஆழம் கொண்டது. இப்பனியின் உருகல் பூகோளக் கடல்மட்ட உயர்வுக்கு இரண்டாவது பெரிய பங்களிப்பை வழங்குகின்றது. முதலாவது பங்களிப்பு நீரின் வெப்ப விரிவாக்கத்தினால் ஏற்படுகின்றது. ஆக்டிக் பகுதிகளில் விலங்குகள் நீண்டதூரம் பிரயாணம் செய்வதில்லை. ஆக்டிக்கில் மாரி காலம் ஏற்படும்போது ஈரநிலமை காணப்படும். இதனால் மழைநீர் உறைநிலையடைந்து பனியின் மேல் பனிப்படல ஓடாக உருவாகுவதால் துருவமான்களுக்கான உணவு குறைவாகவே கிடைக்கின்றது. சிறிய தாவரங்கள் பனிப் படலத்தினால் மூடப்படுவதனால் அதனூடாக உண்ண முடிவதில்லை. கடந்த பல வருடங்களில் தீவின் துருவ மான்களின் எண்ணிக்கையில் 65 வீதம் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இவ்வாறு காலத்துக்குக் காலம் இடம்பெற்றுவந்த உச்சி மாநாடுகளினால் மனிதனால் தூண்டப்படும் காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. வெள்ளப்பெருக்குகளையும், வெப்ப அலைகளையும் கட்டுப்படுத்த அரசியல்வாதிகள் தவறிவிட்டனர் என விஞ்ஞானிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

பக்கு நகரத்தில் இடம்பெற்ற (2024) மகாநாட்டுக்கு முன்னர் 2021 நவம்பரில் ஐக்கிய இராச்சியத்தின் அனுசரணையுடன் கிளாஸ்கோ பசுமை நகரில் COP 26 உச்சி மகாநாடு இடம்பெற்றது. இதில் நிலக்கரி, கார்கள், பணம், மரங்கள் ஆகிய நான்கு விடயங்கள் கருத்திற்கொள்ளப்பட்டன. புதிதாக நிலக்கரி வெப்ப அனல் மின்நிலையங்களைக் கட்டமைக்கப் போவதில்லை என உலக வெளியேற்றத்தில் 28 வீதத்தைக் கொண்டிருக்கும் சீனா அம்மகாநாட்டில் குறிப்பிட்டது. 2040 இல் உலகின் பூச்சிய வெளியேற்றம் கொண்ட வாகனங்கள், ஒவ்வொரு நாடும் 2030 இல் காபன் வெளியேற்றத்தினை 30 வீதமாகக் குறைத்தல், இந்நூற்றாண்டின் மத்தியில் தேறிய பூச்சிய நிலையை அல்லது காபன் நடுநிலையை அடைதல், 2040 இல் வளர்முக நாடுகளும் 2030 இல் விருத்தியடைந்த நாடுகளும் நிலக்கரி அனல் மின்சக்திப் பயன்பாட்டை முடிவுறுத்துதல், 2030 இல் உயிர்ப்பல்வகைமையை மீளவும் முன்னர் இருந்த நிலைக்குக் கொண்டுவருதல், பூகோளச் சராசரி வெப்பநிலையை 1.5 பாகை செல்சியஸ் ஆகக் குறைத்தல் என கவர்ச்சிகரமான இலக்குகள் மகாநாட்டில் முன்வைக்கப்பட்டிருந்தாலும் அவை நிறைவேற்றப்பட்டதாகத் தெரியவில்லை. இதற்கான முடிவுகளை எட்டுவதற்குக் காத்திரமான அரசியல் ஈடுபாடு தேவைப்படுகின்றது.

### வெப்ப வெடிப்புகளும் தீச்சுவாலைகளும்

ஞாயிற்றில் வாயுக்கள் காணப்படுவதால் தொடர்ந்து எரிந்துகொண்டிருக்கிறது. காலத்துக்குக் காலம் ஞாயிற்றின் மேற்பகுதியில் பெரிய வெடிப்புக்கள் ஏற்பட்டு வெப்பம் வெளியேற்றப்படும். ஞாயிற்றில் வாயுக்கள் அசையும்போது மிகச் சக்திவாய்ந்த புலங்களைப் பிறப்பாக்கம் செய்யும். இந்தக் காந்தப்புலம் ஒரு வட்டத்தினூடாக இயங்கும். இது "ஞாயிற்று வட்டம்"எனப்படும். ஞாயிற்றின் வடக்கு மற்றும் தெற்கு முனைவுகள் இதன் நிலைமாற்றிகளாகக் காணப்படும். இது 11 வருட வட்டத்தைக் கொண்டது. சூரியனிலிருந்து மின்காந்த சக்தி 22 ஆண்டுகளுக்கொருமுறை அதிகளவில் வெளிப்படும். ஆனால் 11 ஆண்டுகளுக்கொருமுறை மின் காந்தப்புயல் ஏற்படும். மின்காந்தப் புயல்கள் ஞாயிற்றுக் கதிர்வீச்சில் மாற்றங்களை ஏற்படுத்துவதுடன் மின்னல் தாக்குவது போன்று பூமியைத் தாக்கும் என விஞ்ஞானிகள் குறிப்பிட்டனர்.

1859 இல் இடம்பெற்ற தீச்சுவாலை பூமியைத் தாக்கிய முதலாவது நிகழ்வாகும். இது "ஹரிங்டன் நிகழ்வு" என அழைக்கப்பட்டது. பூகோள தொலைத்தொடர்புகளில் குழப்பங்கள் ஏற்பட்டதுடன் பணியாளர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. 1974 இல் ஏற்பட்ட பாரிய தீச்சுவாலையினால் மார்ச் 13 இல் கனடாவில் மின்சாரம் முற்றாகத் தடைப்பட்டது. நியு ஜேர்சியிலுள்ள சில மின்மாற்றிகள் உருகிவிட்டன. 2022 பெப்ரவரியில் காந்தப் புயலினால் 40 ஸ்ரார்லிங் செய்மதிகள் அழிக்கப்பட்டன. ஏறக்குறைய 115 சூரியப் புள்ளிகளைக் கொண்ட சூரியசக்தியின் உச்ச அளவு 2025 யூலையில் இடம்பெறும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. தற்பொழுது மாரி காலம் நிகழும்போது கூட நாளாந்த வெப்பம் மிக உயர்வாக இருப்பதனை எம்மால் அவதானிக்கமுடிகின்றது. இதற்கு வளிமண்டலத்தில் ஏற்படும் வெப்ப அதிகரிப்பே காரணமாகும்.

மனித நடவடிக்கைகளுக்கு அப்பால் சூரியனின் வெப்ப வெடிப்புகளும் தீச்சுவாலைகளும் காரணமாக வளிமண்டலத்தில் பரவும் மின்காந்தப் புயல்களினால் வளி வெப்பநிலை அதிகரிக்கின்றது. 2023 இல் ஏற்பட்ட வெப்பநிலை அதிகரிப்புக்கு எல்நினோ தோற்றப்பாடே பகுதியளவில் பொறுப்பாக இருந்தாலும் காலநிலை மாற்றமே அடிப்படை ஊக்கியாக இருந்து எல்நினோ தாக்கங்களைத் தூண்டி சமுத்திர வெப்பநிலையைப் புதிய கட்டத்துக்கு நகர்த்தியது. சமுத்திரங்கள் தொடர்ச்சியாக வெப்பமடைவதினால் புவியின் காலநிலையை ஒழுங்குபடுத்துவதற்கான அவற்றின் திறனில் இணக்கமின்மை ஏற்படுகின்றது. கிழக்கு ஆபிரிக்காவிலும், அரேபியாக் குடாநாட்டிலும் ஏற்பட்ட மோசமான மழைவீழ்ச்சி, வெள்ளப்பெருக்கு, உயிர்ச்சேதங்கள், பொருளாதார மற்றும் விவசாய இழப்புகள் ஆசியாவின் பெரும்பகுதியைத் தாக்கிய செறிவான வெப்பநிலையினால் ஏற்பட்ட கடுமையான சுகாதார அச்சுறுத்தல்கள் என்பனயாவும் பூகோள வெப்பமடைதலினால் ஏற்பட்டுவரும் வளிமண்டலக் குழப்பங்களாகும்.

பூகோள வெப்பமடைதலின் காரணமாக சமுத்திர வெப்பநிலைகளில் ஏற்படும் அதிகரிப்பு எல்நினோ, லாநினா தோற்றப்பாட்டில் சிக்கலான நிகழ்வுகளை ஏற்படுத்திவருகின்றது. பசுபிக்சமுத்திரம் மிகப்பெரியளவில் ஆழமான நீரினைக் கொண்டமைந்துள்ளதினால் பூகோளம் முழுவதும் குழப்பமான காலநிலைப் பாங்குகளைத் தோற்றுவிக்கின்றது. வங்காள விரிகுடாவில் அடிக்கடி தாழமுக்கங்கள் தோன்றி அனர்த்தங்களை ஏற்படுத்துவதற்கும் இதுவே காரணமாகும். எனவே எதிர்காலத்தில் ஏற்படும் புயல், வெள்ளப்பெருக்கு, வரட்சி போன்ற நிகழ்வுகள் மனித வாழ்க்கையுடன் தொடர்ந்து ஒன்றிணைந்ததாகவே இருக்கப்போகின்றது. நாடுகளிடையே நிலவும் யுத்தங்கள் மற்றும் முரண்பாடுகள் காரணமாக காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கான COP மகாநாடுகளின் நம்பிக்கை இழக்கப்பட்டுவிடும் என்பதில் சந்தேகமில்லை.

(வளரும்)

# அதிர்ஷ்டத்தால் தப்பிய கைதி!



*(சென்றவாரத் தொடர்ச்சி)*

கே.வி.தவராசா

**மீளப்பெறப்பட்ட மனு**

இந்த வழக்கு 09.03.2012 ஆம் திகதி நீதிமன்றத்தினால் மேலதிக விளக்கத்துக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. அந்த வேளையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் அரசியல்கைதியான தியாகராஜா மோகனரூபனை பயங்கரவாதத் தடுப்புப்பிரிவினரிடம் ஒப்படைக்கும்படி மேல் நீதிமன்றில் தாக்கல்செய்த நகர்த்தல் பத்திரத்தை வாபஸ் பெற்றுக்கொள்வதாக அரச சட்டத்தரணி நீதிமன்றுக்கு அறிவித்தார். இதனையடுத்து அரச சட்டத்தரணியால் தாக்கல் செய்யப்பட்ட மனுவைத் தள்ளுபடி செய்த மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ச, வழக்கு விசாரணையை 2012 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். அத்துடன் எதிராளியை மீண்டும் விளக்கமறியலுக்குக் கொண்டுசெல்லும்படியும் சிறை அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்தார்.

இந்த மனு மேல் நீதிமன்றில் வாதப்பிரதிவாதங்களுக்காக அழைக்கப்பட்ட மூன்று தினங்களிலும் மோகனரூபனைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுசென்றுவிடலாம் என்ற நம்பிக்கையில் நீதிமன்றுக்குச் சமுகமளித்திருந்த பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரியும் மற்றும் மூன்று அதிகாரிகளும் நீதிமன்றின் உத்தரவையடுத்து மிகவும் ஏமாற்றத்துடன் நீதிமன்றத்தை விட்டு வெளியேறினர். இந்த மனு மீதான விசாரணை நடைபெறுகையில் நீதிமன்றம் வந்திருந்த ஊடகவியலாளர் ஒருவரிடம்

"நாங்கள் எமது கட்டுப்பாட்டுக்குள் மோகனரூபனைக் கொண்டுசெல்லலாம் என்றே இங்கே வந்தோம். ஆனால் சட்டத்தரணி தவராசா நாங்கள் முன்நகர்த்தல் மனு தாக்கல் செய்த அன்றையதினம் நீதிமன்றில் சமுகமளிப்பார் என்பதை நாங்கள் எதிர்பார்க்கவில்லை. அவர் வந்ததால் அதிர்ஷடவசமாக மோகனரூபன் தப்பிவிட்டான் "என்று பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் கூறியுள்ளனர்.

அரச சட்டத்தரணியினால் முன்நகர்த்தல் மனு தாக்கல் செய்யப்பட்ட தினத்தன்று நான் நீதிமன்றில் தெஹிவளைப் பொலிஸ் நிலையப் புலனாய்வு அதிகாரி சுட்டுக் கொலைசெய்யப்பட்ட வழக்கின் மேலதிக விளக்கத்துக்காக நீதிமன்றில் பிரசன்னமாகியிருந்ததினாலேயே, பொலிஸாரின் சூழ்ச்சியை முறியடிக்கக் கூடியதாகவிருந்தது . அதிர்ஷ்டவசமாக மோகனரூபன் ,பொலிஸார் விரித்த வலையிலிருந்து தப்பிக்கொண்டார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் உளவுத்துறையைச் சார்ந்தவர்களும், கொழும்பில் உளவு பார்த்தவர்களுமாக சில தமிழ் அரசியல்கைதிகள் பாதுகாப்புச் செயலாளரின் உத்தரவின் பிரகாரம் மேல்நீதிமன்றினால் பயங்கரவாதத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுத் தற்பொழுது பூசா தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டு வழக்கு விசாரணை தினத்தன்று நீதிமன்றம் அழைத்துவரப்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அரசியல்கைதியான தியாகராஜா மோகனரூபனை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கும்படி மேல் நீதிமன்றில் தாக்கல் செய்த மனுவை வாபஸ் பெற்றுக்கொள்வதாக அரச சட்டத்தரணி நீதிமன்றிற்கு அறிவித்தமைக்கு முக்கியமான காரணம் ஒன்றுண்டு. அரசதரப்பினதும் எதிராளித்தரப்பினதும் வாதப் பிரதிவாதங்களை செவிமடுத்த மேல் நீதிமன்ற நீதிபதி, ஏற்கனவே உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு அமைய அரசதரப்பு வேண்டுகோளை நிராகரித்திருந்தார். இதனால் அந்தத் கட்டளையின் பின்னர் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட மற்றைய அரசியல் கைதிகளை பூசா தடுப்பு முகாமிற்கு கொண்டுசெல்வதில்சிக்கல் நிலை ஏற்படும் . எனவே இதனைத் தவிர்க்கவே நகர்த்தல் மனுவை அரச சட்டத்தரணி கைவாங்கிக்கொண்டார்.




இறுதியில், 2008ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்ட மோகனரூபன் 2015 ஆம் ஆண்டு விடுதலை செய்யப்பட்டார்.

*(அடுத்த வழக்கு அடுத்த வாரம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கப் பெண்பாற் கவிஞர்களின் பார்வையில் தமிழர் பண்பாடும் வாழ்வியலும் – ஓர் நோக்கு

பேராசிரியர் சிவேசன் சிவானந்தமூர்த்தி
சந்தைப்படுத்தல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



## அறிமுகம்

இற்றைக்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வாழ்க்கைக்கான வாழ்வியல் இலக்கணத்தினை வகுத்தும், வகுத்ததன்படி வாழ்ந்த கட்டமைக்கப்பட்ட பண்பாட்டு நாகரிகங்களினை உடைய ஓர் உன்னதமான இனமாக தமிழ் இனம் நோக்கப்படுவதற்கும், ஆராதிக்கப்படுவதற்கும் பண்டத்தமிழ் இலக்கியங்களின் செழிப்பும், கருத்துச் செறிவும், அவை வழியாக இயம்பப்படும் வாழ்வியல் நடைமுறைகளும் முதன்மைக் காரணங்களாக அமைந்துள்ளன. பண்டைய தமிழர்கள் அக மற்றும் புற வாழ்வியல் பற்றிய தெளிவான திடமான சிந்தனைப் புரிதலினையும் கருத்தியல் உருவாக்கத்தினையும் கொண்டிருந்தனர் என்பதற்கு அவர்களுடைய படைப்புகள் சான்றுகளாக அமைகின்றன. இலக்கியங்களின் வாயிலாக மக்களின் பண்பாடு, நாகரிகம், வாழ்க்கை முறை, அறம்,

வீரம், அறிவு, அரசு, ஆட்சிமுறை, போர், காதல், அன்பு, பணிவு, துணிவு போன்றவற்றினை அறிந்துகொள்ளமுடிகின்றது. இலியாட், ஒடிசி போன்ற பழமையான ஓமரின் கிரேக்க இலக்கியங்கள் போன்று சங்க இலக்கியங்களும் மிகத் தொன்மையானவையாகவும் புராதன தமிழர்களின் அறிவுசார் புலமையினை அறிந்துகொள்வதற்கு ஆதாரசுருதியாகவும் அடையாளமாகவும் அமைந்துள்ளன. எனவே இவை காலம் கடந்தும் போற்றுதலுக்கு உரியனவாகவும் ஆய்வுகளுக்குத் தொடர்ந்து உட்படுத்தப்படுபவைகளாகவும் காணப்படுகின்றன. "பண்டைய தமிழர் பண்பாடு ஓர் புதிய அணுகுமுறை" என்ற படைப்பில் பேராசிரியர் பாலசுந்தரம் தமிழர்களின் வரலாறு, பண்பாட்டுக் கோலங்களினைப் புனைகின்றபோது உசாத்துணைகளாக தமிழ் இலக்கியங்கள் உரம் சேர்க்கின்றன என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும், வரலாறு என்பது கடந்தகால நிகழ்வுகளின் தொகுப்பு ஆகும். வரலாறுகள் மீள்வாசிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டியவையே. மீள்வாசிப்புக்கு உட்படுத்தப்படுகின்றபோது பண்டைய வரலாற்றினை நவீனகால சிந்தனை மரபுகளுடன் ஒப்பிடுகையில் முரண்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படவே செய்கின்றன. அவை தவிர்க்கமுடியாதவையும்கூட. அறிவியல் உலகில் புதிய கருத்துகளின் தோற்றங்களும், மரபுவழியான கருத்துக்கள் மறுதலிக்கபடுவதும் தவிர்க்கமுடியாதவையும் தேவைப்பாடு உடையவையும்கூட. அதாவது அறிவியல் ரீதியான ஆரோக்கியமான கருத்தியல் முரண்நிலைகளே புதிய கருத்துகளின் தோற்றத்துக்கு அடிப்படையானவையாக அமைகின்றன என்பது மறுக்கப்படாத உண்மையே.

சங்ககாலத்தினைக் கால அடிப்படையில் வரையறை செய்தல் என்பது அறிவியல் வளர்ந்த இவ்வுலகில் சற்றுக் கடினம் என்றாலும் சங்க இலக்கியங்கள் எவை என்பதைத் தமிழ் ஆய்ந்த நல்லறிஞர்கள் வரையறை செய்துள்ளார்கள். பேராசிரியர் வித்தியானந்தன் எழுதிய "தமிழர் சால்பு" என்ற நூலில் சங்க இலக்கியங்கள் குறித்த பார்வையினை திராவிட இனத்தின் வளர்ச்சியும் எழுச்சியும் என்ற நோக்கில் ஆய்வு செய்யலாம் என்கின்றார். (வித்தியானந்தன்,1982). மேலும் இத்தகையதோர் கருத்து பேராசிரியர் அருணாச்சலம் எழுதிய "தமிழ் இசை இலக்கிய வரலாறு" என்ற படைப்பிலும் பிரதிபலிப்பதை அவதானிக்கலாம்.

இக்கட்டுரையானது சங்க இலக்கியத்தில் உள்வாங்கப்பட்ட பெண்பாற் புலவர்களினால் எழுதப்பட்ட பாடல்களின் வாயிலாக தமிழர் பண்பாட்டுக் கோலங்கள் பற்றி ஆய்வு செய்வதாக அமைந்துள்ளது. இக்கட்டுரையில் சங்க இலக்கியங்கள், சங்ககாலப் பெண்பாற் கவிஞர்களும் கவிதைகளும், சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் பார்வையில் தமிழர் வாழ்வியல், இல்லறம், விருந்தோம்பல், காதலும் காமமும், பெண்களும் உறவுமுறைகளும், போரும் வீரமும் போன்ற முக்கியமான விடயங்கள் ஆராயப்படுகின்றன.

## சங்க இலக்கியங்கள்

தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என மூன்று சங்கங்கள் வைத்து தமிழ் வளர்த்த முன்னோர்கள் தாம் வாழ்ந்த காலத்துக்குரிய தமிழ் மக்களின் வாழ்க்கை முறை, நாகரிகம், மற்றும் பண்பாட்டினைப் பிரதிபலிப்பதாக எழுதிய இலக்கியப்படைப்புகள் இயற்கைச் சீற்றத்தினாலும், முறையான பராமரிப்புகள் இல்லாமையினாலும் கறையான் போன்றவற்றிற்கு இரையானவை போக மீதமாகவுள்ளவற்றினை எட்டுத்தொகை நூல்களாகவும் பத்துப்பாட்டு நூல்களாகவும் வகுத்தனர். எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு நூல்களினைச் சேர்த்து பதினெண் மேற்கணக்கு நூல்கள் என அழைப்பர். இவற்றில் முதலில் தொகுக்கப்பட்டது எட்டுத்தொகை நூல்கள் ஆகும்.

கலித்தொகை, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, பரிபாடல், ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து மற்றும் புறநானூறு என்பனவற்றினை எட்டுத்தொகை நூல்கள் என்பர். இவற்றில் பதிற்றுப்பத்து மற்றும் புறநானூறு என்பன புறப்பொருள் சார்ந்தவையாகவும் ஏனைய ஆறு நூல்களும் அகப்பொருள் சார்ந்தவையாகவும் உள்ளன. பத்துப்பாட்டு நூல் தொகுப்பில் திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப் படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் போன்ற நூல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

சங்க இலக்கியங்களில் மக்கள் வாழ்க்கை பாடுபொருளாகக் கொள்ளப்பட்டுள்ளது. (இட்சுமணன், 2007) இத்தகைய மரபின் வழியே அகம், புறம் எனப்பட்ட திணைகள் தோன்றின. அகப்பொருள் என்பது ஆண், பெண் உறவினையும் புறம் என்பது போர், வீரம், கல்வி போன்றவற்றினையும் குறிக்கின்றது.

(தொடரும்)

# ஊர்ப்புதினம்

பாகம் 3

இராகவன்

நவண்ணா வெட்டின மண்ணை நார்ப்பெட்டிக்குள்ளதான் போட்டவன். "பெட்டிக்குள்ளையிருக்கிற மண்ணைத் தூக்கிக்கொண்டு விளக்கு வைச்சிருக்கிற இடத்துக்கு வாங்கோ!" எண்டு சொல்லிக்கொண்டு அண்ணா முன்னால நடக்க நவண்ணா நார்ப்பெட்டியைத் தூக்கிக்கொண்டு பின்னால நடந்தான். நாங்களெல்லாம் அவனுக்குப் பின்னால போனம். "இதிலை மண்ணக் கொட்டுங்கோ!" எண்டு அண்ணா சொல்ல அதில நவண்ணா நார்ப்பெட்டியைக் கவிட்டுக்கொட்டினான் . அந்த இடத்திலதான் நாங்கள் இதுக்கு முதல் மண்ணைக் குவிச்சு உருத்தினாங்கள். மண்ணைக்கொட்டினாப்பிறகு அண்ணாவின் மறுகட்டளைக்காக அவர் முகத்தை எல்லாரும் பார்த்துக்கொண்டிருந்தோம். "நான் இதிலே கைதொடமாட்டன். வீட்டுக்காரர்தான் இதில கைதொடோணும், பிறகு தட்டித்தவறி என்ர கையில வினைப்பகுதி அகப்பட்டால் நான்தான் வைச்சிட்டு எடுக்கிறன் எண்டொரு சந்தேகம் உங்களுக்கு அடிமனதில் வரத்தான் செய்யும். அதனால நான் ஒதுங்கியிருக்கப்போறன், நவம் மாஸ்ரரும் இஞ்சால வாங்கோ! " எண்டு அண்ணா கட்டளையிட்டார்.

அந்தக்கையோட அம்மாவும் அண்ணராக்களும் மண்ணைச் சுத்தியிருந்து உருத்தத்தொடங்கிச்சினம். ஒரு பத்து நிமிசம் உருத்தினகையோடஅம்மாவின்ர கையில வினைப்பகுதி தட்டுப்பட்டது. அம்மா அதையெடுத்து அண்ணாக்குக் காட்ட அவரதை வாங்கிப் பாத்திட்டு "இதுதான் சாமான். இனி மண்ணை உருத்த வேண்டாம், வெட்டின இடத்தில கொண்டேக் கொட்டுங்கோ! " எண்டார். அது பெரிசாயொண்டுமில்லை. சின்னவிரலின்ர அரைவாசி வரும். ஒரு தகட்டுச்சுருள் பாக்க அட்சரக்கூடு மாதிரியிருக்கும். அண்ணா அதை மெல்ல விரிச்சார். அதுக்குள்ள விபூதி கணக்கா ஏதோ இருந்திச்சுது. "சுடலைச்சாம்பலை வைச்சுச் செய்திருக்கு. இதை வீட்டில வைச்சிருக்கிறது வீட்டுக்குக் கூடாது என்னட்டையே இருக்கட்டும். இனி மேல் வீட்டுக்குக் காவல் செய்யவேணும். ஆருமொரு நல்லாளைப் பிடிச்சு அதைச் செய்வியுங்கோ " எண்டு சொல்லிப்போட்டு அண்ணா வெளிக்கிட்டார். அப்பதான் நவண்ணாவின்ர தாய்க்காரி பத்தினிப்பிள்ளை வந்து சேர்ந்தா. வெளிக்கிட்ட அண்ணாவை மறிச்சு "எங்கை எடுத்த வினைப்பகுதியைக் காட்டப்பு பாப்பம் ?" எண்டு கேட்டா. அவரும் சேர்ட் பொக்கற்றுக்குள்ளால அதை எடுத்துக்குடுத்தார் . அதை வாங்கி அவா வடிவாப் பாத்திட்டு "இதை நீ வைச்சிருந்து என்ன செய்யப்போறாய் ?" எண்டு கேட்டா. "அதை நான் வைச்சிருந்து என்ன கோட்டை கட்டிறதே? எங்கையும் ஆத்தில கடல்ல வீசுறதுதான்" எண்டு அவர் சொன்னார். "அப்ப இது எங்களிட்ட இருக்கட்டும். நாங்கள் ஆத்தில கடல்ல வீசமாட்டமே? "எண்டவா சொன்னா. "அதுக்கென்ன நீங்களே வச்சிருந்து என்னெண்டாலுஞ் செய்யுங்கோ" எண்டிட்டு அவர் வெளிக்கிட அம்மா இருநூற்றைம்பது ரூபாவைக் கொணர்ந்து அவரிட்டக் குடுக்க அதை வாங்கிப் பொக்கற்றுக்குள்ள போட்டுக்கொண்டு சைக்கிளேறிப் போட்டார். அப்ப இருநூற்றைம்பது ரூபா பெரியகாசு. இண்டைய இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவுக்குச் சமன். அண்ணா சைக்கிளேறிப் போனாப்போல நவண்ணாவின்ர தாய்க்காரி பத்தினிப்பிள்ளை "உனக்கு மூளையிருக்கே? செய்வினை எடுத்தால் அதை எடுத்தவனிட்டையே குடுக்கிறதே? அவன் அதை வைச்சு ஈஸியா இன்னொரு செய்வினைக்கு வழிகோலிப்போடுவான் எல்லே?" என அம்மாட்டச் சொன்னா. "எனக்கு உதைப் பற்றி ஒரு இழவுந் தெரியாதெணை. நான் என்ன செய்யிறது?" எண்டு அம்மா பெருமூச்சு விட்டா. "இந்தா இதைக் கொண்டே உவன் சரவணனிட்டக்காட்டி அவன் சொல்லுறபடி செய் " எண்டு அந்த வினைப்பகுதியை அம்மாட்ட அவா குடுத்தா.

(தொடரும்)

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதினை

மகேசன் கஜேந்திரன்

சஞ்சீவி சிறுகதை



நேரம் நள்ளிரவு 12 மணி.

ரெலிபோன் மணி அலறியது.

கர்ணிகாவின் வகுப்பாசிரியைதான் அழைப்பை எடுத்திருந்தார்.

கர்ணிகா நல்ல நித்திரை.

கருணாகரனும் அருணாவதியும் போட்ட சத்தத்தில் சின்னவன் மிருதுளனும் மிரண்டு எழுந்துவிட்டான்....

வீடு நள்ளிரவிலும் மிகையாகத்தான் அமர்க்களப்பட்டது.

கர்ணிகா கண்களைப் பிசைந்தபடி எழுந்துவிட்டாள்.

பாவம் பிள்ளை.. எதுவுமே புரிந்துகொள்ளமுடியாதவளாக பேந்தப் பேந்த முழுசிக்கொண்டிருந்தாள் தலையைச் சொறிந்த படி.

கருணாகரன் மூத்தவள் கர்ணிகாவைத் தோளில் தூக்கிவைத்துத் துள்ளிக்கொண்டிருந்தான்

மனைவி அருணாவதி ஓடிப்போய் 'பிறிட்ஜை'த் திறந்து ஐஸ்கிரீம் டப்பாவைத் தூக்கிவந்து கர்ணிகாவின் வாய்க்குள் திணித்து முத்தத்தால் முகம் முழுக்க மொத்திக்கொள்ளவும்..பிள்ளை தகப்பனின் தலைமீது வாந்தி எடுக்கவும்.... சின்னவன் மிருதுளனுக்கும் அடிவயிறு கலக்கத் தொடங்கியது. தனக்கும் இரண்டு வருஷத்துக்குப் பிறகு இதுதான் நிலைமையென.

பின்வீடு..முன்வீடு...பக்கத்துவீடு..உறவினர்கள் வீடுகள்.. குறிப்பாக சில சக உத்தியோகத்தர்கள் வீடென..

தொலைபேசி அழைப்புகள் பறந்தன.

"கர்ணிகா ஸ்கொலஷிப் சோதனையில் பாஸ் பண்ணீட்டாள்.

"எங்கடை கர்ணிகா ஸ்கொலஷிப் பாஸ்"

▣ ▣ ▣ ▣ ▣

மூத்தவள் கர்ணிகாவினது அழகான முகத்தில் எள்ளைவிடச் சின்னதாகத்தான் மகிழ்ச்சி நிலவியதை 8 வயதுத் தம்பி மிருதுளனும் புரிந்துகொண்டான். தாயும் தகப்பனும் தான் ஏதோ தங்களுக்கு தனிநாடு கிடைச்சிட்டுது என்ற செய்தியைக் கேட்டமாதிரி புளுகப்பட்டுக்கொண்டிருந்தார்கள்.

"என்ரை குஞ்சைப் படுக்க விடுங்கோப்பா விடிஞ்சதும் பாப்போம்.".. என்றபடி அவனின் தோளில் இருந்த பிள்ளையைக் கட்டிலில் கிடத்தி சின்னவனையும் சேர்த்துப் போர்வைக்குள் நுழைத்துக்கொண்டாள் அருணாவதி.

" என்னப்பா அருணா மூட்" மாறுகிறமாதிரி இருக்கு?" என்றான் கருணா.

" உவள் சுகிதம்...எங்கடை ஓஎஸ் யின்டை மகளுக்கு182 ஆம்.."என்று புறுபுறுத்தபடி படுக்கைக்குச் சென்றாள் அருணா.

▣ ▣ ▣ ▣ ▣

பிள்ளை கர்ணிகாவுக்குத்தான் தெரியும்..தனக்கு கடைசி 3 மாதமும் நடந்த 'கொலைஷிப்'வதை பற்றி.

அந்தப் பத்துவயதுக் குஞ்சு போர்வைக்குள் தேம்பித் தேம்பி விசும்புவதை சின்னவன் மட்டுமே பார்த்துக் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தான்.

▣ ▣ ▣ ▣ ▣

பிள்ளையின் தகப்பன் கருணாகரன் கல்விப் புலத்தில் கடமையாற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்.

தாய் அருணாவதி அரசதிணைக்களம் ஒன்றில் கடமையாற்றும் அபிவிருத்தி அலுவலர்.

இருவரும் பல்கலைக்கழகம் சென்றவர்கள்தான். கல்வி உளவியலில் விசேட பட்டங்கள் வேறு இருவருக்கும்.

தமது பிள்ளை ஸ்கொலர்ஷிப் பரீட்சையில் சித்திபெறாவிட்டால் தங்கள் தன்மானத்தை மற்றையவர் பிள்ளைகளின் வெற்றிகள் சிதைத்துவிடுமோ என்கிற விசர்ப்புத்தி அவர்களுக்கு.

"சவாரிவண்டில்காரர்மாதிரி...காளைகளுடைய வாலை முறுக்கி ஊசித்தடியால் ஓங்கி அறையுறதும் பிறகு சவாரியிலை வெண்டபிறகுது காளைகளைத் தடவிக் கொஞ்சிப் படம் காட்டுகிறதுமெண்டு ஒருசில பெற்றோர் இருக்கினம்" என்று ஆற்றையோ அப்பு சொன்னதும் சரிபோலவே இருந்தது கருணாகரனுக்கு.

▣ ▣ ▣ ▣ ▣

இதேமாதிரித்தான்....சரியாக மூன்று மாதங்களுக்கு முன்பதாகவும் நள்ளிரவில் அல்லோலகல்லோலப்பட்டது இவர்களது வீடு.

அயல்வீடுகள் எல்லாம் "லைட்" டுகளைப் போட்டு அங்கலாய்த்தனர்.

கருணாகரனும் அருணாவதியும் வாக்குவாதங்களினால் சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள்.

கர்ணிகாவும்.. தம்பி மிருதுளனும் வீறிட்டு அழுத சத்தம் ஒழுங்கை முழுவதிலும் கேட்டுக்கொண்டிருந்தது.

கர்ணிகாவின் அம்மம்மாவும் பேரப்பிள்ளைய்யைக் கட்டிப்பிடித்துக்கொண்டு அழுதுகொண்டிருந்தார்.

"இஞ்சருங்கோப்பா... என்ரை அம்மாவைக் கூட்டிக்கொண்டு போய் மூண்டு மாதத்துக்கு முதியோர் இல்லத்திலை விட்டுவிடுங்கோ.

மூத்தவை எல்லாரும் கனடாவிலை தங்கடை பிள்ளைகளை வடிவாய் படிப்பிச்சுக் கரைசேர்த்துப் போட்டு இவாவை என்னட்டைத் தள்ளிப் போட்டுப் போட்டினம். இவாவாலைதான் கர்ணிகாவைப் படிப்பிக்க ஏலாமல் கிடக்குது. காலமை ஏழு மணி தொடக்கம் இரவு பன்னிரண்டு மணிவரை படி படியெண்டு பிள்ளையைப் பிழியுறமாம் . அவளும் நாங்கள் ஏசினாலும் அடிச்சாலும் அங்கையங்கை போய் அம்மம்மாவின்ரை அறைக்குள்ளை தஞ்சம் கேக்குறாள்.

அம்மாவும்..நாங்கள் அவளை வதைக்கினம் எண்டு அயல் முழுக்கச் சொல்லித் திரியிறா. ஒரு மூண்டு மாதம் தானிருக்கு ஸ்கொலஷிப் சோதனைக்கு. அதுவரைக்கும் முதியோர் இல்லத்தில இருக்கட்டும் . குறைசொல்லுறவையை நான் பார்த்துக்கொள்ளுறன். என்ரை அம்மாவுக்கும் ரென்சன் இருக்காது. பிள்ளையையும் "கோச்" பண்ணிப்போடலாம் " என்றாள் அருணாவதி .

▣ ▣ ▣ ▣ ▣

அப்பன் கருணாகரன் திகைத்தே போய்விட்டான்.

கர்ணிகாவும் மிருதுளனும் அழுத அழுகை அயலவர்களையும் தவிக்கவைத்தது. அன்று போன அம்மம்மாதான் மூன்று மாதமாகியும் இன்றுவரைக்கும் வீட்டுக்கே வரவில்லை.

..ரோசம் என்பது உறவு, வயது, பாசம், சோகம் எவற்றையும் கண்டுகொள்ளாதோ?.

▣ ▣ ▣ ▣ ▣

காலை புலர்ந்தது.

கருணாகரன் கேட்டான்....

" கர்ணிகாம்மா....கோயிலுக்கு எல்லாரும் போவமே? வரேக்கை பிள்ளைக்கு என்ன வேண்டிக் கொண்டு வருவம்?

என்ன வேண்டுமெண்டாலும் கேள். நாங்கள் வேண்டிக் தருவம்"

"எங்கடை சுட்டிபுரம் அம்மாளிட்டைப் போவமோ? இல்லாட்டி... அம்மாவின்ரை கண்ணகிபுரம் அம்மாளிட்டைப் போவமோ?'

,பிள்ளையின் பதில் பச்சைமட்டையாக பளீர் என்றது.

சின்னவனும் புளுகத்துடன் துள்ளிக்குதித்தான்.

" சுட்டிபுரமும் வேண்டாம். கண்ணகிபுரமும் வேண்டாம். முதியோர் இல்லம் போவம். எனக்கு அம்மம்மா வேணும். இனி அம்மம்மாதான் வேணும்.,"

அருணாவதி இஞ்சி தின்ற குரங்கு போலாகினாள்.

கருணாகர் ரெகுலராகப் பம்முவது போலத்தான் இப்பவும் பம்மினார். அருணாவதி அரற்றி விம்முவது தெரியாமல்.

வாகனம் முதியோர் இல்லத்துக்குப் பறக்கத் தொடங்கியது ■

## அதிவிவேக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுவார் என்று சத்தியலிங்கமும் சிவஞானமும் சொல்கிறார்கள் என்றால் யாரை நோவோம்? யாரிடத்தில் எடுத்துரைப்போம்?

அரசியல் காரணத்துக்காகச் சிறையிலடைக்கப்பட்டபின் விடுதலையானோரில் சிலருக்கு அன்றைய இளைஞர்கள் இரத்தத் திலகமிட்டு வரவேற்றனர். இவ்வாறு திலகமிடப்பட்டு வரவேற்கப்பட்டவர்களில் ஒருவர் மாவை அண்ணர். இந்த வரலாற்றை இந்தப் 18 பேருக்கும் எடுத்துரைக்க யார் முன்வருவார்?

"முதலில் கட்டளைகளை ஒழுங்காக நிறைவேற்றும் சிப்பாய்தான் பின்னர் ஆளுமையுள்ள கட்டளைத் தளபதியாக மிளிரமுடியும்" இது தலைவரின் வாக்கு. சம்பந்தன் ஐயா கட்சிக்குள் தொண்டனாக எப்போதும் இருந்திராத ஒருவரான சுமந்திரனை படிமுறையாக உள்ளூராட்சி, நாடாளுமன்றத் தேர்தல்களில் நிறுத்தாமல் நேரடியாகத் தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்றத்துக்கு அனுப்பினார். அன்றிலிருந்தே சுமந்திரன் தன்னை ஒரு குட்டி இளவரசனாகக் கற்பனைசெய்து ஆணையிட்டு வந்தார். அவர் வளர்ந்த சூழ்நிலையும் தமிழ்த்தேசியத்துக்கு எதிரானது. இன்று கட்சிக்குள் ஏற்பட்டுள்ள குழப்பங்களுக்கு அதுவே காரணம்.

ஒவ்வொருவரினதும் தேசியத்துக்கான பங்களிப்பின் பெறுமதி அது புரியப்பட்ட காலத்தைப் பொறுத்தே கணிப்பிடவேண்டும். மாவை அண்ணாவின் பங்களிப்பை சுமந்திரன் புரியாததன் விளைவே இன்றைய இழப்பு. சரி! கட்சியின் மரணத்தையாவது தடுக்க இனியாவது சி.வி.கே. முயல்வாரா? இல்லையேல் சுமந்திரனின் ஆணையை நிறைவேற்றும் சிப்பாயாகத்தான் தொடர்ந்தும் இருப்பாரா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org